www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 10 | செப்டம்பர் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 61

# ஜனாதிபதியும் பிரதமரும் தீர்வுக்கு முன்வருவார்களா?

அரசாங்கம் முன்வைத்துள்ள வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கான ஆலோசனை வரைபினை புலிகள் இயக்கம் பரிசீலித்து வருகிறது. பாரிசில் இடம் பெறும் கலந்தாலோசனைக்குப் பின் தமது மாற்றுத் திட்டயோசனைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப் போவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். அதன் பின் அது பற்றிய பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடாத்தப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.

இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு இலகுவில் நடைமுறைக்கு வந்து விடக் கூடிய ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில் பேரினவாத ஒடுக்கு முறையும் அதனை நியாயப்படுத்தும் சக்திகளும் நிறைந்த இந்த நாட்டில் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஒரு ஆரம்ப அடியெடுப்பாக நோக்கப்படும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பது பல சோதனைக் கட்டங்களை பாரிய சவால்களாக எதிர் நோக்கி நிற்கின்றது. இலங்கையின் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சியல் முறையின் கீழான அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் இத்தகைய முயற்சிகள் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்பட்டு தோற்றுப் போன அனுபவம்தான்.

மேற்படி சவால்களைக் கீழ்வருமாறு வரிசைப் படுத்தமுடியும்.

1. அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு முன்வைக்கும் திட்ட ஆலோசனை



களில் இணங்கிக் கொள்வது என்பது இலகுவில் அடையக் கூடிய இலக்காக இருக்க முடியாது. ஏனெனில் அரசாங்கம் உள்ளார்ந்த பேரினவாத நிலையில் இருந்து இறங்கும் என எதிர் பார்க்க முடியாத சூழலே நிலவுகின்றது.

2. அதேவேளை புலிகள் இயக்கத்தரப்பிலிருந்து முன்வைக்கப்பட இருக்கும் திட்ட ஆலோசனைகள் ஆகக் கூடிய கோரிக்கைகளைக் கொண்டதாக இருக்கும் என்பதால் அதனை அரசாங்கத்தரப்பு ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருக்கமாட்டாது.

3. இவற்றைக் கடந்து அரசாங்கம் புலிகள் இயக்கம் தம்மிடையேயான விட்டுக் கொடுப்புடன் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் ஒரு குறைந்தபட்ச இணக்கப்பாட்டிற்கு வந்துகொண்டாலும் தெற்கின் எதிர்த்தரப்பு பேரினவாதக் கட்சிகள் கைகட்டி சும்மா இருக்க

- ❖ இடைக்கால நிர்வாகம் இன்று அவசியம்
- ❖ பேரினவாத நிலையைக் கைவிடல் வேண்டும்
- ❖ புலிகள் தூரநோக்கில் செயல்பட வேண்டும்
- ❖ அந்நிய ஆதிக்கத்துக்கு இடம் தரவேண்டாம்.

மாட்டாது என்பது கவனத்திற்குரியதாகும்.

4.மேலும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கக் கூடாது என்பதிலும் ஜனாதிபதி வன்மத்துடன் இருந்து வருகிறார். அத்துடன் அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராகவும் எதனையும் நிராகரித்துக் கொள்ளக் கூடிய யாப்புரீதியான பலம் கொண்டவராகவும் இருப்பதால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஜனாதிபதியைக் கடந்து நடைமுறைக்கு வருவதில் பல தடைகள் இருக்கவே செய்கிறது.

5. அதேவேளை பிரதமர் ரணிலும் ஜனாதிபதி சந்திரிகாவும் நாளாந்தம் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாட்டிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு தத்தமது ஆட்சி அதிகார நிலைப்பாடுகளே முக்கியமானவையாகக் காணப்படுகின்றனவே தவிர இலங்கையை சகல வழிகளாலும் சின்னாபின்னப்படுத்தி வந்துள்ள தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை கொள்வதாக இல்லை.

6. அவ் விருதரப்பினரின் ஆட்சி அதிகாரப் பசி போட்டி என்பதை அந்நிய சக்திகள் நன்கு இடமறிந்து பயன் படுத்தி வருகின்றமை முன் எப்போதையையும் விட வெளிப்படையானதாகும். பிரதமரின் பின்னால் அமெரிக்கா மிகநெருக்கமாக நின்று வழிகாட்டி வருகின்றது. அதேவேளை ஜனாதிபதிக்கு இந்தியா பக்கபலமாக இருப்பதுடன் அவருடன் ஒரு ஐக்கிய முன்னணிக்கு முயன்று வரும் ஜே.வி.பி.க்கு இந்தியா பின்னணியில் இருந்து செயல் பட்டு வருகின்றது.

7. இவற்றுக்கும் அப்பால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கத்தில் தமிழ் முஸ்லீம் பிரச்சினையானது கிளப்பப்பட்டு கிழக்கிலிருந்து முஸ்லீம் தலைவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். இந்நிலையானது இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு ஒரு சவாலாகவே எழுந்து நிற்கிறது. இதனையும் தெற்கின் பேரினவாத குழப்பும் தரப்பு தனக்குச்



சாதகமாக பயன்படுத்த முன்னிற்கின்றது.

இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கும் போது ஜனாதிபதியும் பிரதமரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு விடயத்தில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து கொள்வார்களா என்பது இலகுவில் பதில் கூற முடியாத கேள்வியாகவே எழுந்து நிற்கின்றது. கடந்த

12ம் பக்கம் பார்க்க...

# கிழக்கில் யுத்தத் தீயை மூட்ட நிற்கும் பேரினவாதிகளும் சுயநல சக்திகளும்

கிழக்கு மாகாணம் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களைக் கொண்ட பிரதேசமாகும். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம். பாராளுமன்ற வாக்குச் சேகரிப்பு. பரஸ்பர இனதுவேசம். ஒருவர் நலனை மற்றவர் பறித்தல் போன்றவற்றால் இணைந்து வாழ வேண்டிய கிழக்கின் மக்கள் ஒருவரிடம் இருந்து மற்றவர் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். மூவினத்தையும் சேர்ந்த தேசியவாதத் தலைமைகள் குரோத உணர்வுகளைத்தூண்டி தமது அரசியல் பொருளாதார நலன்னளைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் சாதாரண மக்கள் என்றும் சாதாரண வாழ் நிலையோடு மல்லாடுபவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இத்தகைய குரோதங்களும் விரோதங்களும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் இயக்கங்களால் மேலும் வளர்க்கப் பட்டதே தவிர இணக்கமான நிலை தோற்றுவிக்கப்படவில்லை.

இத்தகைய மூவினக் குரோத துவேஷ நிலைப்பாடுகளை ஆளும் பேரினவாத சக்திகள் அவ்வப்போது தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தி வந்துள்ளன. குறிப்பாக தமிழ் முஸ்லீம் உறவைச் சீர்குலைப்பதிலும் குரோதங்களை அடிமட்டம் வரை கொண்டு செல்வதிலும் பேரினவாதிகளின் எண்ணங்கள் விருப்பங்களை தமிழ் முஸ்லீம் தலைமைகள் தங்களது இயல்பான பாதையில் முன்னெடுத்தும் வந்துள்ளனர்.

தமிழர் தலைமைகள் முஸ்லீம் மக்களைத் தமக்கு கீழே உள்ளவர்களாகக் கொள்ளும் ஆதிக்கப்போக்கு அன்றிலிருந்து இன்று வரை நீடிக்கிறது. அதேவேளை முஸ்லீம்கள் தமது தனித்துவத்துடன் தமக்கான தனி இடம் கோரி நின்று தமிழர்களுடன் முரண்படுவதும் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. அத்துடன் பேரினவாதிகளின் ஆபத்தின் தன்மையை உணராது அவர்களது அரவணைப்பில் முஸ்லீம் மக்களின் உரிமைகளை வென்று விடலாம் என்ற நம்பிக்கையிலும் முஸ்லீம் தலைமைகள் இருந்துவந்துள்ளன.

இத்தகைய பின்புலத்திலே தான் யுத்த நிறுத்த சூழலிலும் கிழக்கில் கொலைகள் இனம் காட்டாதவாறு தொடராக இடம் பெறுகின்றது. முஸ்லீம் மக்கள் கொலை செய்யப்படுவதும் பின்

தொடர்ச்சி 11ம் பக்கம்




# மேல் கொத்மலைத்திட்ட எதிர்ப்பைக் கைவிட அமைச்சர் ஆறுமுகம் இணங்கிவிட்டாரா?

ஐப்பான் அரசாங்கம் அதனது பொருளாதார ரீதியான சுரண்டலை மலையகமெங்கும் விஸ்தரிக்கும் நோக்குடனேயே மேல் கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு கடனுதவி செய்வதுடன் அதனை அமுல்படுத்துவதிலும் ஆர்வமாய் இருக்கிறது. அத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் கொழும்பிலிருந்து தலவாக்கொல்லைக்கு கொண்டு செல்ப்படுவதாக அறிய முடிகிறது மக்களின் எதிர்ப்பு எவ்வாறாக இருந்தபோதும் அதனை அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவே தெரிகிறது.

ஐப்பானில் இருக்கும் மகாயான பௌத்த சமயத்தை இலங்கையில் பரப்பும் நோக்குடன் செயற்படும் இலங்கையின் பிரபல பௌத்த பிக்குவுடன் இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கத்தின் காரணமாக மேல் கொத்மலை திட்டத்தை எதிர்க்கும் இ.தொ.கா நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுவிடலாம் என்று மக்கள் அந்த பௌத்த பிக்கு சந்தேகிக்கின்றன.

கொட்டகலை தமிழ்மாகாவித்தியாலய மாணவர்களுக்கு கொப்பி புத்தகங்கள் புத்தகப்பைகள் போன்றவற்றை இலவசமாக வழங்கினார் அவ்விழாவை அமைச்சர் ஆறுமுகம் ஏற்பாடு செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

அப்பிக்கு மகாயான பௌத்த மதத்தை இலங்கையில் பரப்புவதில் மட்டுமல்ல ஐப்பானுக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதிலும் ஐப்பானின் முதலிடுகளை இங்கு அதிகரிக்க செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டுவருவதாகவும் அறிய முடிகிறது. ஐப்பானிய பண்பாட்டு விடயங்களை இங்கு அறிமுகம் செய்வதிலும் திட்டமிட்டு அவர் செயற்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

அதேபோன்று மலையகத்தில் ஐப்பானிய முதலிடுகளை ஊக்குவிக்கலாம் என்றும் அதனால் மலையகம் அபிவிருத்தியடையுமென்றும் மலையக கல்வி சுகாதாரம் என்பவற்றுக்கு ஐப்பானிய உதவியை பெற முடியும் என்றும் அப்பிக்கு அமைச்சர் ஆறுமுகனிடம் தெரிவித்திருப்பதாக அறியமுடிகிறது.

மேல் கொத்மலை திட்டம் அமுல்படுத்தப்பட்டால் தலவாக்கொல்லையில் நவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையொன்று ஐப்பான் கட்டித்தருமென்றும் உறுதியளிக்கப்பட்டிருப்பதாக நம்பகரமான செய்தியொன்று தெரிவிக்கிறது.

அத்திட்டத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படப்போகின்ற மக்களும் அதன் அழிவுளுமான அம்சங்களை புரிந்து கொண்டு எதிர்க்கிறவர்களும் தமது எதிர்ப்பைக் கைவிடத் தயாராக இல்லை. அவர்களின் எதிர்ப்பை இ.தொ.கா வின் எதிர்ப்பாக்க காட்ட சில போராட்டங்களை செய்த ஆறுமுகன் தொண்மான் உண்மையாக என்ன செய்யப்போகிறார் என்பதை

12ம் பக்கம் பார்க்க..

படிப்பகம்

www.padippakam.com



# வாழிட உரிமையை பறிக்க தோட்டக்கம்பனிகள் முயற்சி

தோட்டங்களில் வேலை செய்யாதவர்களை தோட்டங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக தோட்டக்கம்பெனிகள் அறிவித்துள்ளன. இம்முடிவு மலையகத் தமிழ்மக்களின் வாழிட உரிமையை மறுப்பதாகவே அமைந்துள்ளது.

பிரிட்டிஷ் காலனித்துவ காலத்திலிருந்து தோட்டங்களில் வேலை செய்யாதோரை தோட்டங்களிலிருந்து வெளியேற்றும் அச்சுறுத்தல் தொடர்கிறது. பிரிட்டிஷ் கம்பெனிகளிடமிருந்து தனியார் கம்பெனிகளிடமிருந்தும் தோட்டங்களை அரசுடமையாக்கப்பட்டப் பிறகு பெரும் எண்ணிக்கையானவர்கள் மேற்படி வெளியோற்றப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பியக்கங்களின் காரணமாக அவ்வாறான வெளியோற்றங்கள் நிறுத்தப்பட்டன.

தோட்டத்தொழிலாளர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் தோட்டக்குடியிருப்புகளும் தோட்டங்களுமே வாழிடங்களாகும் அது கடந்த 200 வருடகால நடைமுறைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வுரிமையை பறிப்பதற்கு தோட்டக் கம்பெனிகளுக்கு எவ்வித சிறப்பான அதிகாரங்களும் கிடையாது. தோட்டக் கம்பெனிகள் அரசாங்கத்ததுடன் செய்து கொண்டுள்ள குத்தகை ஒப்பந்தத்தின் படி தோட்டக் குடியிருப்புகள் தோட்டக்கம்பெனிகளின் கட்டுப்பாட்டுற்குட்படவில்லை அதனால் தோட்டக்குடியிருப்புகளில் குடியிருப்பவர்களை வெளியோற்றுவதற்கான அதிகாரம் கம்பெனிகளுக்கு கொடுக்கப்படவில்லை தோட்டக் குடியிருப்புகளில் யார் யார் குடியிருக்க வோண்டும் என்பதை தோட்டக்கம்பெனிகள் முடிவு செய்யமுடியாது.

தோட்டங்களில் வேலை செய்யாதவர்களை தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்போவதாக தோட்டகம்பெனிகள் வெளியிட்டுள்ள கருத்திற்கு எதிராக எதிப்பியக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தோட்டத்தொழிலாளர்களினதும் மலையகத்தமிழ் மக்களினதும் வாழிட உரிமையை நிலை நிறுத்த அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தோட்டங்களில் வாழ்வோர் தோட்டக்கம்பெனிகளின் அடிமைகளஅல்ல என்பதை நிலை நிறுத்த வேண்டும்.

வி. மனோகரன்

# பல்கலைக்கழகக் கல்வியின் எதிர்பார்ப்பு

எமது (மகன், மகள்) பல்கலைக் கழகத்தில் இடம் பிடித்துவிட்டால் அதுவே எங்கள் சந்ததிக்கு கிடைத்த மாபெரும் புகழ். கல்வி உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று, கட்அவுட்டில் நிலையான இடத்தை உறுதியாக்கி, பல்கலைக்கழகத்தில் ஐந்து ஆண்டு வரை கொக்குப்போல் காத்திருந்து தீட்சையுடன் வெளியேறினால். இது இன்றையத் தமிழனின் கல்வி வள எதிர்பார்ப்பில் ஒரு மைல்கல். அதுவே இன்றையத் தமிழனின் புதிய பாரம்பரியம்.

எனது மகன் (மகள் அல்ல) கம்பஸ் பட்டதாரி. ஆகவே அவனுக்குரிய பெறுமதி அதிகபட்சமாய் கருதுவதானால், கோடிட்ட காணியும், மைல் சின்னம் பொறித்த ரூபாய் நோட்டுக் களும், இவைகளுடன் போதுமான தாகக் கருதாது நகர்ந்து செல்வதற்கு நாலுசில்லு இரதம் அல்லது இரண்டு சில்லு இரதம். இவைகளெல்லாம் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற வாய்ப்புகளின் வற்புறுத்தல் அறுவடை.

ஆராயுமிடத்து தமிழர்களுடைய கல்வி யாழ் மண்ணில் இருக்கும் மூலை முடுக்கு கிராமங்களில் மேலோங்கி வளர்ந்து வரும் கல்வி உணர்வுகளும், உறவுகளும் இப்படியாகத்தான் உருமலர்த்தப்படுகின்றது. தமிழர்களாகிய எமக்கு ஓர் யதார்த்தமான கல்வி உளவியல் நோக்கு தனித்துவமாக இல்லை. எமது பிள்ளைகள் பல்கலைக் கழகத்தில் இணைந்து ஓர் பட்டதாரியாக வெளியேறினால் மட்டும் போதுமானதே. அதன்மூலம் மறைந்திருக்கும் வறட்டுப் பண்பாடுகள் மீண்டும் தளிர்க்க வாய்ப்பு ஏற்படும் என்பதாலோ என்னவோ இந்த நவீன கல்வி உணர்வு எம்மவர் மத்தியில் மேலோங்கி வளர்கின்றது. அதுமட்டுமல்ல ஓர் மாணவனுடைய சுய உணர்வுக் கல்வி நோக்கும் இன்றைய தமிழ் பெற்றோர்களால் மிக மோசமாகப் புறக்கணிக்கப் படுகின்றது. தான் விரும்பிய, இயலுமான துறையில் பயில்வதற்கு. பெற்றோருடைய. இடைச் செருகலும் வற்புறுத்தலும் தான்தோன்றித்தனமும் திணிக்கப் படுகின்றது. ஆகவே ஒட்டு மொத்தமாக

வளர்ச்சி என்பது சமூகத் திற்கோ சாதாரண மக்களுக்கோ அல்ல. வெறும் பணம் சம்பாரிப்புக்கும். அதற்கு உந்து சக்தியாய் வழி நடத்தப் பெறும் ஆடம்பர வாழ்விற்கும் அந்தஸ்த்துக் காட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பல்கலைக்கழகம் சென்றால் போதும் அல்லது அங்கிருந்து வெளியேறினால் போதும் என்ற உணர்வுக்கும் நாம் முழுமையாக அடிடையாகிவிட்டோம். இன்றைய நவீன கல்வி வளர்ச்சிக்கு நாம் ஈடுகொடுக்க முடியாதவர்களாக உருமலர்த்தப்படுகிறோம் என்பதை தமிழ் பெற்றோர்கள் சிந்திக்கிறார்களா!

தமிழர்கள் தமது கல்விச் சிறப்பின் அச்சாணியாக விளங்கும் பல்கலைக் கழகத்தின் பாரம்பரியத்தை சமூக யதார்த்தமாக உணர்ந்து அதற்கு உறுதியாக தம்மை ஆக்கிக் கொண்டால். கல்வியை வைத்துப் பணம் சம்பாதிக்கும் மனிதத் தன்மை அற்ற உணர்வு எம்மை ஆட்கொள்ளாது என்பது எனது துல்லியமான கருத்து.

'நவயுகன்'

# செம்மணியில் உப்பளம் வேண்டாம்!

1948ம் ஆண்டு இலங்கை நீர்பாசனத் திணைக்களம் கடல் நீர் நாவற்குழி ஊடாக குடாநாட்டு நிலப்பகுதியில் புகாமல் தடுக்க அரை வட்ட வடிவ தடுப்பு முகாமை அமைத்தது. இதனால் கோப்பாய் தெற்குப் பகுதி கடல் நீரின் தாக்கத்தால் பாதுகாக்கப்பட்டது. இதன் காரணமாக அப்பகுதி விளை நிலமாக விளங்கி வந்தது. மக்களும் உற்சாகத்துடன் விவசாயத் தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

அதன் அருகாமையில் செம்மணி உப்பளம் உப்புக் கூட்டுத்தாபனத்தினால் நிறுவப்பட்டது. உப்பளம் என்பது கடல் நீரை உட்புகுத்தி உலரவிட்டு உப்புப் பெறுவதாகும். உள்ளே புகுத்தப்பட்ட நீரை மண்ணால் கட்டிய வரம்பால் தடுத்து நிறுத்தும் உபாயம் கையாளப் பட்டு வந்தது. இந்த மண் வரம்புகள் கடல் நீராலும் மழை நீராலும் அரிக்கப் பட்டும் நன்கு கழுவப்பட்டும் வந்ததால் கடல்நீர் கோப்பாய் தெற்குப் பகுதிக்குள் ஊடுருவி அப்பகுதியில் நீர் வழங்கும் கிணறுகளை உவர்நீர்க் கிணறுகள் ஆக்கி பயன்பெற முடியாத நிலைக்கும் உள்ளாக்கி விட்டது. மக்கள் தமது விவசாயத் தொழிலைத் தொடர்ந்து மேற் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.

இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் இப்பகுதி வந்ததும் உப்பளம் கைவிடப் பட்டது. ஆனால் அப்பிரதேசத்திலிருந்து மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்டன. இன்னும் அச்செம்மணிப் பகுதியில் தோண்டப்படாது புதைகுழிகள் இருப்பதாக நம்பப்படுகின்றன.இது மற்றொரு விடயம்.

ஆனால் அதே இடத்தில் மாந்தை உப்புத் தாபனம் உப்பளம் ஒன்றை மீண்டும் அமைக்கத் தொடங்கி விட்டது. இதனால் காலப்போக்கில் கோப்பாய் தெற்கு மக்கள் அளப்பரிய கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். இதனால் இந்த உப்பளத் திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். இவ் உப்பளத் திட்டத்தைக் கைவிடும்படி வலி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோப்பாய் தெற்குப் பிரதேச மக்கள் வலியுறுத்துகின்றனர். இப்பிரதேச மக்கள் நலன் விரும்பிகள் மேற்படி செம்மணி உப்பளத்தை நிறுத்துமாறு கோரி பிரதேசச் செயலர் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு தமது ஆதங்கத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கின்றனர்.

ஆர்.வி. சுப்பிரமணியம்
கோப்பாய்

## இலங்கை செலுத்த வேண்டிய வெளிநாட்டு கடன்

1999 – 65,451 கோடி 40 லட்சம் ரூபாய்

2000 – 72,207 கோடி 90 லட்சம் ரூபாய்

2001 – 79,591 கோடி 80 லட்சம் ரூபாய்

2002 – 84,061 கோடி 90 லட்சம் ரூபாய்


இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதிய பூமி

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

✍ செய்திகள்–கட்டுரைகள் அனுப்புங்கள்
✍ உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00
(தபாற் செலவு உட்பட)

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

ஆசிரிய பீடம் / நிர்வாகம் : புதிய பூமி
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு – 11, இலங்கை. Tel: 2435117, 2335844 Fax : 01-2473757


# நாலும் நடக்கும் நற்குணண் உலகிலே

## சாயிபஜன்

சாயிபாபா தன்னைக் கடவுள் என்றோ கட்வுள் அவதாரம் என்றோ சொல்லவில்லை என்று பேராசிரியர் பத்மநாதன் ஓங்கிக் கதையளந்திருக்கிறார். கடந்த அரை நூற்றாண்டுக்காலமாக அவருடைய முற்பிறவிக் கதை முதலாக அவரை அவதாரமாக்கிப் புனையப்படுகிற பல்வேறு பஜன்களும் அவரது முன்னிலையிலேயே பாடப்படுகின்றன. தன்னை பகவான் என்று அழைப்பதையிட்டு அவர் முகஞ் சுழித்ததுங் கிடையாது. தன்னுடைய தொண்டரடிப் பொடிகளும் பக்த கோடிகளும் தன்னை ஒரு அவதாரம் என்று பொய் கூறுவதைத் தடுக்க அவர் ஏதாவது செய்திருக்கிறதா?

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தன்னைக் காந்தி என்று அழைக்காதீர்கள் என்று அன்பர்களைச் செல்லமாகக் கடிந்து பேசியிருக்கிறார். பகவான் என்று யாரும் அவரை அழைக்கவில்லை. எனவே ஒப்பிட்டுப் பேசுவது ஒருவேளை பொருந்தாமலிருக்கலாம்.

## செம்மணி மொழி

நான்கு வருடங்கட்கு முன்பு தன் இலங்கை வருகையின்போது. "செம்மணி செம்மணிங்கறாங்களே, செம்மணின்னா என்ன?" என்ற கேள்வி மூலம் இலங்கையில் தன் புகழை நிலை நாட்டிக்கொண்ட கிளுகிளுப்பு எழுத்தாளர் பாலகுமாரன் அப்போது ஈழத்தமிழர் பிரச்சினையை முன்வைத்து ஒரு நாவில் எழுதப் போவதாகத் தமிழ் இலக்கிய உலகைப் பயமுறுத்தியிருக்கிறார். அதைச் செய்யாததன் மூலம் தமிழ் இங்கிலாந்துக்கும் ஈழத் தமிழருக்கும் அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இப்போதைய இரண்டாவது வருகையின் போது அவர் விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசாங்கம் நேசக்கரம் நீட்டியே தீரும் என்று உறுதியளித்திருக்கிறார். அவரது வாக்குப் பலிக்காமல் இருக்க எல்லாரும் கால் நிமிடத்துக்கு மௌனப் பிராத்தனை செல்வோமாக! இந்தியா நேசக் கரமும் நீட்ட வேண்டாம், நாசக் கரமும் நீட்ட வேண்டாம் சும்மா கையைக் கட்டிக் கொண்டிருந்தால் போதும் என்பது தான் எனது வேண்டுகோள்!

## குரைக்கிற நாய் கல்லெறிக்கு அஞ்சலாகாது

கைலாசபதியைப் பற்றிச் சொன்னால் மட்டும் ஏன் எல்லாருக்கும் பொத்துக் கொண்டு வருகிறது என்று ஒரு தூய இலக்கியப் பிரமுகர் இன்னொரு படைப்பாளியிடம் ஆதங்கப்பட்டாராம்.

அவருடைய ஆதங்கம் என்ன? கைலசபதியைப் பற்றிய அவதூறுகளுக்கு மறுமொழி சொல்ல இன்னமும் பலர் இருப்பது தானா? கைலாசபதியைப் பற்றிக் கருத்து அடிப்படையிற் வாதித்தால் யாரும் சினக்க வேண்டியதில்லை. அவதூறுகளால் கைலாசபதியை மதிப்பிறக்கம் செய்கிறவர்களிடம் ஒன்று கேட்கிறேன். நீங்கள் ஏன் உங்கள் அவதூறுகளையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறீர்கள்? அதை நிறுத்தினால் அதற்கு எதிரான பதிலடிக்கும் தேவை இராதே! ஐயா தூய இலக்கிய உபாசகரே! நீங்கள் எவரையும் எங்கேயும் எப்படியும் அடிக்கலாம் ஆனால் பதிலடி தருவது தான் தவறு என்கிறீர்களா?

## போன மச்சான் திரும்பி வருவானா?

இந்தியா இலங்கையின் சமாதான முயற்சிகளில் மீண்டும் ஈடுபடப் போகிறதாகப் பல நாளேடுகளில் தகவல்கள் வந்துள்ளன. விடுதலைப் புலிகள் திருகோணமலை நகரைச் சுற்றி வளைத்துள்ளதாகக் கதிர்காமர் இந்திய அரசாங்கத்துக்கு விடுத்துள்ள எச்சரிக்கை இந்து நாளேட்டிலிருந்து இங்கு மறுபிரசுரமாகியுள்ளது.

விடுதலைப் புலிகளை அங்கீகரிக்காத விடுதலைப் புலிகளுக்குத் தனது மண்ணில் விதித்த தடையை நீக்க மறுக்கிற ஒரு அரசாங்கம் எப்படி இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளில் நடுநிலை பேன இயலும். இப்போது அமெரிக்காவும் யப்பானும் அரசாங்கத் தரப்பிலிருந்து சமாதான முயற்சிகட்குப் பங்களிப்பது போதாமல் இந்தியாவையும் இதற்குள் நுழைக்க வேண்டுமா?

ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்கள் விடுதலைப் புலிகள் மீதான பகைமையால் இந்தியாவின் ஈடுபாட்டை விரும்பலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் தயவில் வென்றவர்கள்?

## வீர கர்ச்சனைகள்

தேயிலைத் தோட்டங்களை முற்றாகத் தனியார் மயமாக்குவது பற்றி வீர கேசரியில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் தொண்டமானும் சந்திரசேகரனும் நிச்சயமாக அதை எதிர்த்தும் பேசிக் கொண்டே அடுத்த தேர்தல் வரை அமைச்சர் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பார்கள். கொள்கை வேறு வியாபாரம் வேறு இல்லையா!

## அமைச்சர் ஹக்கீமின் மறைப்பு

அமைச்சர் ரவூவ் ஹக்கீம் ஜே.வி.பி.யை ஒரு இனவாதக் கட்சி எனச் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் விடுதலைப் புலிகளையும் இனவாத இயக்கம் என்றும் கூறியுள்ளார். அப்படியானால் அவர் தற்போது அமைச்சராக இருக்கும் அரசாங்கத்தை அமைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது முன்பு அமைச்சர் பதவி வகித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ இனவாதக் கட்சிகள் இல்லையா? அவற்றின் பேரினவாதம் ஹக்கீமின் கண்களுக்கு தெரியாது மறைந்து போனதேன்? தனது அமைச்சர் பதவியால் அல்லதுபாராளுமன்றப் பதவி இரண்டு கட்சிகளினதும் பேரினவாதத்திற்கு மறைப்புக் கட்டுகிறாராஹக்கீம்.

# பா.உ களுக்கு மேலும் சலுகைகள்

பா.உ களுக்கு மேலும் பல சலுகை களை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் சிபார்சு செய்துள்ளார்.

பா.உ. களின் வாகனங்களின் பராமரிப்புக்கென முதலாம் வருடத்தில் ரூபா 15,000/–யிரமும் இரண்டாம் வருடத்தில் ரூபா20,000/–ஷம் வழங்க வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் வருடத்திற்கு எவ்வளவு தொகை வழங்க வேண்டு மென்பது அந்த வருடத்திலேயே தீர்மானிக்கப்படுமாம்.

சகல எம்.பிக்களும் - இன, மத வேறுபாடுகள் இன்றி இந்தியா வழங்கிய கடன் மூலம் வாகனங்களைப் பெற்றது தெரிந்ததே. அந்த வாகனங்களுக்கான பராமரிப்புக்கே மேற்கூறிய தொகை வழங்கப்படவுள்ளது.

வானகங்களுக்கான முழுமையான காப்புறுதி 2002ம் ஆண்டிற்கும் அரசாங்கமே பொறுப்பேற்றது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமா? மாதந்தோறும் எம்.பி மாருக்கு ரூபா. 7500/– எரிபொருள் அலவன்சும் வழங்கி வருவது ரூபா 22 ஆயிரமாகக் கூட்டப்பட இருக்கிறது.

தொழிலாளர்கள், ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க மருக்கும் அரசாங்கம் பா.உ. களுக்கு மேன்மேலும் சலுகைகளை வழங்கி வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# யூ.என்.பி. ஆட்சி யாருக்காக?

வரி மன்னிப்பு என்ற பெயரில் தரகு முதலாளிகளையும் வர்த்தகத் திமிங்கலங் களையும் தாலாட்டி வளர்க்கும் இன்றைய யூஎன்.பி. அரசாங்கம் ஏற்கனவே 5600 கோடி ரூபாவிற்கு வரி விலக்கு வழங்கியது. மேலும் அறவிட வேண்டிய 2000 கோடி ரூபாவையும் கை கழுவிக் கொண்டது. இப்போது அரசாங்கத்தின் மிக முக்கிய வர்த்தகப் புள்ளிகள், அரசியல் வியாபாரிகள் என்போரது வேண்டுதலின்படி வரி மன்னிப்புக் காலத்தை யூன் 31ல் இருந்து ஆகஸ்ட் 315ம் திகதிக்கு நீடித்துள்ளது. இந்த அவகாசம் கள்ளக் கணக்குக் காட்டும் பெரும் வர்த்தககள். அரசியல் வியாபாரிகள் என்போருக் கானதேயாகும். இந்த வரி மன்னிப்பால் சாதாரண மக்களுக்கு எவ்வித பலாபலனும் கிடைக்கப்போவதில்லை.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வர வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து வாக்களித்து விடாத பிடியென் நின்ற நடுத்தர. சாதாரண வியாபாரிகள் அம்போவெனத் தலையில் கைவைத்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். சிறிய மீன்களைப் பெரும் பெரும் சுறாக்கள் விழுங்குவது போன்று சிறிய நடுத்தர. வர்த்தகர்கள் வியாபாரிகளை உள்நாட்டு வெளிநாட்டுத் திமிங்கலங் களும் தரகு முதலாளிகளும் விழுங்கி வரும் நிகழ்வுகள் வேகமாக இடம் பெறுகின்றன.

இதனால் நைந்து நொந்து கீழே தள்ளப் படுபவர்களின் பக்கம் அரசாங்கம் எவ்வித சலுகைகளையும் செய்யத் தயாரில்லை. ஆனால் பெருவர்த்தகர் கள். கம்பனிகள். தரகு முதலாளிகள், அரசியலில் ஓகோவென இருந்து கொண்டே வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறப்போருக்கு வரிச்சலுகைகள், வரி மன்னிப்பு. கடன் உதவிகள் தாராளமாக வழங்கி வருகின்றது.

சாதாரண மக்கள் வங்கிக் கடன் என்பதை நினைக்கவே முடியாது. அவர்களுக்கு காட்டப்படுவதெல்லாம் சமூர்த்தி என்ற தரித்திர சேமிப்புத் திட்டமும் ஆக மிஞ்சினால் கிராமிய வங்கிக்கடன்களும்தான். ஆனால் மக்களைக் கொள்ளையடிக்கும் வர்த்தகப் பெரும்புள்ளிகள் கோடிக் கணக்கில் வங்கிகளில் கடன் பெற வழிகள் திறந்துள்ளன. சாதாரண மனிதர்கள் ஒரு வீட்டைக் கட்ட அல்லது சிறு வியாபாரம் செய்ய வங்கிக் கடன் பெறுவதனால் எத்தனையோ தடவை வங்கிப்படியேறி காணவேண்டியவர் களைக் கண்டு கெஞ்சவேண்டியுள்ளது. ஆனால் வர்த்தகக் கட்டிடத் தொகுதிகள். தொடர்மாடிகள். ஆடம்பர வீடுகள்-வாகனங்கள் வாங்குவதற்கு இலகுவாகவே வங்கிகளில் கடன் பெற்று விடுகிறார்கள் பெரும் புள்ளிகள்.

பெரு முதலாளிகள். பெரு வர்த்தகர்கள், உயர் அதிகாரிகள். சொத்து சுகம் படைத்த மேட்டுக்குடியினர் அவர்களோடு கைகோர்த்து நிற்கும் வெளிநாடுகளின் வர்த்தகர்கள் முதலாளிகள் தரகர்கள் என்போரின் நலன்களே. இன்றைய கேடுகெட்ட யூஎன்.பி. ஆட்சியால் பாதுகாக்கப் படுகின்றனர். சாதாரண மக்கள் விலை உயர்வுகளால் சம்பளம் போதாமையால் தமது அன்றாட வாழ்வைக் கொண்டு நடாத்த முடியாது திண்டாடியே வருகின்றனர்.

என்னதான் சமாதான வேடமணிந்து கொண்டாலும் யூஎன்.பி. அரசு தனது மக்கள் விரோத தொழிலாளர் விரோத நிலை நின்று முதலாளித்துவத்தையே கட்டிக் காத்துக் கொள்ளும் என்பதை நடைமுறையில் காட்டி வருகின்றது. மக்கள் இவ்வேளையிலாவது அதன் சுய ரூபத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

# அமெரிக்காவும் கண்ணிவெடியும்

இலங்கையில் கண்ணிவெடி அகறடற ராணுவத்தற்கு பயிற்சி வழங்கும் புரிந் துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் படி நான்கு அமெரிக்கராணுவ உயர் அதிகாரிகளும் ஆறுநிபுணர்களும் இலங்கை ராணுவ உயர் அதிகாரி களுக்கு பயிற்சி வழங்க உள்ளனர். இப்பயிற்சிக்கு 22 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்படவுள்ளது. ஆறுமாதகாலப் பயிற்சி வழங்கப்பட்ட இருக்கிறது. இரண்டு விடயங்கள் கவனத்திற்குரியதாம். இலங்கை ராணுவத்திற்கும் போராடும் இயக்கங் களுக்கும் கண்ணிவெடிகளை விற்ற வர்கள் இதே அமெரிக்கர்கள் அல்லவா? இப்போது அவற்றை அகற்றபயிற்சி கொடுப்பவர்களும் அவர்களேதான். அத்துடன் இவ்வாறு பயிற்சி வழங்குவது ஏதிர்காலத்தில் தொடர்ந்தும் (நாங்கள் விற்போம் பாவித்த பின் நீங்கள் அகற்றுங்கள்) என்பதாகவே இருக்கின்றது. அப்படியானால் யுத்தம் தொடரத்தான் போகின்றது என்பதே அர்த்தம் அல்லவா? ஏகாதிபத்தியம் என்றால் இது தான் என்பதை மக்கள் புரிந்து கொண்டால் போதும்.

# தனியாருக்கு தாரைவார்க்கப்படும் மக்கள்வங்கி

மக்கள் வங்கியைத் தனியார் மயப்படுத்த அரசு முயன்று வரும் வேளையில் அதன் அரையாண்டு இலாப நட்டக் கணக்கு வெளியாகி யுள்ளது. இந்த வருடம் முதல் ஆறுமாதங்களில் வரிஒதுக் கீட்டின் பின் மக்கள் வங்கிக்கு சுத்த இலாபமாக 105 கோடி 70 இலட்சம் ரூபா கிடைத்துள்ளது. அது மட்டுமல்ல சந்தேகத்திற்கிடமான கடனுக்கு என 63 கோடியே 80 இலட்சம் ஒதுக்கிய பின்பும் இந்த சுத்த வருமானம் கிட்டியுள்ளது. இந்த ஆண்டின் பின் ஆறுமாதங்களிலும் வங்கி சுத்த இலாபமாக மேலும் 100 கோடியே 50 இலட்சம் ரூபாவை பெறுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கிராமிய மக்களின் நலன்களுக்காக உருவாக்கபட்ட இந்த வங்கியை தனியார் மயப்படுத்த முயற்சி மேற் கொள்ளப்படுகிறது. இலாபத்தில் இயங்கும் வங்கியை ஏன் தனியார் மயப்படுத்த வேண்டும்? ஏனெனில் மேற்படி கிடைக்கின்ற பெருலாபத்தை தனியார் சிலரின் பைகளில் பொட்டுக்கொள்ளவேயாகும்.

# வெட்கம் ரோசமற்ற பண்பாடு!

தொலைக்காட்சி விளம்பரத்தில் பசு ஒன்று ஆட்டம் போடுவதாகச் சித்தரிக்கப்பட்டதை ஆட்சேபித்து பலர் கருத்து தெரிவித்திருந்தனர். அவர்கள் அனைவரும் அரசியல் கட்சிகளுடன் நேரடித் தொடர்பு அற்றவர்கள். இது இவ்வாறிருக்க டெயிலி நியூஸ் பத்திரிகையில் முழுநிர்வாண நிலையில் ஒரு பெண் தனது முழங்கால்களால் அவயவங்களை மறைத்தவண்ணம் இருப்பதாகச் சித்தரிக்கும் விளம்பரம் வந்துள்ளது. அதைத் தொடர்ந்து வேறு ஒரு பெண் விசிறி மூலம் தனது அவயவங்களை மறைப்பதாக காட்சி கொடுக்கும் விளம்பரம். இந்த இரண்டு நிர்வாண விளம்பரங்களையும் ஒரே நிறுவனம் செய்துள்ளது. சம்பந்தப்பட்ட விளம்பரங்களை பார்க்கும் போது திறந்த பொருளாதாரம் எம்மை எங்கே இட்டுச் செல்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். நமது பண்பாடு பற்றி வாய்கிழியக் கத்திவரும் ஆளும் வர்க்க அரசியல் வாதிகள் வேகமாக மேற்குலகமயமாகி வரும் பண்பாட்டுச் சீரழிவு பற்றி வாயே திறப்பதில்லை. உலகமயமாதலை உள்வாங்கி நிற்பவர்களுக்கு வெட்கம் ரோசம் எப்படி வரமுடியும்.

# உயிர் குடிக்கும் நச்சு குளிர்பானங்களை நிராகரியுங்கள்

கொக்காகோலா மற்றும் பெப்சி குளிர்பானங்களின் கலக்கப்பட்டுள்ள பூச்சி கொல்லி மருந்துகளின் அளவு புற்றுநோய் நரம்புத்தளர்ச்சி பாலியல் குறைபாடுகள் மலட்டுத்தன்மை போன்றன ஏற்படும் என்றும் ஆய்வை இந்திய ஆய்வளர்கள் கண்டு பிடித்து டி.டி.சி மலத்தியோன் போன்ற மருந்துகள் 30 வீதத்திற்கு மேல் கலக்கப்பட்டிருக்கின்றனவாம். கொக்கா கோலா நிறுவனத் தயாரிப்புகளான கொக்கா-கோலா பன்ரா ஸ்பிறைட் தம்ஸ் அப் ஆகியவற்றில் 0.150 மி .கி பூச்சி கொல்லி மருந்து கலக்கப்பட் டுள்ளது. பெப்சி நிறுவனத் தயாரிப்புக ளான பெப்சி மிரண்டா செவண்அப் என்பனவற்றில் 0.018. மி.கி பூச்சி கொல்லி கலக்கப்பட்டுள்ளது. இவை தண்ணீரில் உள்ள பூச்சிகளைக் கொல்வதற்கு என்றே கலக்கப்படுகிறது. சர்வதேசஅளவில் லீற்றர் ஒன்றிற்கு 0.0005மி.கிராம் என்பதே அங்கிகரிக்கப் பட அளவாகும்.

இங்கே கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் அமெரிக்காவில் தயாரிக்கப்படும் இக் குளிர் பானங்களில் அனுமதிக்கப்பட்ட அளவில் சேர்க்கப்படுவதும் மூன்றாம் உலக நாடுகளில் தயாரிக்கப்படும் கொக்காகோலார் பெப்சி குளிர்பானங்களுக்கு மேற்குறித்த அதிகரித்த அளவில் பூச்சி கொல்லி மருந்துகள் கலக்கப்படுவதுமாகும். மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் எக்கேடு கெட்டாலும் பணத்தைக் கொள்ளை கொள்ளையாகக் கொண்டு சென்றால் போதும் என்பதே அமெரிக்க பல்தேசிய நிறுவனங்களின் ஒரே நோக்கமாகும். இத்தகைய உயிர் குடிக்கும் நச்சு குளிர்பானங்களை நிராகரித்து எதிர்ப்பதே ஒரே வழியாகும்.




# அன்று கண்டிக்கு யாத்திரை! இன்று காலியில் இருந்து யாத்திரை

1956ம் ஆண்டு பண்டாரநாயக்கா பதவிக்கு வந்ததும் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றினார்.இதனை தமிழ் மக்கள் கடுமையாக எதிர்த்தனர் அன்றையதமிழரசுக் கட்சியுடன் பண்டாரநாயக்கா பேச்சுவார்த்தை நடாத்தி அதன் தலைவர் செல்வநாயகத் துடன் ஒரு உடன் பாட்டுக்கும் வந்தார் அதுவே பண்டா-செல்வா ஒப்பந்தம் எனப்பட்டது அவ் ஒப்பந்தத்தின் படி வடக்கு கிழக்கிற்கு பிரதேச சபைகள் தோற்றுவிப்பது வடக்கு கிழக்கின் நிர்வாகமொழியாக தமிழ் மொழி ஏற்றுக் கொள்ளப்படுவது. வடக்கு கிழக்கில் திட்டமிட்ட கடியேற்றங்களில் அப்பிரதேச இனவிகிதாசாரத்தை மாற்றாதவாறு அப்பிரதேசத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது. மலையக மக்களின் வாக்குரிமை இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்வது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அன்றைய இனமுரண்பாட்டுச் சூழலில் மேற்படி பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு ஆரம்பத்தீர்வுப் புள்ளியாக வெளிப்பட்டது. அது நடைமுறைக்கு வந்திருப்பின் காலப்போக்கில் அந்த அடிப்படைகள் விரிவுபடுத்தப்பட்டு காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றம் பெற்றிருக்க முடியும். இரு தரப்பிலும் உறுதியாக இருந்திருப்பின் அவ் ஒப்பந்தம் இனப்பிரச்சனைக்கு தீர்வாகவும் அமைந்திருக்கும்

ஆனால் அன்றைய எதிர்கட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்தது 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி எட்டு ஆசனங்களை மட்டும் பெற்று படுதோல்வி கண்டிருந்தது எதிர்க் கட்சித் தலைவர் பதவி கூடக் கிடைக்க வில்லை. லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் என்.எம். பெரேராவே அப்பதவியைப் பெற்றார். இத்தகைய பாராளுமன்றத் தோல்விச்சூழலில் பண்டா-செல்வா ஒப்பநம் நாட்டைப் பிரிக்கும் ஒப்பந்தம் என ஒல மிட்டு ஜே.ஆரின் தலைமையில் கண்டிக்கு ஒரு யாத்திரை செல்ல ஆரம்பித்தனர். முற்றிலும் இனவாத முழக்கங்களுடன் செல்வநாயகத்திற்கும் தமிழர்களுக்கும் நாடு பிரித்துக்கொடுக்கப்பட்டு விட்டது.



முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.

பௌத்த சிங்கள மக்களே அணி திரண்டு வாருங்கள். கண்டிக்குச் சென்று புனித புத்தருக்கு தலதா மாளிகையில் முறையிடுவோம் என்றே ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர்களும் யாத்திரை சென்றனர். ஆனால் மக்கள் செல்வாக்கு மிக்க அன்றைய கம்பஹா பாராளுமன்ற உறுப்பினரும் முற்போக்குவாதியுமான எஸ்.டி.பண்டாரநாயக்கா முன்னின்று மேற்படி யாத்திரையை இம்புல் கொட என்னும் இடத்தில் வீதிக்கு குறுக்கே படுத்திருந்து வழி மறித்து கலைந்து போகச் செய்தனர் அது இடைநடுவில் கைவிடப்பட்டது. அன்று பேரினவாத வெறி உணர்வுகளை மக்கள் மத்தியில் கிளறி தமிழர்களின் உரிமைகளுக்கு எதிராகச் செயல்பட்டு தமது வாக்கு வங்கியை மீள நிரப்பிக் கொள்வதையும் அதன் ஊடாக தமது நிலவுடமை முதலாளித்துவ வர்க்க நலன்கள் பேணப் படுவதையுமே ஐ.தே.கட்சியும் ஜே.ஆரும் செய்தனர்.

இது நடைபெற்று 47 வருடங்களுக்குப் பின்பு அதே காரியத்தை அதே நோக்கத் தோடு ஜே.வி.பி என்ற மக்கள்விடுதலை முன்னணி செய்கிறது. அன்று ஐ.தே.கட்சியும் ஜே.ஆரும் பச்சைக் கொடிகளும் சட்டைகளும் தொப்பி களும் தாங்கி பண்டி யாத்திரை சென்றனர். இன்று சிகப்புக் கொடிகள் சட்டைகள் தொப்பிகளுடன் ஜே.வி.பி. காலிநகரத்திலிருந்து கொழும்பு நோக்கி ஒரு யாத்திரையை நடாத்துகிறது. இந்த யாத்திரையின் பிரதான நோக்கம் இனப்பிரச்சினையின் தற்போதைய சமாதான சூழலில் இடைக்கால சபையை வடக்கு கிழக்கிற்கு வழங்கக் கூடாறு என்பதேயாகும். அவ்வாறு வழங்கினால் அது நாட்டைப் பிரித்தும் புலிகளிடம் ஒப்படைப்பதாகும். என்கிறது ஜே.வி.பி. கடும் பேரினவாதம் பேசும் சிஹல உறுமய கூட தமிழர்களுக்கு பிரச்சினை இருப்பதாகக் கூறிவருகிறர். ஆனால் செஞ்சட்டை அணிந்து தங்களை இடது சாரிகள் எனக் கூறி அவற்றை அவமானப்படுத்தி நிற்கும் ஜே.வி.பி. இலங்கையில் இனப் பிரச்சினை ஒன்றேகிடையாது எனக் கூறி நிற்கிறது. சிங்கள தமிழ் முஸ்லீம் எல்லோரும் சமவுரிமையுடன் வாழ வழி வகுப்பதே தமது நோக்கு எனவும் தமது சிகப்பு பேரினவாதத்திற்கு ஒரு சப்பை கட்டிப்பார்க்கிறது. இதற்கு தமிழ் முஸ்லீம் சாயம் பூசிக் கொள்ள சந்திரசேகரம் அஞ்சான் உம்மா. ஆகிய இரண்டு கையாட்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக பக்கத்தே வைத்து காட்சி காட்டியும் கொள்கின்றது.

ஜே.வி.பி பேரினவாதம் பேசி புலிகளை அழித்து யுத்தத்திற்கு முடிவு



ஜே.வி.பி.யின் பி.செ. விமல் வீரவன்ச

காண்பதாகவே பிரசாரம் செய்கிறது. சிங்கள மக்களை மத்தியில் தீவிர இனவாதம் பேச்சுக்களை நிகழத்தி வருகின்றது. இடையிடையே தனியார் மயம் உலகமயமாதல் என்பனவற்றுக்கு எதிராகவும் தொட்டுப் பேசி வருகிறது. அத்துடன் சிங்கள மக்களை அச் சுறுத்தும் வகையில் அந்நியப் படைகள் வர இருப்பதாகவும் பிரசாரப் படுத்தி வருகின்றது. நோர்வேயின் அனுசரணை யைக் கடுரமாக எதிர்க்கும் அதே வேளை அமெரிக்கா பற்றி மிக அடக்கியே வாசித்தும் வருகின்றது. ஆனால் இந்தியா பற்றி முன்னையகால கூக்குரலை கைவிட்டு இலங்கையில் இந்தியா தலையிட வேண்டும் எனவும் வற்புறுத்தி வருகிறது. எவ்வாறு இந்தக் குத்துக்கரணம் இடம் பெற்றது. தேச பக்தியா? அல்லது பணக்கட்டுகளா? என்றே கேள்வி எழுப்பப்படுகிறது

எனவே ஜே.வி.பி காலியிலிருந்து கொழும்பு நோக்கி யாத்திரை வருவது இந்த நாட்டை மேலும் அழிவுக்கு உள்ளக்குவதற்கேயாகும். ஒரு சாதாரண சிறுவனுக்குக் கூடப் புரிவது யாதெனில் இனிமேல் யுத்தத்தால் இதைப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தை அரசியல் தீர்வின் மூலமே சாத்தியப்படக் கூடியது அதுவும் புலிகள் இயக்கத்தை நிராகரித்து தீர்வு காண முடியாது என்பதாகும். ஆனால் ஜே.வி.பி சிங்கள இளந்தலைமுறைனரையும் சிங்கள மக்களையும் தவறாக வழிகாட்டி பேரினவாதத் தீச் சுவாலைக்குள் இட்டுச் செல்கிறது முன்பு பாராளு மன்றத்தை நிராகரித்து ஆயுதப் போராட்டம் எனக்கூறி 1971லும் 1988-1989லும் பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளையும் மக்களையும் அழிவுகளுக்கு உள்ளக்கியது இப்போது பாராளுமன்றத்தின் வாக்கு வங்கியைப் பெருக்கிக் கொள்ள பேரினவாத வழி நின்று சிங்கள தமிழ் மோதலுக்கும் யுத்தத்திற்கும் கூவி அழைக்கிறது. பட்டறிவும் தூரநோக்கும் கொண்ட சிங்கள இளைஞர் யுவதிகள் மக்கள் ஜே.வி.பி காலியில் இருந்து நடாத்தும் பேரினவாத யாத்திரையை நிராகரிக்கவே செய்வர்.

படிப்பகம்

# ஊழல் பண மோசடியில் வீழ்ந்து அழியும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி

இலங்கையில் சேவை முன் ஆசிரியப் பயிற்சியை வழங்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றே கல்வியியற் கல்லூரி முறைமையாகும். இவ்வகையில் சிங்களமொழி மூல கல்வியியற் கல்லூரி 1985ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், தமிழ்மொழி மூல கல்வியியற் கல்லூரி 1992ம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் இருமொழி மூல நிறுவனமாகவே இயங்கத் தொடங்கியது. பெருந்தோட்டப் பகுதியிலாகும். தோட்டத் தொழிலாளர் களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியின் இயக்கம் மலையக மக்களது வாழ்வினைப் போல துன்பங்கள், இடர்பாடுகள் நிறைந்த தாகவே காணப்படுகின்றது.

இக்கல்லூரியில் பாடநெறியைப் பின்பற்று வதற்காக சேர்த்துக் கொள்ளப்படு கின்றவர்கள் (பயிற்சியாசிரியர்கள்) தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளை களாக இருப்பதால் கல்வியமைச்சு முதல் கல்லூரி மட்டம் வரையுள்ள அதிகாரிகள் வரை 'ஒரு மட்டமாக' வேறுவகையில் கூறுவதனால் வெள்ளைக்கார துரை தொழிலாளரைப் பார்ப்பதுபோல நடந்துக் கொள்வது தொடர்ந்து நடைபெற்று வரும் சம்பவங்கள் மூலம் அவதானிக்கப்பட்ட விடயமாகும். இதை உறுதிப்படுத்து கின்ற பல சம்பவங்களில் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

1993ம் ஆண்டு சரஸ்வதி பூஜை காலத்தில் அந்த ஒன்பது நாட்களிலும் மாமிச உணவைத் தவிர்ப்பதென முடிவு செய்யப்பட்டபோது, பௌத்த மாணவர் கள் அதை எதிர்த்து, தமக்கு மாமிச உணவு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்ததோடு உண்ணா விரதப் போராட்டம் ஒன்றையும் நடத்தினர். இது பெரும் பிரச்சினையாக உருவெடுத்தபோது பௌத்த நாட்டை ஆளும் பௌத்த அரசு காரணம் ஏதுமின்றி இரண்டு வருடங்களுக்கு கல்லூரியை மூடிவிட்டது. ஜீவகாருண்யம் தூக்கிலிடப்பட்டது. அதன் விளைவு ஏறத்தாழ 315 ஆசிரியர்களை மலைய கம் பெற்றுக்கொள்வது அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டது. இக்கல்லூரியில் 25 வீதமாக இருக்கும் பெரும்பான்மை இன மாணவர்களின் கோரிக்கை சரியானதா என்பது, கிஞ்சித்தும் சிந்திக்கப்படவில்லை.

ஸ்ரீபாத கல்லூரியின் காரியாலய உத்தியோகத்தர்களின் அராஜகப் போக்கைக் கண்டித்தது 1999ம் ஆண்டு மாணவர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அப்போராட்டம், காரியாலய உத்தியோகத்தர்களுடன் கைகலப்பில் ஈடுபடும்வரை சென்றது. இறுதியில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலையிட்டு சம்பந்தப் பட்ட காரியாலய ஊழியர்களை இடமாற்றம் செய்வேன் என உறுதி யளித்ததோடு அப்போராட்டம் நிறுத்தப் பட்டது. எனினும், பல்வேறு அரசியல் சக்திகளால் அடித்திறுக்கப்பட்ட காரியாலய ஊழியர்களை 'பிடுங்க' முடியவில்லை. அவர்கள் இன்றுவரை




பதவியிலிருப்பதே வேடிக்கையானது.

கல்வியியல் கல்லூரி முறையில், உணவுக் குழு என்பது முக்கிய ஒரு அமைப் பாகும். இதில் பதிவாளர், உதவி விடுதி அதிகாரிகள், பீடாதிபதி, பயிலுனராசிரியர் ஆகியோர் அங்கம் வகிப்பர். இக்குழுவில் குறிப்பாக பயிலுனராசிரியர்களே பொருள் கொள்வனவு, விலை, உணவு வழங்குதல் போன்ற நடவடிக்கை களைத் தீர்மானிப்பர். காரணம் பயிலுனர்களுக்கே பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஸ்ரீபாத தேசியக் கல்வியியல் கல்லூரியில் ஓர் தொகுதி யில் ஏறத்தாழ 250 மாணவர் வீதம் 500 மாணவர்களது பணம் மாதாந்தம் ஆறுலட்சத்து எழுபத்தையாயிரம் 675,000/- ரூபாய்கள் ஒதுக்கப்படு கின்றது. அதாவது வாரத்துக்கு ஒன்ற ரை லட்சம் ரூபாய்கள். இத்தொகை கூடாதிருப்பதை அல்லது மிகையாக செல்லாமையை உறுதி செய்துகொள்ள வேண்டும். பயிலுனராசிரியர் 'கட்டுப் பாடாக' இருப்பதன் மூலம் பணத்தை மீதப்படுத்தி, கல்விச்சுற்றுலா போன்ற வற்றுக்கும் பயன்படுத்த முடியும்.

இரண்டாம் வருட மாணவர்களுக்கு ஜனவரி மாதத்திலேயே இது வலியுறுத்தப்படுவதால், அவர்கள் மீதப்படுத்துவதிலே கண்ணும் கருத்து மாயிருப்பர். ஆனால் பயிலுனர்களுக்கு வரவு செலவு விவரம் காட்டப்படாமல் வருட இறுதியில் பல லட்சங்கள் மேலதிகமாக செலவழிக்கப்பட்டுள்ளது எனக் காணுவது ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் வழமையாகும்.

இவ்வாறான சூழலிலேயே கடந்த 30-07-2003 இரண்டாம்வருட பயிலுநரின் கல்விச்சுற்றுலா பற்றி பேசப்பட்டது. கடந்த ஆறு மாதங்களின் கணக்குப்படி 90 ஆயிரம் ரூபாய்க்கு மீதப்பட்டிருப் பதாக கூறப்பட்டது. ஆனால் உணவுக் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் இத்தொகை அதிகமாக இருக்க வேண்டுமென்று கூறி தமது கணக்குப்பதிவுகளை முன் வைத்தனர். (பண ஊழலைக் கண்டறிய வேண்டும் என்பதால் இவர்கள் பல சிரமங்களின் மத்தியில் ஜனவரிமுதல் பதிவுகளைப் பேணியுள்ளனர்) ஆனால் பீடாதிபதி, பதிவாளர் (இவரே பதிவாளர், நிதி உதவியாளர், பிரதமலிகிதர்) கணக்கின் படி பிரச்சினை இருப்பதால், கட்டுறுப் பயிர்வு (Internship) காலத்தில் வழங்கப் படும் கொடுப்பனவிலிருந்து மேலதிக தொகையை கழித்து எடுப்பதற்குரிய சம்மத கடிதங்களைக் கோரியுள்ளார். (உணவுக்குழு தொடர்ந்து மேலதிக மாகச் செலவு செய்யும் என்ற ஊகத்தில்) பயிலுநர்கள், உதவி விடுதி அதிகாரிகள் பணமோசடி செய்த சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டி செலவு பற்றிய விபரங்களைக் கோரி வகுப்பு பகிஸ்கரிப்புக்கு தயாராகினர். உடனே 90 ஆயிரம், லட்சத்து 20 ஆயிரம் ஆகியது. மேலும் மாணவர் முயற்சி செய்தபோது அத்தொகை 1 இலட்சத்து 70 ஆயிரமாகியது. சகல பதிவுகளையும் மாணவர் பீடாதிபதி, உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் முன்னிலையில் பரிசீலனை செய்தபோது 6 இலட்சம் மிகுதியாயிருப்பது அறியப்பட்டது.

பயிலுனர் கருத்துப்படி ஒரு மாதத்தில் 2 இலட்சம் ரூபாய்கள் வரை ஊழல் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. இவ் ஊழலில் பதிவாளர், அவரது உதவியாளர், உதவி விடுதி அதிகாரிகள் இருவர் ஈடுபட்டிருப்பது கண்டறியப் பட்டுள்ளது. இவ்வளவு தொகை பண மோசடியில் ஈடுபட்டுள்ள இவர்களை வெளியேற்றுவது இலகுவானதா?

05-08-2003 ஏனைய கல்லூரி பீடாதிபதிகள் இருவர் கல்வியமைச்சி லிருந்து ஒரு வாரமாக கல்லூரிக்கு வருகைத் தந்து, பயிலுனராசிரியர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர். பண ஊழலில் தொடர்புள்ளவர்கள், வெறி யேற்றப்பட வேண்டும் என்பதே பயிலுனர்களது கோரிக்கையாகும். பண மோசடியில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களுக்கு தண்டனை என்பது எல்லோருக்கும் தெரியும். பயிலுநர்கள் கேட்பது இவர்களை இடமாற்றம் செய்ய வேண்டும் என்பதே. எட்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றும் காரியாலய மற்றும், விடுதி அதிகாரிகள் ஏனையோரைப்போல இடமாற்றம் செய்யப்பட வேண்டும். இவ்வடிப்படை யிலாவது இடமாற்றம் இடம்பெற வேண்டும். இல்லையெனில் இக்கல்லூரி ஊழல் மூலமாகவே அழிவது தவிர்க்கப் படமுடியாத ஒன்றாகி விடும்.

மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்கு என ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி ஊழலின் மையமாகி ஒரு சிலரின் சுய நலத்திற்காக சீரழிக்கப்பட்டு வருகிறது. இது பற்றி மலையகத்தின் இரு அமைச்சர்களுக்கு எவ்வித அக்கறை யும் கிடையாது. புத்தி ஜீவிகள் கல்வி யாளர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். தட்டிக் கேட்டால் தத்தம் பதவிகளுக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ என அஞ்சு கின்றனர். அடிப்படையில் பேரின வாதமும் அதிகாரத்துவ மமதையும் அங்குள்ள ஊழல் பேர்வழிகளிடம் உள்ளது. மலையகத்தானின் தலையில் எதனையும் அரைக்கலாம். மேலிடத்தில் செல்வாக்கு உண்டு. அதற்கும் மேலாகப் போனால் சிங்களத் துவேசம் காட்டுகிறார்கள் என இலகுவாகப் பழி போடலாம். இந் நிலையிலேயே ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி சீரழிக்கப்பட்டு வருகிறது. இதனைத் தட்டிக் கேட்டு ஊழல் அதிகாரத் துஷ்பிரயோகம் என்பனவற்றிலிருந்து அதனை மீட்டு எடுத்து மலையகக் கல்வி முன் னேற்றத்திற்கு பயன் உள்ளதாக்குவது மலையக மக்கள் பெற்றோர் மாணவர் களினது கடமையாகும்.

சி. மதிமுகராஜன்

# யாரெனக் கண்டுணரும் ஞானம்

எண்பத்தி மூன்றினிலே
எங்கள் கழுத்தினிலே
கோரப்பல் பதித்து
குருதி குடித்த நரி
கொலையாகிப் போனதன்பின்
குட்டி நரி வளர்ந்து
குள்ளநரி யாகியது

குள்ளநரியானதன் பின்
குள்ளத்தனம் உயர
எங்கள் குருதி வேண்டி
எங்கும் அலைகிறது அது
இங்கும் அலைகிறது

நாமிருந்த கூட்டுக்குள்
நள்ளிரவில் உட் புகுந்து
நாம் பெற்ற குஞ்சுகளை
நசுக்கி கொலை செய்யும்
தீ பொரித்து குஞ்சுகளை
தீயிற்கு இரையாக்கும்

தீயிற்கு இரையாக்கும்
தீய நரி வீதியிலே
தீய நரி வீதியிலே
தீய நரி வீதியிலே!

சுடுகாட்டின் வாசலிலே
சுற்றி வந்த நரியாரின்
பல்லிடுக்கில் தொங்குகின்ற
பிணத் தசையில் புழு நெளியும்
புழு நெளியும் பல்லோடு
புறப்பட்ட நரியார்க்கு
சனம் காவல் பொறுக்காது
சனத் தோடும் இருக்காது

இன்றிந்த மண் மீது
எழுந்தாடி ஊளையிட்டு
அப்பன் நரியாரின்
ஆசையெலாம் தன்னிடத்தில்
இருத்தி நிறைவேற்ற
எத்தனிப்பு செய்கிறது

எத்தனிப்பு செய்யும் நரி
எங்களைக் குறி வைக்கும்
குறி வைக்கும் நரியாரின்
குரல் மெல்ல மேலோங்கும்!

ஓடுகின்ற மாவலியை
ஒடுக்கவோர் திட்டமிட்டு
மறித்ததன் பின்னாலே
மகத்தான கதைகளுக்கு
மகத்தான கதைகளெங்கும்
மனம் ஆறாத் துயர்களுண்டு

காடேகச் சொன்ன நரிக்
கதையினிலே கருணையில்லை
நாம் வாழ்ந்த பூமியிலே
நமக்கேதும் உரிமையில்லை
ஆனையிட்ட நரி சாக
அடுத்த நரி இன்று, மேல்
கொத்மலை திட்டமெனக்
குரல் கொடுத்து நிற்கிறது

குரல் கொடுத்து நிற்குமந்த
குறிக்கோளில் சூழ்ச்சியுண்டு
யாழ்ப்பாண நூலகத்தின்
சாம்பலிலும் சாட்சியுண்டு!
குழந்தைகளே குஞ்சுகளே
கூடி வரும் குருவிகளே
வீட்டிலே இல்லை இன்று
வேட்டைக்குப் போகிறேன் நான்

கோபுரத்தின் மீதிருந்து
குள்ள நரி வரக் கூடும்
மாய நரி வரக் கூடும்
மயக்கங்கள் தரக் கூடும்
மாய நரி செய்கையெலாம்
மனதாலே கண்டுணரும்
ஞானத்தை உங்களுக்கு
நான் வழங்கிச் செல்கிறேன்.

கூட்டுக்கு முன்னின்று
குள்ள நரியார் வந்தால்
தீட்டிய வாளெடுத்து
தீரமுடன் போராடும்
போர்க் குணத்தை உங்களுக்கு
போட்டு விட்டுச் செல்கிறேன்

மாய நரி வலையில்
மயங்கி விழக் கூடாது
மயங்கி விழக் கூடாது
மண்டியிடல் ஆகாது
மயங்கி விழக் கூடாது
மண்டியிடல் ஆகாது!

இராகலை பன்னீர்

# சர்வதேச தேயிலை மாநாடு நடிகர்கள் இல்லாத நாடகம்

தேயிலை சம்பந்தமான சர்வதேச மாநாடு, கண்காட்சி போன்ற பல நிகழ்வுகள் கடந்தமாதம் கொழும்பில் நடைபெற்றது. தேயிலை உற்பத்தியில் முக்கிய பங்கை வகிக்கும் தொழிலாளர் கள் பற்றிய விடயங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படாமலே அந்நிகழ்வு கள் நடாத்தப்பட்டுள்ளன.

தேயிலை உற்பத்தியாளர்களை ஊக்குவித்து தரமான தேயிலையை உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் உலகெங்கும் இளந்தலைமுறையினரை தேனீர் குடிப்பவர்களாக மாற்ற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டு பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இலங்கையின் தேயிலை தொழிலின் வள்ர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் பற்றி அறியப்படாமல் தேயிலையை தரமாக உற்பத்தி செய்வது பற்றியும், சர்வதேச ரீதியாக சந்தைப்படுத்துவது பற்றியுமே கொழும்பில் நடைபெற்ற தேயிலை பற்றிய மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளன.

தேயிலைத் தோட்டங்களை நடத்தும் தனியார் கம்பெனிகளின் நடவடிக்கை களினால் தேயிலைத் தொழில் வீழ்ச்சி யடைந்துள்ளது. அதாவது அக்கம் பெனிகள் அவற்றின் குறுகியகால லாபத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு தோட்டங்களிலுள்ள வளங்கள் அனைத்தையும் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. தேயிலை தோட்டங்களையும் வளங்களையும் பாதுகாத்து நீண்டகாலத்திற்கு தேயிலைத் தொழிலை உயிர்ப்புடன் வைத்திருப்பது பற்றி தனியார் கம்பெனிகளுக்கு அக்கறை இல்லை. தொழிலாளர்களின் நலன்கள், சம்பள உயர்வு உட்பட அவர்களுக்கான ஊக்குவிப்புகளை அவை மறுத்து வருகின்றன.

இதைவிட அரச உடமையில் இருக்கும் தோட்டங்கள் மூடப்படவுள்ளன. அத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்களின் எதிர்காலம் பற்றி எவ்வித முடிவும் இல்லை.

இவ்வாறு இலங்கையின் தேயிலைத் தொழிலின் எதிர்காலம் இருளாய் இருக்கும் போது தேயிலையைத் தரமாக உற்பத்தி செய்வது எப்படி? சர்வதேச சந்தையில் இடம் பிடிப்பது எப்படி?

இவற்றையெல்லாம் கவனிக்காமல் கொழும்பில் நடைபெற்ற மாநாடு, கண்காட்சி நிகழ்ச்சிகள் தமாசாகவும், களியாட்டமாகவுமே இருந்தன. இதுபோன்ற மாநாடுகள் கண்காட்சிகள் சுரண்டிச் சுகபோகம் அனுபவிப் போரு க்கு வழமையான பொழுது போக்கு போன்றதாகும். ஆனால் சுரண்டப்பட்டு வரும் மலையகத் தொழிலாளர் களின் அன்றாட வாழ்வு இன்னும் இருளில் தடுமாறிக் கொண்டே போகின்றது. இது பற்றி மலையகத் தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்ட வழிகளில் சிந்திப்பது அவசியம்.

# கருவளத்தை அழிக்கும் மனிதவள நிதியத்தை நிராகரிப்போம்

பெருந்தோட்ட சுகாதாரத்திற்கு பெருந்தோட்ட மனிதவள நிதியம் (Plantations Human Resources Trust) என்ற அமைப்பு பொறுப்பாக இருக்கிறது. தோட்டப்புற மக்களுடைய அடிப்படை யான சுகாதாரவசதிகளான மலசல கூடங்கள், வடிகால் அமைப்பு, குடிநீர் வசதி போன்றவற்றில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. ஆனால் நிரந்தர குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளை மட்டும் திட்டமிட்டவாறு மேற்படி நிதியம் செய்து வருகிறது.

தோட்டத் தொழிலாளப் பெண்களை ஏமாற்றி பிழையான பிரசாரங்களால் தூண்டியும் நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளை பெ.ம. நிதியம் செய்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. அக்குற்றச் சாட்டை அந்நிதியம் அடியோடு மறுக்கிறது. ஆனால் பத்திரிகை யாளர்களும் எழுத்தாளர்களும், ஆய்வாளர்களும் மலையகத் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டவர் களும் ஆதாரபூர்வமாக அதனை நிரூபித்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் குடும்பத் திட்ட சபை, இலங்கைக் குடும்பத் திட்ட சபை, இலங்கைக் குடும்பத் திட்ட சேவைகள் ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து பெ.ம. நிதியம் தோட்டங்களில் குடும்பத் திட்ட சத்திர சிகிச்சைகளை மிகவும் வேகமாகவும், பரவலாகவும் செய்துவரு கிறது.

அந்நிதியத்தில் இலங்கை அரசாங்க, தொழிற்சங்க, தோட்டக் கம்பனி என்பனவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் தோட்டப்புற மனித கருவளத்தை அழிப்பதற்கு துணைபோகிறார்கள் என்றால் அந்நிதியம் எதற்கு? சில தோட்டங் களில் பெண்கள் கர்ப்பமாக இருக்கிறார்களா என்பதை அறிய பலாத்காரமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கர்ப்பம் தரித்துள்ள பெண்களின்

தொடர்ச்சி 11ம் பக்கம்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 செப்டம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 61

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## கிழக்கின் அமைதியைக் குலைக்க சதி

கடந்த மாதம் மூதூரில் இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட பதற்றம் தணிவதற்கு முன்பு சம்மாந்துறையில் இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் தமிழ் முஸ்லிம் மக்களிடையே மீண்டும் பெரும் பதற்றம் நிலவுகிறது. இக்கொலைகளை புலிகள் இயக்கத்தினரே செய்திருக்க வேண்டும் என இலங்கை அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். சில முஸ்லிம் தலைவர்களும் புலிகள் மீதே குற்றஞ்சாட்டுகின்றனர். முஸ்லிம்கள் தாக்கப்பட்டவுடன் அல்லது கொலை செய்யப்பட்டவுடன் தமிழ் மக்கள் மீதான இனவன்முறைகள் புரியப்படுவதும் அதற்கு பதிலாக முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகள் புரியப்படுவதும் வழமையாகிவிட்டது. இக்கொலைகள் புலிகள் இயக்கத்தால் புரியப்படவில்லை என்று அவ்வியக்கத்தால் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ள போதும் முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வு மேலோங்கியே இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் இயக்கங்களை சேர்ந்த பலரும் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். அக்கொலைகளுக்கும் விடுதலை புலிகளே பொறுப்பு என்று பாதுகாப்பு பிரிவினரும் தமிழ் இயக்கங்களும் கூறுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். இன்னொரு பக்கம் தமிழ் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்படுகின்றனர். தமிழ்த் தேசியவாதத்தால் பாதிக்கப்படுகின்ற முஸ்லிம் மக்களை குறுகிய முஸ்லிம் தேசியவாதத்தின் பக்கம் வைத்துக்கொண்டு அரசியல் பிழைப்பு நடத்துவதில் முஸ்லிம் தலைவர்கள் எனப்படுபவர்கள் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றர். பாதிக்கப்படுகின்ற முஸ்லிம் மக்களை தொடர்ந்து அவர்களது பிடியில் வைத்திருக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பல முஸ்லிம் தலைவர்கள் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களாகவும். சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் கருத்து தெரிவிப்பவர்களாகவும் இருக்கின்றனர். இது இன்று நேற்றல்ல. ஜனாதிபதி பிரேமதாஸ காலத்திலிருந்து இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படும் ஒவ்வொரு யோசனைக்கும் எதிரான நிலைப்பாட்டை எடுப்பவர்களாக முஸ்லிம் தலைவர்கள் இருந்து வந்துள்ளனர். பேரினவாதிகளும் முஸ்லிம் மக்களை காட்டி மிகவும் வசதியாக பல தீர்வு யோசனைகளையும் தட்டிக்கழித்து வந்துள்ளனர்.

அதேபோன்று கிழக்கு மாகாணம் நீண்டகாலமாகவே தமிழ்-முஸ்லிம் இன பதற்றம் நிறைந்த மாகாணமாக இருந்து வருகிறது. இதற்கு பின்னால் பேரினவாதிகளும், குறுகிய முஸ்லிம் தேசியவாதிகளும் இருந்து வருவது வெளிப்படையானது. முஸ்லிம் மக்களை அச்சம் கொண்டவர்களாக ஆக்கிய பொறுப்பை தமிழ்த்தேசியவாதம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இதனை பேரினவாதிகளும் குறுகிய முஸ்லிம் தேசியவாதிகளும் பயன்படுத்துகின்றனர். அத்துடன் கிழக்கில் தமிழ்-முஸ்லிம் பதற்ற நிலைமைக்கு பின்னால் வெளிநாட்டு சக்திகள் இருப்பதாகவும் சந்தேகிக்கப் படுகின்றது.

கிழக்கில் தமிழ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதும் நாளாந்த நிகழ்வாகியுள்ளது. சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்கள் அவர்களின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்க மேற்படி நிகழ்வுகள் துணைபுரிகின்றன.

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கின்றபோதும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்கு காரணமானவர்களைக் கண்டறியவும். கொலைகள் இடம்பெறாது நிலைமைகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவு பொறுப்புடையதாகும். கொலைகளை யார் செய்திருக்கலாம் என்ற ஊகத்தில் கருத்துக்களை தெரிவிப்பதை அரசாங்க பாதுகாப்பு பிரிவு தவிர்க்க வேண்டும்.

அதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலாக மறுப்பறிக்கைகள் மட்டும் போதுமானவையல்ல. ஆயுதங்களை வைத்திருக்கும் பலமான ஒரு அமைப்பு என்ற ரீதியில் முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல், தமிழ் இயக்க உறுப்பினர்களின் கொலைகள் தொடர்பாக பொறுப்பாக பதிலளிக்க கடமைப்பட்டுள்ளது. அதற்கு பொறுப்பான சக்திகளை அம்பலப்படுத்துவதும் புலிகள் இயக்கத்திற்கு இயலாத காரியமல்ல.

பேரினவாத சக்திகள் வடக்குடன் கிழக்கை இணைக்கக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றன. சிங்கள மேலாதிக்கத்திற்கு தான் துணைபோகவில்லை என்று அமைச்சர் ஹக்கீம் கூறினாலும் குறுகிய முஸ்லிம் தேசியவாத சக்திகளின் செயற்பாடுகள் பேரினவாதிகளின் செயல்களுக்கு உரம் சேர்க்கின்றன. வடக்கு கிழக்கு இணைப்பைத் தடுக்கவும், தற்போதைய சமாதான சூழ்நிலையை குழப்பவும் கிழக்கு மாகாண முஸ்லிம்களையும், சில தமிழ் இயக்கங்களையும் பேரினவாத சக்திகள் திட்டமிட்டு பயன்படுத்துகின்றன. தற்போதைய சமாதான முயற்சிகளை குழப்பும் எண்ணத்துடன் செயற்படும் வெளிநாட்டு சக்திகளும் கிழக்கில் அமைதியீனத்தை ஏற்படுத்தும் விருப்பதுடன் செயற்படுகின்றன.

புலிகள் இயக்கம் மீதே குற்றம் சாட்டப்பட்டபோதும் சில ஆட்கடத்தல்களும் கொலை களும் வேறு சக்திகளால் செய்யப்பட்டதாக ஏற்கனவே அம்பலப்படுத்தப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. ரெலோ உறுப்பினர் ஒருவரின் கொலைக்கும் புலிகள் இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று ரெலோ இயக்கத்தலைமை அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே இச்சம்பவங்களுக்கு பின்னால் வேறு சில சக்திகள் இருக்கலாம். அவ்வாறெனில் அவற்றை அம்பலப்படுத்த எல்லோரும் பாடுபட வேண்டும்.

சமாதான சூழ்நிலையில் கிழக்கில் தமிழ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப் படுவதால் கிழக்கு தமிழ் மக்கள் சமாதான நடவடிக்கைகளில் அதிருப்தியடையலாம். முஸ்லிம்கள் கொல்லப்படுவதால் முஸ்லிம் மக்களும் அதிருப்தியடையலாம். அவ்வாறான விளைவு பேரினவாதிகளுக்கும், சமாதான முயற்சிகளை குழப்ப எண்ணம் கொண்டுள்ள வெளிநாட்டு சக்திகளுக்கும் சாதகமாகவே அமையும்.

சமாதான முயற்சிகளை குழப்பவும், தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளை நிராகரிக்கவும் பேரினவாதிகளும் சமாதான விரோதிகளும் கிழக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்டு செயற்படுகின்றனர் என்பது தெளிவாகிறது. முஸ்லிம் மக்களின் அமைதியீனத்தை அச்சக்திகள் மிகவும் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

இதனை விளங்கிக்கொண்டு சமாதான விரும்பும் சக்திகளும் தமிழ் மக்களின் தலைமைகளும் கிழக்கு மாகாணத்தில் பல நிதானமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தையும், அமைதியீனத்தைப் போக்கவும் அரசியல் தீர்விற்கு முஸ்லிம் மக்களை ஆதரவாளர்களாக இருக்கவும் திட்டமிட்டு செயற்பட வேண்டும். அதேபோன்று முஸ்லிம் தலைமைகள் தத்தமது வாக்கு வங்கிகளுக்காக தமிழர் விரோதத்தை முஸ்லீம் மக்கள் மத்தியில் ஓங்கச் செய்யக் கூடாது. உண்மையாகவே ஒரே பேரினவாதத்தாலும் அதன் எசமானர்களான ஏகாதிபத்தியத்தாலும் சொந்த மண்ணில் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்கள் தமக்குள் அடிபடாது இருப்பதை உறுதி செய்வது அவசியம். ஐக்கியப்பட்டு பேரினவாத ஒடுக்குமுறைக்கும் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கும் எதிராகப் போராடமுன்வரல் வேண்டும்.

- ஆசிரியர் குழு -

# தேசிய இனப்பிரச்சினையின் பின்னால் மறைந்திருக்கும் வர்க்க நலன்கள்

**வெகுஜனன்**

தேசிய இனப்பிரச்சினை என்பது இனங் களுக்கிடையிலான முரண்பாடுகளின் வெளிப்பாடாகும். இவ் இன முரண்பாடு கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் தொட்டு பல்வேறு படிநிலைகளிலே வளர்க்கப் பட்டு வந்திருக்கிறது. எண்ணிக்கையில் பெரும்பான்மையான பௌத்தசிங்கள தேசிய இனத்தின் பெயரால் எண்ணிக் கையில் குறைந்த தமிழ் முஸ்லீம் மலையக தேசிய இனங்கள் மீதும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்கள் மீதும் பாரபட்சம் புறக்கணிப்பு துவேசம் வன்மம் ஒதுக்குதல் என்பனவற்றை செய்து வந்திருக்கிறது.

இவ்வாறு பௌத்தசிங்கள தேசிய இனத்தை வழி நடத்தியோரின் சிந்தனையும் செயலும் ஏனைய இன மொழி மதத்தவர் மீதான வக்கிரப் போக்கிற்கு வழிவகுத்தது. இதன் காரணமாக இலங்கையில் அன்னிய கொலனித்துவத்தையோ ஏகாதி பத்தியத்தையோ எதிர்த்து ஒரு தேசிய விடுதலை இயக்கம் அல்லது ஒரு சுதந்திரப் போராட்ட இயக்கம் கூட தோற்றுவிக்க முடியவில்லை. அந்நியருக்கு கால் பிடித்து கைபிடித்து கடிதம் எழுதிக் கெஞ்சிய நிலையிலேயே தமக்கு விசுவாசிகளான சிங்கள உயர்வர்க்க மேட்டுக் குடியினரிடம் வெள்ளை எசமானர்கள் ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிக் கொடுத்தும் சென்றார்கள். அதற்கான நன்றிக் கடனை நிலவுடமை முதலாளித்துவ வழிவந்த குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாகச் செலுத்தி வருகின்றன.

இவர்கள் ஜனநாயகம் சுதந்திரம் வாக்குரிமை பாராளுமன்ற மரபுகள் என வாய்கிழியக் கத்தினாலும் ஆண்டபரம்பரையினர். இது எங்கள் நாடு. "பௌத்தத்தைப் பாதுகாக்கும் புனிதக் கடமை" போன்ற பெரும் தேசிய வெறி அகங்காரத்துடன் தான் தேசிய இனப்பிரச்சினையை கொடிய யுத்தமாக மாற்றிக் கொண்டார்கள். இவ்வாறு ஆக்கியவர்கள் தனியே பௌத்த சிங்கள ஆட்சி அதிகார மோகம் கொண்ட அரசியல் தலைமையினர் மட்டுமல்ல. புத்திஜீவிகள் கல்வியாளர்கள் பத்திரிகைத்துறையினர் கலை இலக்கியத்தளங்களைச் சோந்தோர் ஆசிரியர்கள் உள்ளிட்ட சிவில் சமூகத்தினரின் பெரும் பகுதியினர் இவ் இன முரண்பாட்டை ஊக்குவித்து வளர்த்தவர்கள் என்பதை எவ்வகையிலும் நிராகரிக்க முடியாது.

இவ்வாறு இவர்கள் இன முரண் பாட்டை வளர்த்து பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையாக்குவதன் பின்னால் இருந்த அடிப்படை நோக்கும் போக்கும் என்ன என்பதே காணவேண்டிய முக்கிய விடயமாகும். கடந்த நூற்றாண்டின் நிகழ்வுகளை வரிசைப் படுத்திப் பார்க்கும் போது பௌத்த

> **பௌத்த சிங்கள பேரினவாத வளர்ச்சியின் பின்னால் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய உயர்வர்க்க நலன்கள் தேவைகள் வளர்ச்சிகள் இருந்து வந்துள்ளமையைக் கண்டு கொள்ள முடியும்.**

சிங்கள பேரினவாத வளர்ச்சியின் பின்னால் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய உயர்வர்க்க நலன்கள் தேவைகள் வளர்ச்சிகள் இருந்து வந்துள்ளமையைக் கண்டு கொள்ள முடியும்.

கடந்த நூற்றாண்டு ஆரம்பமாவதற்கு முன்பே கத்தோலிக் மதத்தினர் மீது காழ்ப்புணர்வும் எதிர்ப்பும் காட்டப்பட்டு தாக்குதல்களும் தொடுக்கப்பட்டன. அவை சிறிய அளவில் இடம் பெற்ற தாகக் கூடறப்பட்டபோதிலும் அதனுள் உயர் வர்க்க நலன்களே உள்ளடங்கி யிருந்தன. அதன் பின் இத்தகைய வர்க்க நலன்களின் பிரதிபலிப்பை 1915 ம் ஆண்டின் சிங்கள-முஸ்லீம் மோதலின் போது வெளிப்படையாகக் காண முடிந்தது. அங்கே பௌத்த சிங்கள நிலவுடமை சக்திகளின் முதலாளித்துவ வளர்ச்சிக்கும் அரசியல் அரங்கிற்கான எழுச்சிக்கும் அவ் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறை பயன்படுத்தப் பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் சிங்களப் பெரும் தேசியவாதத்தலைமையுடன் ஒட்டி உறவாடி நின்ற தமிழர் பழமைவாத மேட்டுக் குடியினர் வர்க்க சாதிய நிலைகளுக்கு ஊடாகவே தமக்கிடையி லான உறவை ஐக்கியமாகக் கொண் டனர். அதன் பின் மலையாளி களுக்கு எதிரான இனவாத இயக்கமும் அதன்

மற்றொரு வளர்ச்சியாக மலையகத் தமிழர்களுக்கு எதிரான கேடுகெட்ட புறக்கணிப்பு நிராகரிப்பு என்பனவும் வர்க்க நலன்களைப் பேணிப் பாது காத்து நிலைநிறுத்தும் பாதையிலேயே முன்னெடுக்கப்பட்டன.

1935 ம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கிலே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கு அடிப்படையாக இருந்த உள்நோக்கம் தெற்கிலே உள்ள தமது வளமான நிலங்களை நில மற்றசிங்கள மக்களுக்கு கொடுக்க வேண்டிய அபாயக்கட்டத் தைத் திசை திருப்பிக் கொள்ள வேயாகும். தேசபிதா என்றும் விவசாயத் தை விரிவு படுத்தியவர் என்றும் புகழப்படும் டி.எஸ்.சேனநாயக்காவும் அவரது ஆளும் வர்க்க மேட்டுக்குடி சகாக்களும் கிழக்கில்பாரிய திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்திக் கொண்டனர். ஒன்று நீண்டகாலத்தில் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களிடையே தீராப்பகைக்கு வழி வகுத்துக் கொண்டது. இரண்டாவது தமது வர்க்க நலன்களுக்கப் பங்கமில்லாத வாறும் ஆட்சி அதிகாரத்திற்கு சிங்கள மக்களின் அறியாமை கொண்ட ஆதரவைப் பெற்றுக் கொண்டதுமாகும். இதன் ஊடாக இலங்கையின் தரகு முதலாளித்துவ சக்திகள்தமது வர்க்க அடிப்படையை உறுதிப்படுத்தி வளர்த்துக் கொண்டதுடன் என் னென்றும் தங்களது இருப்பிற்கும் பாதுகாப்பிற்கும் அரசியலில் ஆட்சியதி காரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

சிங்களப் பெரும் தேசிய வாத அகங்காரத்துடன் உள்ளார்ந்த அடிப்படை களுடன். வளர்ச்சி கண்ட இலங்கையின் தரகு முதலாளித்து வத்தை ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதித்துவம் செய்து நின்றது. எனவே சுதந்திரம் எனக் கூறப்பட்ட காலத்திற்குப் பின்னாக வளர்ந்து வந்த தேசிய முதலாளித்துவ சக்திகளும் தமக்குரிய வர்க்க நலன்களைப் பாது காத்து விருத்தி செய்வதற்கு அரசியல் பிரதிநிதித்துவம் வேண்டி நின்றன. அதனையே எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா உரிய தருணத்தில் நிறைவு செய்யும் விதமாகத் தமது அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு நிகழ்ச்சி நிரலை முன்வைத்தும் கொண்டார். இச் சிங்கள தேசிய முதலாளித்துவம் தரகுமுதலாளித் துவத்திற்கு எதிரான போட்டியில் பௌத்த சிங்கள பெரும் தேசியவாதப் போக்கிலேயே பயணித்தது. அதன் முதல் நடவடிக்கையாக அமைந்ததே தனிச்சிங்கள ஆட்சி மொழிச் சட்டமாகும். சிங்கள தேசிய உணர்ச்சி மிக்க இச்சட்டத்தால் சாதாரண சிங்கள மக்கள் ஏமாற்றப்பட்ட அதேவேளை இலங்கையின் வளர்ந்து வந்த தேசிய முதலாளித்துவ வர்க்கம் தன்னை பொருளாதாரரீதியில் வலுப்படுத்தி அரசியல் அரங்கில் தனக்குரிய இடத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டது.

பாராளுமன்ற ஆட்சியில் தமது தரகு முதலாளிய இடத்தை இழந்த பெருமுதலாளி வர்க்கம் ஜே .ஆர். தலைமையில் பேரினவாதத்தை 1977ல் இருந்து ராணுவ ஒடுக்குமுறையாக்கி தமது வர்க்க நலன்களை விரிவுபடுத்திக்

> **ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் இருந்த உயர்வர்க்க மேட்டுக் குடியினரும் தேசிய இனப்பிரச்சினை யின் மறைவில் தத்தமது வர்க்க நலன்களைப் பல வழிகளில் விரிவுபடுத்தி வளர்த்து பேணிக்கொண்டனர். இதில் சிங்கள உயர் வர்க்க சக்திகளோடு மிக நெருக்கமாகி நின்றே இத்தமிழ் உயர் வர்க்க சக்திகள் வளர்ச்சி கண்டன.**

கொண்டது. அத்துடன் திறந்த பொருளதாரக் கொள்கை மூலம் ஏகாதி பத்தய நலன்களையும் பாதுகாத்து விரிவுபடுத்தியது. யுத்தத்தின் மூலம் பலமுனை வசதிகள் வாய்ப்புகள் வருமானங்களை உயர் வர்க்க நலன்களாகப் பெற்றுக் கொண்ட சக்திகள் ஐ. தே .கட்சியின் ஆட்சியிலும் பொ.ஐ.முன்னணி ஆட்சியிலும் தாராளமாகக் காணப்பட்டது.

அவ்வாறே ஒடுக்குமுறைக்கு உள்ளான தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் இருந்த உயர்வர்க்க மேட்டுக் குடியினரும் தேசிய இனப்பிரச்சினை யின் மறைவில் தத்தமது வர்க்க நலன்களைப் பல வழிகளில் விரிவுபடுத்தி வளர்த்து பேணிக்கொண்டனர். இதில் சிங்கள உயர் வர்க்க சக்திகளோடு மிக நெருக்கமாகி நின்றே இத்தமிழ் உயர் வர்க்க சக்திகள் வளர்ச்சி கண்டன. அதேபோன்று தான் முஸ்லீம்கள் மலையகத்தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட உயர் வர்க்கத்தினர் தமது வர்க்க நலன். இருப்பு. வளர்ச்சி என்பன வற்றைப் பாதுகாத்து வந்தனர். இவை விரிவாக நோக்கத்துக்கவை யாகும் .

தேசிய இனப் பிரச்சினையால் தேசிய இனங்கள் மத்தியில் வெறுப்பும் விரக்தியும் பகை உணர்வுகளும் எண்ணெய் வார்த்து எரிய வைக்கப் பட்ட அதேவேளை அத் தேசிய இனங்கள் மத்தியில் உள்ள முதலாளித் துவ சுரண்டல் சக்திகள் தங்களது வர்க்க நோக்கங்களையும் நலன்களை யும் விரிவுபடுத்தி வளர்த்துக் கொண்டமையை வரலாற்றில் அடை யாளம் காணமுடிகிறது. அதேவேளை சாதாரண உழைக்கும் மக்களான சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களை உள்நோக்கங்கள் கொண்ட பேரினவாத குறுந் தேசியவாத உயர் வர்க்க சக்திகள் ஏமாற்றி பிரச்சினை களின் வர்க்க ஊற்று மூலங்களைக் காணவிடாது தடுத்தும் வருகின்றனர். பெரிய சிறிய தேசியவாத வட்டங்கள் வரைந்து அதற்குள் நின்று ஒருவரை ஒருவர் எதிர்த்து கூக்குரல் இட்டு கீழ்த்தரமான இனவாதம் மதத்துவேஷம் கக்கி நிற்குமாறு திசைகாட்டி வருகிறார்கள். அரசியல் தலைமைகள் தொட்டு மதத்தலைமை ஊடாக ஊடாகங்களின் சொந்தக்காரர்கள் வரை தத்தமது உயர்வர்க்க நலன்கள் தேவைகளை நிறைவேற்ற தேசிய இனப்பிரச்சினையை நன்கு பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை ஒருகணம் சிந்தித்துப்பார்த்தால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகும்.

www.padippakam.com



# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும்

தற்போது வடக்கு கிழக்கில் இரண்டு பரிபாலனங்கள் இருப்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். அரசாங்கத்தின் நிர்வாகம் இயங்குவதாக கூறப்படுகின்றபோதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இராணுவத்தையும் அதன் பாதுகாப்பையும் பிரதானமாகக் கொண்ட பேரினவாத இராணுவ நிர்வாகமே இயங்குகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பெயரளவில் அரசாங்க பரிபாலன நிறுவனங்கள் இருக்கின்றபோதும் புலிகள் இயக்கத்தை மையப்படுத்திய போர்க்கால நிர்வாகமே இயங்குகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டு வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் சுயாட்சியையும். அங்கிருக்கும் முஸ்லிம் மக்களினதும் சிங்கள மக்களினதும் சுயாட்சியும் உறுதிசெய்யப்படும் நோக்கில் அமைய வேண்டிய நிர்வாகம் தற்போதைய இராணுவ. போர்க்கால நிர்வாகத்திற்கு மாறான ஜனநாயக பூர்வமான சிவில் நிர்வாகமாகவே இருக்க முடியும்.

அந்த அரசியல் தீர்வும். நிர்வாகமும் ஏற்படுத்துவதற்கான திசையில் தற்போதைய இராணுவ. போரர்க்கால நிர்வாக முறைகளில் படிப்படியாக சிவில் நிர்வாக அம்சங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் போரினால் அழிந்த பிரதேசங்களாகவே இருக்கின்றன. அந்த வடக்கு கிழக்கை கட்டியெழுப்பவும். அங்கு புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியேற்றவும் இராணுவ (அரசாங்க) நிர்வாகத்தின் ஒத்துழைப்பும் அவசியம்! புலிகளின் நிர்வாகத்தின் ஒத்துழைப்பும் அவசியம்! இவ்விரண்டு நிர்வாகங்களை ஒரேயடியாக முற்றாக செல்லுபடியற்ற தாக்குவதும். இராணுவத்தையும் புலிகளையும் அவர்களின் பிரதேசங்களாக கொண்டிருக்கும் பிரதேசங்களின் மீதான கட்டுப்பாட்டைக் கைவிடும்படி கேட்பதும் காலத்திற்கு முந்திய நடவடிக்கைகளாகவே இருக்கும்.

அரசியல் தீர்வு காணப்பட்டு ஜனநாயகப் பூர்வமான சிவில் நிர்வாகத்தை நிலைநிறுத்தும் வரை அப்பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பவும். அப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியேற்றுவதையும் தள்ளிப்போட முடியாது. சமஷ்டி முறையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் இயக்கமும் ஐ.தே.மு. அரசாங்கமும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளன. அந்த அடிப்படையிலேயே வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும். அப்பிரதேசங்களில் புனரமைப்பு. மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இடைக்கால நிர்வாக முறை அவசியமாகியது. புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளது. ஐ.தே.மு. அரசாங்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை புலிகள் இயக்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளது: இதனைப் புலிகள் இயக்கம் பரிசீலித்து வருகிறது.

இந்நிலையில் இடைக்கால நிர்வாக முறை அவசியமா இல்லையா என்று விவாதிப்பதை விட இடைக்கால நிர்வாக முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி சிந்தித்து முடிவெடுப்பது அவசியமாகிறது.



இராணுவ நிர்வாகமும். புலிகளின் நிர்வாகமும் ஒன்றையொன்று ஏற்றுக் கொள்ளும் அடிப்படைகளை கொண்டவைகளாக இல்லை. அரசாங்கமும் புலிகள் இயக்கமும் சம்பந்தப்பட்டு வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும். மீள்குடியேற்ற புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மேற்படி இராணுவ. புலிகள் நிர்வாகங்கள் போதுமான பொதுப் பொறிமுறைகளை கொண்டவையாக இல்லை. அரசியல் தீர்வு காணப்படுவதற்கு முன்பாக இராணுவமும். புலிகள் இயக்கமும் அவரவர்களின் பிரதேசங்களில் கட்டுப்பாட்டை கைவிட வேண்டும் என எதிர்பார்க்க முடியாது.

இராணுவ கட்டுப்பாட்டு பகுதியின் நிர்வாக முறையில் சிவில் நிர்வாக அம்சங்களை ஏற்படுத்தியும் விடுதலை புலிகள் இயக்க கட்டுப்பாட்டுப் பகுதியிலும் சிவில் நிர்வாக அம்சங்களை ஏற்படுத்தியும் அவ்வப்பகுதிகளில் அவ்வவ் நிர்வாக முறைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை பொதுவாக ஒருங்கிணைக்கக்கூடிய முழு வடக்கு கிழக்கு பகுதிக்குமான பொதுவான நிர்வாக முறையை ஏற்படுத்துவதற்கான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதாவது இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவ நிர்வாகத்திலிருந்து மீட்டு முழுமையான சிவில் நிர்வாகத்தை நிலைநிறுத்தும் நோக்கில் படிப்படியாக சிவில் நிர்வாக அம்சங்களை ஏற்படுத்தி அப்பகுதியில் புனரமைப்பு. மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியும். அதேபோன்று புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலும்ஜனநாயக அடிப்படையைக் கொண்ட சிவில் நிர்வாக அம்சங்களை படிப்படியாக ஏற்படுத்தி அப்பகுதியில் புனரமைப்பு. மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு



இயல்புவாழ்க்கையை ஏற்படுத்த முடியும். இவ்வாறு இரண்டாக இயங்கும் நிர்வாக முறைகளை இணைக்கக்கூடிய வடக்கு கிழக்கு முழுவதற்குமான இடைக்கால நிர்வாக முறையை ஏற்படுத்தலாம்.

அத்துடன் வடக்கு கிழக்கில் சிங்கள மக்களின் மீள் குடியேற்றம். அப்பகுதி புனரமைப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள அம்மக்களின் பங்களிப்புடனான நிர்வாக ஏற்பாடுகள் அவசியமாகின்றன. அதேபோன்று வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் புனரமைப்பு என்பவற்றை கவனிக்கவும் நிர்வாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்த நிர்வாக ஏற்பாடுகளும் முழு வடக்கு கிழக்கிற்குமான பொதுவான இடைக்கால நிர்வாக முறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அதன்கீழ் இயங்க வேண்டும்.

**நமது அரசியல் நிருபர்**

வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாக முறையில் அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள். முஸ்லிம். சிங்கள மக்களுடைய நலன்களை பிரதிபலிக்கக் கூடியவாறு பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். அந்நிர்வாக முறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதித்துவம் கணிசமான அளவு இருக்க வேண்டும் என்பதை நிரா கரிக்க முடியாது. அவை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

இவ்வேளையில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களுக்கான தனியான இடைக்கால நிர்வாக சபையொன்று அமைக்கப்பட வேண்டும் என்பது நடைமுறை சாத்தியமற்ற மிகையான கோரிக்கையாகும். அது அடிப்படையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டதாகும்.



அமைக்கப்பட வேண்டிய இடைக்கால நிர்வாக முறையின் அதிகாரங்கள் யாவை என்பதும் அதனால் கையாளப்பட வேண்டிய விடயங்கள் யாவை என்பதும் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். வடக்கு கிழக்கை மீளக்கட்டியமைப்பதற்கான. மக்களை மீள்குடியேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் அதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளவும். செலவிடவும் அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

இந்த இடைக்கால நிர்வாக முறை நடைமுறையிலுள்ள நாட்டின் அரசியல் யாப்பிற்கு உட்பட்டு இயங்க வேண்டுமா இல்லையா என்பது இன்னொரு விவாதமாக முன்னெடுக்கப்படுகிறது. அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின்படி இயங்காமல் இருக்கும் மாகாண சபைக்கென தனியான நிர்வாக ஏற்பாட்டை ஜனாதிபதி பிரகடனப்படுத்தி பாராளுமன்ற தீர்மானமொன்றினால் உறுதி செய்யலாம். ஆனால் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிக்கா எதிர்ப்பதுடன். இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்தவதை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். எனவே இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கான பிரகடனத்தை அவர் செய்வாரென எதிர்பார்க்க முடியாது.

சுதந்திரக் கட்சியுடன் மிகவும் நெருக்கமான ஜனாதிபதி சட்டத்தரணி எச்.எல்.டி. சில்வா இடைக்கால நிர்வாக ஏற்பாடு என்பது அரசியல் யாப்பிற்கு முரணானதும். தனிநாட்டிற்கு வழி சமைக்கும் 'மாயப்பாம்பு' ஆகும் என்று கூறியுள்ளார். இவ்வாறு சில அரசியல் யாப்பு பற்றி நிபுணர்கள் பாதகமான கருத்துக்களையே முன்வைத்து வருகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா ஒத்துழைக்காத பட்சத்தில் அரசியல் யாப்பிற்கு அமைவாக வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த முடியாது. ஐ.தே.மு. அரசாங்கம் அரசியல் யாப்பிற்கு அமைவாக இடைக்கால நிர்வாக முறையை ஏற்படுத்துவது என்பது சாத்தியமானதாகப்படவில்லை.

நடைமுறையிலுள்ள மாகாணசபை முறைக்கு மாறானள சுயாட்சி முறையினை ஏற்படுத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியும் என்பது ஒரு பொதுவான எதிர்பார்ப்பாகும். அவ்வாறான ஒரு தீர்வு எய்தப்படும்போது நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பை மாற்றுவதன் மூலமே அதனை நடைமுறைப்படுத்த முடியும். இனப்பிரச்சினைக்காக அரசியல் தீர்வு அடிப்படையில் தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பிற்கு மாறானதாகவே இருக்க முடியும் என்பதால் அதனை அடைவதற்கு முன்னர் இருக்கின்ற இடைக்காலத்தில் ஆற்றப்பட வேண்டிய கருமங்களும். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் அரசியல் யாப்பிற்கு மாறாக இருப்பது தவிர்க்கப்பட முடியாததாகும்.

அரசியல் தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகள் எல்லாமே அரசியல் யாப்பிற்கு அமைவாக இருக்கப் போவதில்லை. அவற்றை அவ்வப்போது முகம் கொடுக்க. ஐ.தே.மு. அரசாங்கம் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அரசியல் தீர்வை காண்பதற்கான எல்லா நடவடிக்கைகளிலும். குறிப்பாக இடைக்கால நிர்வாக முறையை ஏற்படுத்துவதற்கு எதிராக இயங்கும் சிஹலஉறுமய. ஜே.வி.பி. உட்பட பேரினவாத சக்திகளை முறியடிக்கும் விதத்தில் இடைக்கால நிர்வாக முறையை வலியுறுத்தும் மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இடைக்கால நிர்வாக முறையை ஜனாதிபதி ஏற்றுக் கொள்வதற்கு அழுத்தங்களை கொடுக்கும் மக்கள் இயக்கங்களும் முன்னெடுக்கப்படுவதும் அவசியம்.

சமாதானத்திற்கு எதிரானவர்கள் சட்டங்கள். சம்பிரதாயங்கள் போன்ற எல்லாவற்றையும் அவர்களுக்கு சாதகமாக கொண்டு சமாதான நடவடிக்கைகளை எதிர்க்கின்றார்கள். சமாதானத்தை ஆதரிப்பவர்களும் எல்லாவிதமான சாதகமான அம்சங்களையும் பயன்படுத்தி சமாதான முயற்சிகள் கைவிடப்படாது முன்னெடுக்கப்படப்பட வேண்டும்.

இடைக்கால நிர்வாகமுறையை ஏற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முரண்பட்ட நிலை மாற்றப்பட வேண்டும். அதற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் ஐ.தே.மு. அரசாங்கமும் வழிவகைகளை தேடிக்கொள்ளும் பொறுப்பைக் கொண்டுள்ளன. ●

# கதிர்காமர் காட்டும் விசுவாசம்



முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் இந்தியா சென்றிருந்தபோது வெளியிட்டகருத்துக்கள் அடிமைத்தனத்தின் உச்சத்தை வெளிப்படுத்திக் காட்டின. ஏற்கனவே இலங்கையின் பௌத்தசிங்களப் பேரினவாதிகளது அடிமை விசுவாசியாக இருந்து சேவை செய்து வரும் கதிர்காமர் இப்போது அந்த விசுவாசத்தை இந்திய மேலாதிக்க வாதிகளின் முன்னால் வாலாட்டி நின்று காண்பித்திருக்கிறார்.

அண்மையில் இந்தியத் தலைநகரில் தற்போதைய ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்திய பின் இந்து நாளிதழுக்கு பேட்டி அளித்திருக்கிறார். அதில் விடுதலைப் புலிகளினாலும் அவர்களது தனிநாட்டுக் கோரிக்கையாலும் இந்தியாவிற்கு நேர இருக்கும் ஆபத்தைப் பற்றி அழுது புலம்பி இருக்கிறார். அது மட்டுமன்றி இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் சட்டப்படி தலையிடும் உரிமை இந்தியாவிற்கு உண்டு .என்றும் இந்திய ஆளும் கொள்கை வகுப்பாளர்களுக்கு இலவச சட்ட ஆலோசனையும் வழங்கி இருக்கிறார். இந்தக் கோள் மூட்டிக் கந்தர் இந்திய விசுவாசம் தெரிவித்து நிற்பதன் உள் நோக்கம் என்ன என்பது பலருக்குப் புரியவில்லை.

ஏனெனில் கதிர்காமர் அடிப்படையில் அமெரிக்க விசுவாசி. தொழிலாலும் சட்டஉழைப்பாலும் முற்றான அமெரிக்க தாசன். இந்த மனிதரை ஜனாதிபதிக்கு அடையாளம் காட்டி நற்சாட்சிப்பத்திரம் வழங்கி அமைச்சராக்குவதற்கு வழி வகுத்தவர் மறைந்த நீலன் திருச்செல்வம். இவர்களுக்குடையிலான உறவு மேட்டு குடி உயர்வர்க்க புத்தி ஜீவிகளது உறவாகும். அங்கே இன மத மொழி என்பது கிடையாது. பொதுவானதும் முதன்மையானதுமான உறவு உயர் வர்க்க உறவேயாகும்.

இதே கதிர்காமர் பொதுசன முன்னணியின் வெளிவிவகார அமைச்சராக இருந்து அந்தப் பேரினவாத ஆட்சிக்கு பல வழிகளிலும் உதவியவர் சர்வதேசிய அளவில் புலிகள் மீதான தடைக்கு நாட்டுக்கு நாடு சென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டவர் சந்திரிகா அம்மையாரின் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு என்னும் நிலைப்பாட்டை கைவிடச் செய்து யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பதை முன்னெடுக்க வைத்ததில் கதிர்காமர் தனது பாத்திரத்தை திறம்படச் செய்து கொண்டார். அதன் மூலம் பொதுசன முன்னணி வீழ்ச்சி காணவும் சந்திரிகா அம்மையார் அபகீர்த்திக்கு உள்ளாகவும் கதிர்காமர் அளித்த பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

அத்தகைய கதிர்காமர் தனது அமெரிக்க விசுவாசத்தை கறுப்புக் கோட்டுப்பையின் உள்புறத்தே மறைத்துக் கொண்டு டெல்லியில் இந்திய விசுவாச உரையும் பேட்டியும் வழங்கியுள்ளார். இந்த தமிழ்த் தெரியாத தமிழ் மேட்டுக்குடி மனிதருக்கு தமிழ் மக்களோ ஏனைய முஸ்லீம் மலையகத் தேசிய இனங்கள் அடக்கப்படுவதோ பற்றிக் கவலைகிடையாது. அவரது அக்கறை யாவும் பௌத்தசிங்களப் பேரினவாதிகளுக்கும் அமெரிக்கா ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அடிமை சேவகம் செய்வதுதான். அதன் தொடர்ச்சியாகவே இப்போது இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு கோள் மூட்டி தனது வாலை ஆட்டி இந்திய விசுவாசம் காட்டி நிற்கிறார். இது வரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அனுராபண்டார நாயக்கா. மங்களசமரவீர. சரத் அமுனுகம போன்றோர் டில்லிக்கு காவடி எடுத்து புலி எதிர்ப்பு ஆட்டம் ஆடி இந்தியாவை வரும் படி வருந்தி அழைத்தனர். அதன் பின் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அங்கு சென்று இந்திய மேலாதிக்க வாதிகளுக்கு பாதபூசை செய்து இலங்கைக்கு வர இது தான் தருணம் எனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

யாவற்றையும் அவதானித்து வருகின்றோம். உரிய நேரத்தில் தோன்றி ஆட்கொள்வோம் அஞ்ச வேண்டாம் எனஅருள் வாக்கு அளித்து டக்ளசை அனுப்பி வைத்தனர் டெல்லி கடவுளர். இப்போது கதிர்காமர் அங்கு சென்று சாட்டாங்கமாக வீழ்ந்து வணங்கி உங்களுக்கு அங்கு ஆபத்து. உடன் வாருங்கள். வந்து சங்காரம் செய்யுங்கள் என்று முழங்காலில் நின்று செபம் செய்து அழைக்கின்றார் கதிர்காமர். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது அவருக்கு தேவையற்றவையாகும். அவரது விருப்பும் வேணாவும் புலிகளை ஒழிப்பதும் பேரினவாத ஆட்சியை நிலைநிறுத்துவதுமாகும். ●

படிப்பகம்

www.padippakam.com



# கோக்கா-கோலாவின் தண்ணீர்க் கொள்ளை

"நதிகளை இணைக்க வேண்டும்", "நதிகளைத் தேசியமயமாக்க வேண்டும்" என்ற ஓட்டுக் கட்சிகளின் வெற்றுக் கூச்சல் காது கிழிபடும் அளவு கேட்டுக் கொண்டிருக்கும் வேளையில். நாட்டு நடப்போ. இந்த வெற்றுக் கூச்சலுக்கு நேரெதிராக இருக்கிறது. நதிகள் மட்டுமல்ல. நிலத்தடி நீர்வள ஆதாரங்கள் கூட தனியார்மயமாக்கப்படுகிறது.

இத்தனியார் மயத்தை எதிர்த்த போராட்டங்கள் நாட்டின் பல பகுதிகளில் நடைபெறத் தொடங்கியிருக்கின்றன. அதிலொன்றுதான் தமிழகத்திலுள்ள சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கிராம மக்கள் கோகோ-கோலாவை எதிர்த்து நடத்தி வரும் போராட்டம்.



சிவகங்கையில் கோகோ-கோலா குளிர்பான நிறுவனத்துக்கு எதிராக போராடும் மக்கள்.

சிவகங்கை மாவட்டம் படமாத்தூரில் அமெரிக்க குளிர்பான நிறுவனமான கோகோ- கோலா தன் உற்பத்தி ஆலையை நிறுவியிருக்கிறது. ஒரு நிமிடத்திற்கு 600 பாட்டில்கள் நிரப்பும் திறன் கொண்ட உற்பத்தி பிரிவு முதற்கட்டமாக செயற்படத் தொடங்கியுள்ளது. இதற்காக இராட்சத போர்வெல் இயந்திரங்களைப் பயன்படுத்தி பூமிக்கடியில் 3000 அடி ஆழத்திற்கு துளையிட்டு நாளொன்றுக்கு ஒன்பது லட்சம் லீட்டர் தண்ணீரை உறிஞ்சத் தொடங்கியுள்ளது.

சிவகங்கை. இராமநாதபுரம். விருதுநகர் மாவட்டங்களின் குடிநீர் தேவையை ஓரளவிற்கு நிவர்த்தி செய்து வருவது வைகை நதிநீர் கூட்டுக் குடிநீர் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரே கோடை காலங்களில் பற்றாக்குறையாகி மக்கள் அவதியுறும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். இந்நிலையில். வைகை நதியின் நிலத்தடி நீரைக் கொள்ளையிடும் கோகோ கோலாவின் திட்டம் முற்றாக அம்மக்களின் குடிநீரைக் கபளீகரம் செய்து அடிமடியை அறுப்பதற்கு ஒப்பாகும்.

கோகோ- கோலா நிறுவனம் இப்படி நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்கு சட்டரீதியான அனுமதியைப் பெற்று ள்ளதா என்றால். அதுதானில்லை.

படமாத்தூரில் உள்ள சக்தி சர்க்கரை ஆலை தன் உற்பத்தி தேவைக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றுள்ளது. இது குளிர்பானம் தயாரிப்பதற்கோ. குடிநீர் விற்பனை செய்வதற்கோ அனுமதியோ அல்ல. இந்த அனுமதியை முறைகேடாக பயன்படுத்திக் கொண்டுதான் கோகோ- கோலா தன் குளிர்பான தயாரிப்பைத் தொடங்கி யுள்ளது. இது அப்பட்டமான பகற்கொள்ளை: சட்டவிரோத நடவடிக்கை.

பெப்சி. கோக் நிறுவனங்களின் கோவை - ஈரோடு மாவட்ட 'ஏஜெண்ட்.' 'தேசபக்த திலகம்' அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கத்துக்குச் சொந்தமானதுதான். இன்று வைகை நதியின் நிலத்தடி நீரைச் சூறையாடும் கோகோ- கோலா ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளிலும் தன் சூறையாடலை அத்துமீறி நடத்தியுள்ளது. கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் சிற்றூர் வட்டத்திலுள்ள பிளாச்சிமடாவில் சென்ற ஆண்டு கோக் நிறுவனம் உற்பத்தி ஆலையைத் தொடங்கியது. நாளொன்றுக்கு 15 லட்சம் லிட்டர் தண்ணீரை சிற்றூர் புழா ஆற்றின் நிலத்தடி நீரிலிருந்து கபளீகரம் செய்து வந்தது. இதனாலும் ஆலையிலிருந்து வெளியேறிய கழிவுகளாலும் அப்பகுதி களில் கிணற்று நீரின் தன்மை மாசுபடத் தொடங்கி. குடிக்க நீருமின்றி. உடல்நல பாதிப்புகளுக்கும் அம்மக்கள் உள்ளாகினர். இக்கிராம மக்கள் கோகோ- கோலா நிறுவனத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம். சாலை மறியல் முதலான பல்வேறு வழிகளிலும் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர்.

பிளாச்சிமடா கிராம மக்களின் வழியில் சிவகங்கை மாவட்ட மக்களும் கோகோ- கோலா நிறுவனத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் மீது தடியடி நடத்தி ஏறக்குறைய 2000 பேருக்கு மேல் பொய் வழக்கும் போட்டுள்ளது. தமிழகப் போலிசு.

மதுரை. சிவகங்கை மாவட்டங்களில். தா. கிருட்டிணன் கொலையை வைத்து ஆதாயமடையத் துடிக்கும் ஆளும் கட்சியும். எதிர்க்கட்சியும். பரபரப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளும். அப்பகுதி மக்களின் உயிராதாரமான இப்பிரச்சினையைப் பற்றி வாயைத் திறக்கவில்லை. தமிழக அரசோ. இச்சட்ட விரோத நடவடிக்கையைக் கண்டு கொள்ளாததோடு கோக் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தங்களைப் போட்டு கதவை அகலத் திறந்து வைத்துள்ளது.

இந்நிலையில். மனு கொடுப்பதாலோ. சட்ட வரம்புக்குட்பட்ட போராட்டங்களாலோ இப்பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது. கோக். பெப்சி குளிர்பானங்களைப் புறக்கணிக்கும் இயக்கத்தை நாடு முழுவதும் பிரச்சார இயக்கமாகக் கொண்டு செல்வதும். இதை உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டமாக விரித்துச் செல்வதுமே இன்றைய தேவை. அதன் மூலமாகவே சக்தி சர்க்கரை ஆலை முதலான தேசத்துரோக ஆலைகளை முற்றுகையிடுவதற்கான மக்கள் சக்தியைத் திரட்ட முடியும். நம் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் முடியும்.

நன்றி : **புதிய ஜனநாயகம்**
யூலை 2003.

# யாழ் குடாநாட்டு இயற்கை வளங்கள்

**இயற்கைவள ஆர்வலர் க. நடனசபாபதி**

### திராட்சைப் பயிர்:

திராட்சைக் கொடிகளை விளைவித்து திராட்சைப் பழங்களைத் தோட்டக்காரர்கள் பெறுகிறார்கள். பழங்களை உள்ளூர்ச் சந்தையிலும் தலைநகர் பகுதியிலும் விற்றுப் பயன்பெறுவதே அவர்களின் நோக்கமாக இருக்கிறது. பழங்களைப் பலநாட்களுக்கு பாதுகாக்கும் முறையும் இப்பழச் சாற்றிலிருந்து பானம் தயாரிக்கும் முறையையும். வைன் பானம் தயாரிக்கும் முறையையும் மக்கள் நன்கு அறிந்தால் தமது வருவாயைப் பெருக்கக்கூடிய தொழிலில் ஈடுபடலாம்.

இது போலவே பனை. தென்னை ஆகியவற்றிலிருந்துகள் இறக்குவதோடு சமூகத்திடையே வெறியை மட்டும் ஊட்டும் தொழிலில் ஈடுபடாமல் சர்க்கரை-சீனி-கற்கண்டு தயாரிப்பில் ஈடுபட்டால் பயனுள்ளதாயிருக்கும்.

### மணல் வளம் :

குடாநாட்டைச் சூழ்ந்துள்ளது கடல்பரப்பாகும். கடற்கரையிலிருந்து கிடைப்பது மணலாகும். இந்த மண்லை வீடுகள் கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்துகின்றனர். கடல் மணல் துணிக்கைகள் ஆற்று மணலைக் காட்டிலும் மிகவும் சிறியவை. ஆகையால் கடல் மணல் வீடு கட்டுவதற்கு பயன்படுத்த இயலாது. துணிக்கைகள் சற்று பெரியதாக இருந்தால் மட்டும் கட்டிடவேலைக்குப் பயன்படுத்தலாம். பெரிய துணிக்கையாக இருந்தால் மட்டுமே இடைவெளிகளில் சிமெந்து புக ஏதுவாக இருக்கும். ஆகவே மிகவும் சிறிய துணிக்கைகளைக் கொண்ட கடற்கரை மணலை வேறு தொழிலிற்குப் பயன்படுத்தலாம். ஆய்வுகள் பலவற்றை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் கண்ணாடித் தொழிலிற்கு இந்த வல்விபுரக் கோவிலை அண்டிய பகுதியில் காணப்படும் மணல் உகந்தது என்று கருதுகிறார்கள். இந்தக் கடல்மணலைக் கொண்டு பலகைக் கண்ணாடி (Plate glass) தயாரிக்க முடியும். இத்தொழிற்சாலைக்குப் பாரிய முதலீடு தேவை. இதனை அரசாங்கமோ அல்லது பெரிய முதலீட்டு நிறுவனமோ மட்டுமே மேற்கொள்ள இயலும். இந்தக் கடல் மணல் இருக்கும் பகுதியில் ஆமனக்கு நடலாம். இதிலிருந்து பெறும் நெய் கைத்தொழிலுக்கும் வைத்தியத்திற்கும் பெரிதும் பயன்படுகிறது. சிலர் சமைப்பதற்கும் இதனை பாவிக்கிறார்களாம். தானியங்கி வாகனங்களுக்கு (Automobiles) பயன்படுத்தும். மசயமநழடை தயாரிப்பில் ஆமணக்கு நெய் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தகைய மண்வளத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தினால் நிரம்பிய பலனை அடைய முடியும்.

வேப்பமர இலை. காய் போன்றவை கிருமி. நுளம்பு கொல்லிகளாகப் பயன்படுத்தலாம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தமது ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர். இத்தகவல்களின் அடிப்படையாக ஆராச்சி களை முன்னெடுத்து செல்லலாம்.

### உயிர்வாயு :

வீட்டுக் கழிவுப்பொருள்களிலிருந்தும். வீட்டில் வளர்க்கும் கால்நடைகளின் கழிவுகளைக் கொண்டும் உயிர்வாயு தயாரிக்கும் உத்தி மக்களிடையே பரவத் தொடங்கி விட்டது. இவ்வாயுவைக் கொண்டு ஒளியையும். வெப்பத்தையும் பெறலாம். இவ்வாயுவை மக்கள் சரிவரப் பயன்படுத்த வழிவகைகள் செய்யப்படுமாயின் ஓரளவு மின்சக்தி. எரிசக்தி ஆகியவற்றை மீதப்படுத்த முடியும். இந்த வாயு உற்பத்தியை நகர. மாநகர. கிராமிய கழிவுப் பொருட்களிலிருந்து தயாரித்து விநியோகிக்கும் திட்டத்தை உள்ளூராட்சி சபைகள் பொறுப்பாக மேற்கொள்ளலாம். இதனால் உள்ளூராட்சி சபைகளுக்கு மேலதிக வருவாய் கிடைக்கும்.

### பனைவளம் :

பனை வளம் குடாநாட்டில் மிகுதியாக உள்ளது. யுத்தத்தால் அழிவுகள் ஏற்பட்ட போதிலும் பனையில் இருந்து பல்வேறு உற்பத்திப் பொருட்களைப் பெற முடியும். பனை ஓலையிலிருந்து அழகிய அலங்காரப் பொருள்களோடு அடவியன்கட்டு போன்ற தற்போது அருகிப் போன கைவினைப் பொருட்களையும் தயாரித்து உல்லாசப் பயணிகளைக் கவரலாம். பனைத் தும்புகளிலிருந்து தூரஜகை (Brushes) தயாரிக்கலாம். இதனையும் ஒரு தொழிலாக மேற்கொள்ளலாம். இத் தொழிற்சாலை சிலருக்கு வேலை வாய்ப்பைத் தரும். தும்புகளை எங்கு பெறுவது என்பதற்குப் பதில் ஓலையின் மட்டையிலிருந்து பெறலாம். ஆனால் தற்போது பனை மட்டைகள் வேலியடைக்கப் பயன்படுத்துகிறார்கள். அந்நாட்களில் கிணற்றுப் பட்டைகள் பனம் ஓலை பனைமட்டைகள் கொண்டு தயாரிக்கப்பட்டன. நன்கு உலர்ந்த மட்டைகள் விறகாகவும் பயன்படுகின்றன. பனை அபிவிருத்திக்கான சபை பலகாலமாக இயங்கி வருகிறது. ஆனால் இச்சபை பனைமர நடுகையை ஊக்குவிப்பதோடு நெருங்காலமாக இருந்து வரும் தொழில்களையே அபிவிருத்தி செய்து வருகிறது. புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் புதிய தொழில்நுட்ப உத்திகளைப் புகுத்தவும் முயல்வதாகத் தெரியவில்லை. இதற்கு இச்சபையோர் கூறும் காரணம் தம்மிடம் போதிய நிதிவசதி இன்மையே என்கின்றனர். இரசாயினிகள் இத்துறையில் தமது கவனத்தைத் திருப்ப வேண்டும். தாவரவியலாளர்கள் பனையில் உயரம் குறைந்த இனத்தை உருவாக்கும் வழிவகைகளைக் காண்பித்தல் வேண்டும். உயரம் குறைந்த இனம் உருவாக்கப்பட்டால் உயர ஏறி இறங்கும் போது ஏற்படும் விபத்துக்கள் தவிர்க்கப்படலாம். மேலும் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதும் சுலபம். பனங்கிழங்கு எடுப்பது வளர்ந்து வரவுள்ள பனைமரத்தை வளரவிடாது பயன்பெறும் முயற்சியாகும். பனைமர வளர்ச்சியை ஊக்குவிக்கும் இயக்கம் கிழங்கு பெற மரவளர்ச்சியை தடுக்கும் செயலுக்கு எதிராக ஓர் இயக்கம் நடத்த வேண்டும். கிழங்குக்கென 40மூ விதைகளை மட்டும் ஒதுக்கி மிகுதி 60மூதை பனை வளர்ப்புக்கென ஒதுக்கினால் பனை வளர்ப்பு இயக்கம் வெற்றி பெறும். பனைவளர்ப்புக்கு குறுகிய உயரமரங்களை அறிமுகம் செய்ய வேண்டும். பனை மரங்களை வேலியோடு நட்டு வந்தால் இடநெருக்கடியைத் தவிர்ப்பதோடு வீடுகள் தோறும் இம்மரங்களை ஏற்படுத்தலாம். மேலும் பாளைகளிலிருந்து சாற்றை (கள்ளை)ப் பெறும் உத்தி பாடத் திட்டத்தில் புகுத்தப்பட்டால்-இத்தொழிற் கான சான்றிதழ்கள். டிப்ளோமாக்கள் வழங்கினால் இத்தொழில் நுட்பத்தில் மக்களுக்கு ஆர்வமும் அக்கறையும் ஏற்படும். இதனால் இத்தொழில் ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்கே உரியது என்னும் எண்ணமும் மக்கள் மனதிலிருந்து சிறிது சிறிதாக அகன்று விடும். இதனை இத்தொழிலில் ஈடுபடுவோர் தொகையை அதிகரிக்க உதவும். பனைவள ஆராய்ச்சிக்கென ஒரு நிதியத்தை நிறுவி. ஆராய்ச்சி மேற்கொள்வோருக்கு மானியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும். இந்த மானியத் தொகையைப் பெற பல்கலைக்கழகங்களில் செயல்படும் இரசாயன. தாவரவியல் திணைக்களங்களைச் சார்ந்தோரும். விவசாய ஆராய்ச்சிப் பகுதியினரும் விவசாய பட்ட மேற்படிப்புத் தாபனத்தவரும் தகுதியாகும் முறையில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

இதற்குத் தேவைப்படும் நிதியை தாமே உருவாக்கிக் கொள்ளலாம். அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். அபிவிருத்தியை நாட்டமாகக் கொண்ட சர்வதேச நிறுவனங்களிலிருந்தும் திரட்டலாம். தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்களிலிருந்தும் சேகரிக்கலாம். விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கென நிதியுதவி வழங்கும் பல நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் உதவியையும் தகுந்த முறையில் பெற்று பனைவள அபிவிருத்திக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம். விஞ்ஞானிகளையும் இத்துறையில் ஊக்குவித்து கௌரவிக்கலாம். பனம்பாளைகளிலிருந்து பெறும் சாற்றை நவீன முறையில் நொதிக்கச் செய்யும் வழி முறைகள் கண்டு பிடிக்கப்பட வேண்டும். பனங்கள்ளை புட்டிகளில் அடைத்து நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கும் முறையும். இதிலுள்ள மூக்கைத் துளைக்கும் நெடியை அகற்றுவதற்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

வாழைமரத்துப் பட்டை. வாழைகள். அதன் தண்டு. கிழங்கு ஆகியவற்றைக் கொண்டு சரியான வர்த்தகப் பலனைப் பெற முயலவில்லை. இவையனைத்தும் எவ்வித பயனும் பெற்றுக் கொள்ளப் படாமலேயே வீசி எறியப்படுகின்றன. இதனைத் தவிர்க்க வேண்டும். தோல் பதனிடும் தொழிலைக் குடாநாட்டில் மேற்கொண்டால் தோல் தொழிலில் வல்லவர்களின் தொழில் நுட்ப ஆற்றலைப் பயன்படுத்தி தோல் சம்பந்தப்பட்ட தொழிலை உயர் நிலைக்குக் கொண்டு வரலாம். பல ஆண்டுகளுக்கு முன்பு வடமராட்சி-கரவெட்டிப் பகுதியில் தோல் பொருள் தயாரிப்புத் தொழிற்சங்கம் ஒன்று இயங்கி வந்தது. ஆனால் இப்பொழுது இது செயலிழந்து காணப்படுகிறது.

தோலக்கட்டி என்று அச்சுவேலிக்கு அருகாமையில் உள்ள இடத்தில் பழச்சாற்றிலிருந்து பெறும் பானத் தொழிற்சாலை இயங்கி வந்தது. இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லிகிறஷ் மிகவும் பிரபலமாக விளங்கியது. ஆனால் இப்போது இத்தொழிற்சாலை அங்கு ராணுவ நிலைகொள்ளலால் இல்லாது போய்விட்டது.

இத்தொழிற்சாலைகள் மீண்டும் இயங்கத் தொடங்கினால் பலருக்கும் தொழில்வாய்ப்புக் கிடைக்கும்.

இப்பிரதேசத்தில் அரசின் பாரிய தொழிற்சாலைகளாக இயங்கிவந்த காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலையும். பரந்தனில் இருந்து வந்த இரசாயனத் தொழிற்சாலையும் தற்போது இல்லை. இதனால் பலரும் வேலைவாய்ப்பை இழந்து போயினர். இத்தொழிற்சாலைகளில் வெளிவரும் தயாரிப்புகளின் ஒரு பகுதி தொழிற்சாலையில் அமைத்திருக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள் அமைக்கப்படாதபடியால் வீணாவதைக் காணக்கூடியதாகவிருந்தது. இதனால் சுற்றாடல் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. வீணே வெளியேறும் பொருள்களைச் சுவாசிப்பதனால் மக்களும் பல்வேறு நோய்களை எதிர்நோக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இத்தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்கபடும்போது இவற்றுக்கான பாதுகாப்பு ஏற்படுத்துதல் வேண்டும்.

தச்சுத்தொழில். உலோகத்தொழில். இரத்தினத்தொழில். நெசவுத்தொழில் ஆகிய போதிக்கக்கூடிய ஆசிரியர்கள் இருப்பதனால் இந்தத் தொழில்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் தொழில்நுட்ப கல்லூரிகளையும். பல்கலைக்கழகங்களையும் காண்கிறோம். இந்நெறிகளுக்கு பல்வேறு வகுப்பினரும் பேரார்வம் காட்டி. சேர்ந்து கற்கின்றனர். ஆனால் பனைசீவற் தொழில். தோல் கொண்டு தயாராகும் தொழில் ஆகியனவை போதிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு ஏற்படுத்துவது சிரமம் என்ற காரணத்தால் இத்தொழில்கள் பாடசாலைப் பாடத் திட்டத்தில் புகுத்தப்படவில்லை. இதன் காரணமாக இதற்கென தொழில்நுட்பக் கல்லூரிகளோ உயர்கல்வித் தகைமைகளைப் பெறப் பல்கலைக்கழகங்களோ இல்லை. இவற்றுக்கான கற்றை நெறியைக்கொண்ட பாடநெறிகளைப் புகுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதன் விளைவாக குறிப்பிட்ட

தொடர்ச்சி 11ம் பக்கம்...

**அவசியமற்ற அந்நியப் பொருட்களைப் பகிஷ்கரித்தல் வேண்டும்.**
**உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.**
**உலகமயமாதலின் நாசங்கள் மக்களுக்கு உணர்த்தப்படல் வேண்டும்.**

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்காவின் கொலைக்கரங்கள் மீண்டும் கதிரியக்க ஆயுதங்கள்!

1991ம் ஆண்டு ஈராக்கிற்கு எதிரான போரில் அமெரிக்கா {டிப்ளீற்றெட் யூரேனியம{ (டி.யூ) எனப்படும் கதிரியக்கம் கொண்ட யூரேனியத்தாலான வெடியோடுகளை (ஷெல்) பயன்படுத்தியிருந்தது. நேரடியான அணு



ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சிறுவனின் பிரேதத்தை தாங்கிய வண்ணம் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுதத்தாக்குதல் பெரிய பிரதேசம் மொன்றில் உடனடியான அழிவையும் பின்னர் நீண்டகாலாத்திற்கு மனிதருக்கு மிகவும் தீங்கான கதிரியக்கத்தையும் கொடுக்கும். இப்போது பயன்படுத்தப் படுகிற இந்த ஆயுதங்கள் குறித்த இலக்குகளைத் தாக்கி அழித்து விடுகின்றன. பின்னர் ஆயுதத்தின் சிறியபகுதிகளிலிருந்து கதிர்வீச்சு நீண்ட காலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

சோவியத் யூனியனில் 1995ல் சேர்னோபில் அணுசக்தி நிலயத்தில் நடந்த விபத்தின் பின்விளைவான தாக்கத்தினின்று அதன் அயற் பிரதேசம் இன்னமும் மீளவில்லை. கதிரியக்கம் சாவையும் கொடிய புற்றுநோயையும் மட்டுன்றிப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளிலும் உயிரணுவில் மாற்றங்களை ஏற்படுத்திப் பிறவியிலேயே அங்கவீனர்களாக்கிவிடும்.

அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமிப்புக் குள்ளக்குவது பொருளதாரச் காரனங் கருக்கும் அப்பிராந்தியத்தில் அமெரிக்க-இஸ்ரேல் மேலாதிக்கத்தை நிலை நிறுத்தவும் மட்டுமல்ல. எதிர்காலப் போர் முறைகட்கும் ஒரு பரிசோதனைக் களமாகவும் அது தனது 1991ம் ஆண்டுப் போரையும் இந்த ஆண்டின் போரையும் பாவித்துள்ளது. இதன் மூலம் அணு ஆயுதங்கள் என்று சொல்லிக் கொள்ளாமலே அணு ஆயுதங்களின் தீய விளைவுகள் பலவற்றைத் தரக்கூடிய ஆயுதங்களை அமெரிக்கா பரிட்சித்து அதன் விளைவுகள் பற்றிய அறிவு மூலம் ஆயுதங்களை மேலும் வலுப்படுத்த முடிகிறது.

முற்குறிப்பிட்ட கதிரியக்கம் கொண்ட ஆயுதங்களைப் பாவித்த அமெரிக்க அரசாங்கம் அவற்றின் தீய விளைவுகளை முற்றாக மறுத்து வந்துள்ளது. எனினும் 1991 போரில் ஈடுபட்ட ஏழு லட்சம் அளவிலான அமெரிக்கப் படையினரில் அரைவாசிப் பேர் பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈராக்கிய மக்கள் குறிப்பாகக் குழந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நேரடியான பாதிப்பு மட்டுமல்ல இந்த ஷெல்கள் விழுந்த பகுதிகளில் விளைந்த மரக்கறிகளை உண்பதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. நீரிலும் காற்றிலும் கதிரியக்கம் பரவுகிறது.

இம்முறை 1991 போல பாலைவனப் பகுதிகளையொட்டிக் குண்டு வீசாமல் பத்தாத் நகரை அண்டிய பகுதிகளிலும் பத்தாத் மீதும் இந்த ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன இதனால் பக்தாத் மக்கள் மட்டுமில்லாமல் அமெரிக்கப்படைகளும் அதன் நேச அணியினரின் படைகளும் பாதிக்கப்படுகின்றனர்.

அமெரிக்கப் படையினருக்கு ஆதரவாக 1100 டச்சுப் (ஒல்லாந்து) படையினர் அனுப்பப்பட உள்ளனர். அவர்கள் குவைத்தில் தங்கியுள்ள இந்த வேளையில் ஒல்லாந்தில் கதிரியக்கம் பற்றிய பிரச்சனை கடும் விவாதத்தைக் கிளறிவிட்டுள்ளது. பத்தாத் கதிரியக்கம் வழமையான சுற்றாடலில் உள்ளதிலும் பார்க்க 1000 முதல் 1900 மடங்கு வரை அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் அளந்துள்ளனர்.


அமெரிக்காவின் கூட்டாளியான பிரித்தானியா 1.9 தொன் டி.யூவைப் பாவித்தாக ஒப்புக் கொள்ளும் அதே வேளை அதை விடப்பல மடங்கு பிரயோகித்த அமெரிக்க எந்தத் தகவலையும் தர மறுத்து வருகிறது. அமெரிக்கா டி.யூ ஆயுதங்களைப் பாவிக்கவில்லை என்று கூறிய பிரதேசங்களிலும் அதைப் பாவித்ததற்கன ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த உண்மைகள் இப்போது அமெரிக்காவிலும் போருக்கு எதிரான இயக்கத்தை வலுப்படுத்தி வருகின்றன.

டி.யூ எதிரியைமட்டுமல்லாமல் ஆயுதத்தைப் பாவிக்கிறவரையும் கடுமையாகப் பாதிக்கிறது என்ற உண்மையை முன்னாள் அமெரிக்கப் படையினர் இப்போது நன்கு அறிவார்கள். அதே போன்று ஒல்லாந்து மக்களும் அறிவார்கள் என்பதானாலேயே இப்போது பிரச்சினை தீவிரமாகியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் பொறுத்த வரை அவர்களது படையினர் கூட அவர்களது ஆயுதங்களைப் போலப் பாவித்து விட்டு எறிவதற்கான வெறும் பண்டங்கள் தான்.

(ஆதாரம் தொழிலாளர் உலக சேவை (வேக்கேஸ் வேள்ட் ஸேவிஸ்) பிரசுரித்த ஸேரா ஃப்ளாடேஸ் எழுதிய இணையத்தளக் கட்டுரை.)

– சிறி –

## தாழ்த்தப் பட்டோர் தேர் இழுக்கத் தடை!



தமிழ் நாட்டின் தென் மாவட்டத்தின் தேவகோட்டை தாலுக்காவில் உள்ள கண்டாதேவி கிராமத்தில் அமைந்துள்ள கோவிலின் வருடாந்த தேர் திருவிழாவின் போது தாழ்த்தப் பட்ட(தலித்) மக்கள் தேர் இழுக்க அனுமதிக்கப்படவில்லை. உயர் சாதிமான்கள் என்போர் நீதிமன்றத் தீர்ப்பையும் உதாசீனம்

தொடர்ச்சி 11ம் பக்கம்.

# அரசியற் பாதையும் பெண்களின் தலைமைத்துவமும்

**சரியான சித்தாந்தமும் கொள்கையுமே பெண் கம்யூனிஸ்ட் தலைவர்களது தரத்தையும் பெண் விடுதலையின் பாதையையும் தீர்மானிக்கும்**

**தோழியர் பார்வதி (4)**

## அரசியற் பாதையும் பெண்களின் தலைமைத்துவப் பிரச்சினையும்

கம்யூனிஸ்ற் கட்சியின் சரியான சித்தாந்தமும் கொள்கையுமே. உருவாகும் பெண் கம்யூனிஸ்ற் தலைவர்களது தரத்தையும் பெண் விடுதலையின் பாதையையும் தீர்மானிக்கும். தோழர் லெனின் தலைமையிலான பொல்ஷெவிக் கட்சியின் சரியான அரசியற் பாதையே அலெக்ஸாண்டறா கொல்லன்வுாய். க்ளாரா ஜெற்கின். இனெஸ்ஸா ஆர்மாண்ட். க்ரூப்ஸ்கா போன்ற தலைவர்களை உருவாக்கியது. மார்ச் 8ம் நாளைச் சர்வதேச உழைக்கும் பெண்கள் நாளாக உலகெங்கும் கொண்டாடுவது என்ற கருத்தைக் க்ளாரா ஜெற்கின். றோஸா லக்ஸம்பூர்க் போன்ற கம்யூனிஸ்ற் பெண் தலைவர்கள் விருத்தி செய்யச் சரியான அரசியற் பாதையே காரணமாயிருந்தது. அம்முடிவு. 1910ம் ஆண்டு ஸ்வொக்ஹோமில் நடந்த முதலாவது சர்வதேச சோஷலிஸப் பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டது. அந்நாள். கம்யூனிஸ்ற்றுக்களால் மட்டுமன்றி. முதலாளிய வர்க்கத்தினராலும் (தமது சொந்த வழியில்) இன்றுவரை கொண்டாடப்படுகிறது.

"சீர்திருத்தமா புரட்சியா" என்ற தனது நூலில். பேண்ஸ்வைனை அம்பலப் படுத்தி எதிர்த்துப் போராடிய தோழியர் றோஸா லக்ஸம்பூர்க்கின் சரியான அரசியற் பாதையும் பின்னர் கவுட்ஸ்கிக்கு எதிரான போராட்டமுமே அவரை உலகக் கம்யூனிஸ்ற்றுக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தது. கட்சியில் மத்தியத்துவமும் சனநாயகமும் பற்றிய கேள்வி அவற்றின் இயங்கியல் உறவின் அடிப்படையிலும் அவை பிரயோகிக்கப்படும் ஒவ்வொரு நாட்டினதும் குறிப்பான நிலைமைகளின் கீழும் விளங்கிக்கொள்ளப்படாவிடின். கட்சி அமைப்பினுள் அதிகாரத்துவப் போக்குப் பெருகக்கூடுமென அவர் துணிவாக லெனினை எச்சரித்தார்.

முன்னைய சோஷலிஸ நாடுகளில் எதிர்ப்புரட்சி நிகழ்ந்தமையையும் மக்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிகரக் கட்சிகளை அதிகாரத்துவ முனைப்பு



நேபாள விடுதலைப் போராட்டத்தில் அணிதிரண்டுள்ள பெண்கள்

மீண்டும் மீண்டும் வலுவிழக்கச் செய்வதையுங் கருத்திற் கொண்டால். அவரது எச்சரிக்கை இன்றும் பொருத்தமானதாகவே தெரிகிறது.

இவ்வாறே. பண்பாட்டுப் புரட்சியின் வரவு கூறியதான. தோழர் மாஓவின் சரியான அரசியற்பாதையே பெண்களின் சீற்றத்தை அவிழ்த்துவிட்டது. வலது சாரித் தலைமையகத்திற் கெதிரான கிளர்ச்சியின் வரவு கூறியதான. லியூ ஷாஓசியைக் கண்டித்த முதலாவது சுவரொட்டி. ஒரு பெண்ணாலேயே முன்வைக்கப்பட்டது. தனது சாவு (அல்லது கொலை?) வரை முதலாளியப் பாதையாளர்கட்கெதிரான ஒரு உறுதிமிக்க போராளியாகுமளவுக்குத். தோழியர் ஜியங் சிங்கின் அடக்கப்பட்டுக் கிடந்த தலைமைத்துவ ஆற்றலைக் கட்டவிழ்த்து விட்டது. பண்பாட்டுப் புரட்சியே. தலைமையகத்தில் லியூ ஷாஓசி குடிபிருந்த காலத்தில். வேலையின்மைப் பிரச்சினை அபாயத்துக்கு முகங் கொடுக்கப் பெண்கள் வீட்டுக்குத் திரும்பவேண்டும் என்று ஆணையிட்டவர் அவரே என்பதும் நினைவிலிருத்தத் தக்கது. ரஷ்யாவிலும் சீனாவிலும் விபசாரம். சூதாட்டம். அழகுப்போட்டி போன்றவற்றை மீளக் கொண்டு வரும் விதமாகப் பெண்களை வணிகப்படுத்துவதைப் படிப்படியாக இயலுமாக்கியவை. வலதுசாரிக் கொள்கையான பெரெஸ்ற்றொய்க்காவும் டெங்கின் முதலாளியக் கொள்கையுமே.

மேற்சொன்ன அனைத்திற்கும் அப்பாற். பெண்கள் வெவ்வேறு வர்க்கங்களாகப் பிரிந்துள்ளனர் என்பதாற். கம்யூனிஸ்ற் பெண்களும் வலது. மத்திய. புரட்சிகரப் பாதையினராகப் பிரிவுபட்டுள்ளனர் என்பதை நாம் மறக்கலாகாது. வலது. மத்திய பாதைகளை ஏற்ற பெண்கள் கடைப்பிடித்த. உழைக்கும் பெண்கள் விடுதலைக்கு விரோதமான நிலைப்பாட்டின் விளைவாக. இப்பெண்கள் முடிவிற் தமது கட்சிகளுக்குள்ளேயே ஓரங்கட்டப்பட்டுத். தமது பெண்கள் விரோத நிலைப்பாட்டின் காரணமாகத் தமது கட்சிகட்கு வெளியிலும் அம்பலப்பட்டு நிற்க நேருகிறது. தமது நாட்டிற் புரட்சி செய்யத் தவறியபோதும். புரட்சிகரப் பாதையை ஏற்ற பெண்கள் விரும்பப்படுகின்றனர். இன்றுவரை பெண் கம்யூனிஸ்ற்றுகளில் அதிகம் விரும்பப்படுகிறவரான றோஸா லக்ஸம்பூர்க்கை எடுத்துக்கொள்வோம். தனது கனவு நனவாகுமுன் அவர் கொல்லப்பட்டார். இதன் விளைவாகக் கம்யூனிஸ்ற்றுகள் நடுவே. ஈடுபாடுமிக்க பெண் கம்யூனிஸ்ற் தலைவர் என்ற வகையில் அவர் மீதான மரியாதை மேலும் உயர்ந்தது. இவ்வாறே. சிறைப்படுத்தப்பட்ட நிலையிலும். தனது சாவு வரை மாஓவின் புரட்சிகரப்பாதையை ஆதரித்து நின்ற ஜியாங் சிங்கின் வன்மை மிக்க நிலைப்பாடே. அவரைத் தலை பணியாத வீராங்கனையாக்கியது. திரிபுவாதிகளுக்கெதிராகப் போரிடுகையிற். புரட்சிகரக் கம்யூனிஸ்ற் பெண்கள் எப்போதும் தாக்கும் நிலையிலேயே இருந்து வந்துள்ளமை கவனிக்க உகந்தது. இதற்கான காரணம். திரிபுவாதம் அதிகாரத்துவத்தைப் பெருக்குகிறது எனவும் அதனாற் தந்தைவழி விழுமியங்கள் வலுப்பெற்று அரசியலிற் பெண்கள் மறுதலிக்கப்படுகின்றனர் எனவும் அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர் என்பதாயிருக்கலாம்.

நேபாளம் போன்று வர்க்க வேறுபாடு போதியளவு கூர்மைபெறாத மூன்றாமுலக நாடொன்றில். உட்கட்சிப் போராட்டம். பால். இனம். பிரதேசம் ஆகிய அடிப்படையிலான போராட்ட வடிவிற் காணப்படலாம். எனவே. பால் சார்ந்த பிரச்சினை. வர்க்கப் பிரச்சனையின் முக்கியமானதொரு கூறாகிறது. இவ்வாறான இடத்து பால்சார்ந்த பிரச்சனையை ஒரு அயலான சக்தியென ஒதுக்கித் தள்ளுவது. ஈற்றில் வர்க்கப் போராட்டத்தையே பாதிக்கும்.

## தனியார் சொத்துடைமையும் பெண்கள் தலைமைத்துவப் பிரச்சினையும்

பெண் வெகுசனங்கள் புரட்சிகர இயக்கங்களிற் பங்கு பற்ற வெள்ளம் போல் வந்து தலைவர்களாகும் உள்ளார்ந்த ஆற்றலுடைய பெண்களை உருவாக்குகின்றனர் என்று திரும்வுந் திரும்வுங் காணப்பட்டுள்ளது. ஆயினும். புரட்சி முடிந்த பின்போ, தோல்வி கண்ட பின்போ. இவ்வெள்ளம் தலைவர்களாகக்கூடிய பெண்களோடு சேர்ந்து வற்றி விடுகின்றது. இவ்வாறான நிகழ்விற்கான பிரதானமான காரணம் தனியார் சொத்துடைமைக் கோட்பாடாகும். தனியார் சொத்துடைமை உள்ள வரை. எத்தனை சமூகப் புரட்சிகள் நடந்தாலும். பெண்கள். தனித்தனி வீட்டு வேலைகளைக் கவனிக்கவும் ஆண்களுக்காகத் தனியார் சொத்துக்களைப் பராமரிக்கவும் திரும்பிக் போக வேண்டிய தேவை இருந்தே தீரும். எனவே தான். கம்யூனிசத்தைச் சென்றடையும் வரை தொடர்ச்சியான புரட்சி என்ற கருத்தாக்கம். பெண்களுக்கு மூலோபாயப் பொருத்தப்பாடுடையது: ஏனெனில். அப்போதுதான். பெண் களின் ஆக்கத் திறனைக் கட்டவிழ்த்து விடும் வண்ணம் தனியார் சொத்துடைமை இல்லாதொழிக்கப்படும். இக்காரணத்தாலேயே. உலகின் புரட்சிகரக் கட்சிகள். கம்யூனிஸத்தைச் சென்றடைவதற்கான ஊக்கிகளின் பங்கை ஏற்குமாறு. புரட்சிகரப் பெண் கம்யூனிஸ்ற் தலைவர்களை விருத்தி செய்ய இசைவான ஒரு சூழலை உருவாக்குவதற்கு உணர்வுபூர்வமாக முயல்வது முக்கியமாகிறது. எனவே. பெண் கம்யூனிஸ்ற்றுக்களை விருத்தி செய்வது தொடர்பான பிரச்சினை தற்செயலான ஒன்றாக அமைய விடப்படாது. அவர்கள் உணர்வுபூர்வமாக ஊட்டமளிக்கப்பட்டுப் பண்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [17]

## இந்துத்துவ-இந்திய ஒட்டகம் தேடும் ஓட்டையாக கிழக்கு மாகாணம் அமையுமா?

"தமிழர்கள் தமது தேசிய விடுதலைக்காகப் போராடிப் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்களை இழந்த இந்த வேளையில் அதன் பயனை அநுபவிக்க முஸ்லீம்களை அனுமதிப்பதா. வீரம் விளைத்தவர்கள்தானே அதன் பயனை அனுபவிக்க வேண்டும்! பேரினவாத அரசாங்கம் இரண்டுடனும் அவ்வப்போது கூடி அமைச்சரவையில் சரியாசனம் செய்து ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த முஸ்லீம் அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப் புலிகளுடன் சரி சமமாக இன்னொரு தரப்பாக வீற்றிருக்க எப்படி ஏற்றுக் கொள்வது? வடக்குக் கிழக்கைத் தமிழர்களின் தாயகமென ஏற்றுக் கொண்டால், எவ்வாறு இலங்கையின் ஏனைய பகுதிகளில் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்கிறார்களோ அதே போல் வடக்குக் கிழக்கிலும் முஸ்லீம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ வேண்டியதுதானே? வடக்குகிழக்குக்கு வெளியே முஸ்லிம்களுக்கெதிராக சிங்கள இனவாதிகள் காடைத்தனம் செய்வதற்கெதிராக முஸ்லீம்கள் அதிகமாக வாழும் அப்பிரதேசங்களில் தனிஅலகு பற்றிப் பேசவோ. யோசிக்கவோ தயங்குபவர்கள் ஏன் வட-கிழக்கில் மட்டும் தனி அலகு பற்றிச் சிந்தித்துத் தீவிரமாகச் செயற்படுகிறார்கள்? தமிழ் மொழி மூலம் பேசும் முஸ்லீம்களையும் சேர்த்துத்தானே 'தமிழ் பேசும் மக்கள்' என அழைக்கும் போது முஸ்லீம்கள் தம்மை பிறிம்பாக மதரீதியாக ஏன் பிரித்துப் பார்க்கிறார்கள்? தமிழ் நாட்டில் மதரீதியாக இஸ்லாமியர். இந்துக்கள் என அழைத்துக் கொண்டாலும் அங்கெல்லாம் 'தமிழ் எங்கள் மொழி- இஸ்லாம் எங்கள் வழி' என்று கூறும் இஸ்லாமியர் தங்களைத் 'தமிழர்கள்' என்றே அடையாளப்படுத்துகின்றனர். அவ்வாறிருக்க இலங்கையில் மட்டும் ஏன் இவர்கள் தம்மை 'இஸ்லாமியத் தமிழர்' என அழைக்காமல் 'முஸ்லீம்கள்' என இன்னொரு தேசிய இனமாக பிரித்து நோக்க வேண்டும்'' இவ்வாறெல்லாம் தமிழ்த் தேசியப் புத்தி ஜீவிகள் முதல் தமிழ்ப் பழமைவாதிகள்வரை பலரும் பேசிக் கொள்வதைக் காது சூடேறும் வண்ணம் கேட்கக் கூடியதாகவுள்ளது.

'சிங்களப் பேரினவாதமும் தமிழ்ப்பேரினவாதமும் முஸ்லீம் தேசத்துக்கு விரோதமானவை. தமிழ்த் தேசியவாதத்திடமிருந்து முஸ்லீம் தேசத்தை பாதுகாக்கத் தவறும் முஸ்லீம் பாராளுமன்ற அரசியல்வாதிகளைக் கொலையும் செய்வோம்' என்று பல்கலைக்கழக முஸ்லீம் மாணவன் ஒருவர் கல்முனையில் மக்கள் மத்தியில் பேசியதாக இலங்கை தேசிய சேவையின் 'விடியும் வேளை' ஒலிபரப்பில் முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி. ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த இரு தேசிய இனங்களுக்குமிடையிலான மூதூர் முதல் சம்மாந்துறை வரை நடைபெறும் கொலை. ஆட்கடத்தல். வீடுகள் எரிப்பு என்பனவும் பதட்ட நிலையில் நடைபெறும் ஹர்த்தால் போராட்டங்களும் இன முரண்பாடு சகிப்புத்தன்மையை இழந்து இனவெறியாக மாறி பகைமுரண்பாடாக கூர்மையடைவதனை வெளிக்காட்டுகின்றன.

தேசிய விடுதலைப் போராட்டங்களின் பாராளுமன்ற வியாபார- முதலாளித்து விவகாரக் கண்ணோட்டத்தில் மேற்படி இரு இனங்களுக்கியிலான மோதலுக்கு நியாய-அநியாயம் கற்பிக்கப்பட்டு பாதிக்கப்படும் இனத்துக்கு அபயம் அளிப்பதற்கு இந்துத்துவ இந்தியா பிரயத்தனம் செய்யத் தொடங்கியுள்ளது.

பாரததேசத்தின் புதிய கீதையின் நாயகனான பாரதீய ஜனதா அரசாங்கமும் 'எங்கெங்கு அநியாயம் நடைபெறுகிறதோ அதற்கெதிராக அங்கங்கெல்லாம் அவதாரம் எடுக்கும்' பாரதப்பண்பு இந்திய மேலாதிக்க விஸ்வரூபமாக அயல்நாடுகளை கபளீகரம் செய்யும் ஆபத்தென்பது கடந்த ஐந்து தசாப்தமாகவே இடம்பெற்று வருவதனை பூகோள அரசியல் வரலாறை தெளிவாக தேர்ந்து கொள்வோர் அறிந்துகொள்ள முடியும்.

அண்மைக்கால உதாரணமாக சிங்களப் பேரினவாதத்திடமிருந்து பாதுகாப்பதற்கு தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கு ஊட்டம் கொடுத்து பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கி அநுராதபுரத்தில் சாதாரண சிங்கள மக்களைப் படுகொலை செய்யும்படி விடுதலை இயக்கங்களுக்குப் பணித்து அதற்குப் பணிந்து தம்மை அர்ப்பணித்த விடுதலை இயக்கங்கள் இந்திய மேலாதிக்கத்தை தமக்குப் பயன்படுத்தி தம்மையே பயங்கரவாத இயக்கங்களென முத்திரை குத்திக் கொண்டமையும் இலங்கைப் பேரினவாத அரசுடன் 'பௌத்தமும்-இந்துவும். ஒன்றே என்றும் சிங்களவரும் ஆரியரும் ஒன்றே என்றும் தமிழ்த் தேசியத்தின் முதுகில் குத்தி. சிஹல உறுமய- ஜே.வி.பி.என்ற சிங்கள பேரினவாத இயக்கங்களுக்கு பணமும் அரசியல் பாடமும் போதித்து தமது வியாபார விவகாரங்களை இலங்கையின் இரண்டு அரசாங்கங்களினூடாகவும் நடைமுறைப்படுத்தி இலங்கையைத் தனது மாநிலமாக்கிக் கொண்டமையே நடந்து முடிந்த வரலாற்றுப் பாடமாகும்.

**செண்பகன்**

விரோத நிலைப்பாட்டைத் தவிர்த்து முஸ்லீம் மக்களை வியாபாரிகள் என்று வெறுத்தொதுக்குவதை விடுத்து- கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையான விவசாயிகள். தொழிலாளர்கள். ஆசிரியர்கள். மாணவர்களுடன் இன உறவுகளுக்கப்பால் வர்க்க உறவுகளை வளர்த்து - தமிழ் வர்த்தகர்களின் வியாபாரக் கண்ணோட்டத்தை உதறி ஒழித்து- ஒடுக்கப்பட்ட தமிழ் விவசாயிகள் தொழிலாளர்களுடன் ஐக்கியப்பட்டு வர்க்க உறவு என்னும் விருட்சத்தை வளர்த்தெடுப்பதும் முஸ்லீம் தமிழ் இன மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து பகை முரண்பாடாய்த் தெரியும் உறவை சிநேக முரண்பாடாக்கி பண்புடன் பேசித் தீர்ப்பதில் தீவிர அக்கறை செலுத்த வேண்டியது தமிழ் விடுதலை இயக்கங்களின் ஒன்றுபட்ட முயற்சியாக இருப்பது மட்டுமே இந்துத்துவ இந்தியாவின் இடையூறுகளிலிருந்து விலகக் கிடைக்கும் ஒரே தனி வழியாகும்.

கிழக்கு மாகாணத் தமிழ் மக்களும் விடுதலை இயக்கங்களும் வரப்போகும் - வெளிநாடுகளின் வில்லங்கத்திலிருந்து தமிழர் தாயகத்தை மீட்க வேண்டுமெனில் முஸ்லீம் மக்களின் தேசியத்தை அங்கீகரிப்பதும் சுயநிர்ணயத்தை ஏற்றுக்கொள்வதும் முன்நிபந்தனையாகும் என்பதை மறுப்போமாயின் 'முட்டாள் கல்லைத் தூக்குவது தன் தலையில் போட்டுக் கொள்ளவே' என்பது போலாகிவிடும்.

தேசிய இன அங்கீகாரத்துக்கு மொழி அடையாளம் மட்டுமே ஏற்புடையதென்பது தமிழ்த் தேசியக் குறுநலப் பார்வையாகும். அந்தந்த இனங்களின் விசேட நிலைமையைக் கவனத்திற் கொண்டு அந்தந்த இனங்களின் அவ்விசேடத் தன்மையை விளங்கிக் கொள்வதன் மூலம் மட்டுமே சுயநிர்ணயத்தின் விரிந்த நவீன அர்த்தத்தைப் புரிந்துகொள்ளும் விசால மனப்பாங்கை விருத்தி செய்ய முடியும்.

## முஸ்லீம் மக்களுக்கான சுயநிர்ணயம் தமிழர்களால் மதிக்கப்பட வேண்டியதா? மிதிக்கப்பட கூடியதா?

இலங்கைத் தமிழர்களைக் காப்பதற்காக மனிதாபிமான உதவியாக கடலில் அனுப்ப முடியாத உணவுப் பொட்டலங்களை விமானம் மூலம் போட்டபோது தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் வாய்பிளந்து வரவேற்று சிங்கள இலங்கையின் இறைமைக்குப் பாடம் புகட்டியதாக மகிழ்ந்து குதூகலித்தன. இங்கேதான் தேசியவாதக் கோளாறின் குளறுபடிகள் உள்ளனவெனலாம்.

இலங்கை- இந்திய ஒப்பந்தப் பிரகாரம் வட-கிழக்கு இணைப்பு விவகாரத்தை தற்காலிகமாக வழங்கிய நிலையில் இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்ட போதும் அங்கேதான் இந்திய இந்துத்துவ ஒட்டகம் மீண்டும் இலங்கையில் உள் நுழைவதற்கான ஓட்டை வைக்கப்பட்டு அவ்வப்போது பெரிதாக்கப்பட்டு வருகின்றது.

தற்போது புலிகளுக்குப் பாடம் புகட்டுவதற்கு இலங்கை ஜனாதிபதி முதல் முஸ்லீம் தீவிரத் தேசியவாதம் வரை கைகோர்த்துக் காரியங்கள் நடைபெறத் தொடங்கியுள்ளன. எனவே கிழக்கு மாகாணமும் இந்தியாவின் மேலாதிக்க நுழைவுக்கான தெரிவிடமாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் தமது குறுகிய முஸ்லீம்

சிங்கள மக்களின் இலங்கைத் தேசியம் என்பது இலங்கைத் தீவின் நிலப்பரப்பை ஆதாரமாகக் கொண்டபோதும் மொழியும் மதமும் இணைந்த சிங்களத் தேசியமாகவே தன்னைக் குறுக்கிக் கொண்டது. அதேவேளை இலங்கைத் தேசியத்தினை நில அடிப்படையில் மட்டும் நோக்கினால் தமிழ்த் தேசியத்தின் அடையாளத்தைக் காண முடியாதென்பதுடன் மொழி மூலமே தனது தேசியத்தை வரையறுப் பதில் முன்னின்றது. அதேபோல் முஸ்லீம் மக்கள் தமது தேசியத்தை மொழி மூலம் மட்டுமே வரையறை செய்ய முடியுமென்று உத்தரவிடும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு தமிழ்த் தேசியத்துக்கு எவ்வித அருகதையும் கிடையாது. முஸ்லீம்களின் தேசியம் என்பது மதம்-பண்பாட்டின் அடிப்படையிலானது என்ற யதார்த்தைப் புரிந்து அங்கீகரித்து வேறுபாட்டை தெளிந்து கொள்வதன் மூலம் மட்டுமே இலங்கைத் தீவை பல்லினத் தேசியப் பண்பாடு கொழிக்கும் நாடாக நாம் காண முடியும்.

தமிழ்த் தேசியமும் முஸ்லிம் தேசியமும் தங்களைக் குணப்படுத்திக்கொள்ள முன்வருவார்களா என்பதே நியாய புத்தி படைத்த மனிதர்களிடம் இன்று எழும் கேள்வியாகும். ●




## தலைமைத்துவமும் தனிமனித வழிபாடும்

மாக்ஸியம் வரலாற்றைச் சமூகப் பிரிவுகளிடையில் அதாவது வர்க்கங்களினிடையில் நிகழும் போராட்டத்தின் வரலாறாகக் காட்டியுள்ளது. வரலாற்று மாற்றங்களின் பொருள்முதல் அடிப்படையை நிறுவியுள்ளது. மனிதச் சிந்தனைகளின் விருத்தியையும் பொருள் முதல் அடிப்படையில் சமுதாய அமைப்பிற்குச் சார்பாக விளக்கியுள்ளது. வரலாற்றையும் சிந்தனையையும் தீர்மானிப்பது ஒரு சமூகம் அல்லது அதில் ஒரு குறிப்பிட்ட காலச் சூழலின் எழுச்சி அல்லது ஆதிக்கங் கொண்ட ஒரு சமூகப் பிரிவின் கூட்டு நடவடிக்கை என்பதை அது வற்புறுத்துகிறது. எனினும் தனிமனிதர்களின் பேரால் பல்வேறு சிந்தனைகள் அடையாளங் காணப்படுவது போலவே தனிமனிதர்களின் பேர்களும் செயல்களும் மாக்ஸிய அரசியலில் முக்கியம் பெறுவது ஏனென்ற கேள்வி புதியதல்ல. ஆயினும் இதுபற்றி நாம் மிகவும் தெளிவாக இருப்பது தேவையானது.

மாக்ஸியம் என்ற பேர் உண்மையில் விஞ்ஞான சோஷலிஸத்தையே குறிக்கிறது. உண்மையில் மாக்ஸோ அவரது நெருங்கிய நண்பரும் சகபோராளியுமான ஏங்கல்ஸோ மாக்ஸியம் என்ற பெயரை முன்வைத்தவர்களல்ல. உலக சோஷலிஸ இயக்கத்தில் நடந்த பெரும் விவாதங்களில் கற்பனாவாதிகளின் மாக்ஸியம் சோஷலிஸம். சீர்த்திருத்தவாதம் போன்ற பல்வேறு போக்குகளை எதிர்த்து நின்று விஞ்ஞான சோஷலிஸத்தையும் சமூகப் புரட்சியினதும் ஆயுதப் போராட்டத்தினதும் தேவையை வற்புறுத்தி நிலை நிறுத்தியதில் மாக்ஸின் பங்கு பெரியது. எனவே மாக்ஸ் பாதுகாத்து விருத்தி செய்த பாட்டாளி வர்க்க நிலைப்பாடு அவரது பேரால் அழைக்கப்பட்டது. ஆயினும் மாக்ஸியம் என்பது மாக்ஸ் சொன்னவற்றுள் வரையறைப்பட்ட ஒன்றல்ல.

அதுமட்டுமில்லாமல் மாக்ஸ் சொன்ன அனைத்தும் அப்படியே எக்காலத்துக்குமான மாறா உண்மைகளுமல்ல. அவ்வாறு கேள்வியின்றி மாக்ஸை ஏற்பவர் ஒரு மாக்ஸியருமல்ல. மாக்ஸின் சில எதிர்பார்ப்புக்கள் பொய்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை மாக்ஸை எதிர்த்தோரால் அல்லாமல் ஏற்றவர்களில் முதன்மையான ஒருவரான லெனினாற் பொய்ப்பிக்கப்பட்டன. இதனால் மாக்ஸின் ஆய்வு முறையோ கொள்கையோ வலுவிழக்கவில்லை மாறாக மேலும் விரிவும் வலுவும் பெற்றது. மாக்ஸ் ஒரு சோதிடரல்ல. அவர் எதிர்வு கூறியது கிரக நிலைகளைப் பார்த்துச் சோதிடம் சொல்லுற மாதிரியல்ல. மாறாக அவரது சூழலின் உலக நிலவமும் நிகழ்வுகளும். தனக்குக் கிட்டிய வரலாற்றுத் தகவல்களும் அனுபவப் பதிவுகளுமே அவரது விஞ்ஞான ரீதியான முடிவுகளின் அடிப்படை. அவரது முடிவு எதுவும் தவறானதாக இருக்கும் ஒவ்வொரு தடவையும் அத்தவற்றுக்குரிய காரணத்தைத் தேடியறிவதன் மூலம் மேலும் திருத்தமான முடிவை வந்தடைய இயலுகிறது.

மேற்கூறிய வகையில். மாக்ஸியம் ஒரு விஞ்ஞானமாகவே இன்றுவரை செயற்பட்டு வந்துள்ளது. ஒரு வாதத்தை நிலை நிறுத்த மாக்ஸை மேற்கோள் காட்டுவது போதாதது. மாக்ஸை மேற்கோள் காட்டும் போது மாக்ஸின் சிந்தனையின் பொழிப்பான ஒரு கூற்றை. அது பற்றி மேலும் சிந்திப்பதற்கு ஒரு தூண்டுகோலாகப் பயன்படுத்துகிறோமேயொழிய அதை ஒரு இறுதியான தீர்ப்பாக நாம் முன்வைப்பதில்லை.

மாக்ஸைத் தனிமனிதக் கோணத்திற் கண்டு விளக்கவும் வியாக்கியானம் செய்யவும் கடுமையாக முயன்றவர்களிற் பெரும்பாலானோர் மாக்ஸிய விரோதிகளே. பருவந் தவறாது மாக்ஸ் மீதான அவதூறுகள் பொழியப்பட்டே வந்துள்ளன. இவை மாக்ஸ் என்ற தனிமனிதரை இழிவுசெய்து அதன் மூலம் மாக்ஸியத்தை நம்பகமற்றதாக்கும் முயற்சிகளே. லெனின். ஸ்தாலின். மாஓ போன்ற தலைமைத் தோழர்கள் முதற் பல்வேறு மாக்ஸியச் சிந்தனையாளர்கள் வரை இவ்வாறான அவதூறுகட்கு ஆளாகியுள்ளனர்.

அதேவேளை. காந்தி. தலாய் லாமா. பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல். வின்ஸ்ற்றன் சேச்சில் போன்றவர்கள் ஒடுக்கப்பட்டவர்கட்கு எதிராக எடுத்துள்ள நிலைப்பாடுகள் யாவும் பூசி மெழுகப்பட்டு அவர்களது 'சாதனைகட்காக' அவர்கள் போற்றப்படுகின்றனர்.

நாம் பகுத்தறிவு ஆதிக்கத்தில் உள்ள ஒரு உலகில் வாழவில்லை. குறைபாடுகள் மிக்க ஒரு உலகத்தின் குறைப்பாடுகட்கு எதிராகப் போராடும் ஒரு தேவையினுள் வாழுகிறோம். போராட்டத்தின் விதிகளைப் போராட்டத்தின் யதார்த்தச் சூழலுக்கு அப்பால் நின்று தீர்மானிக்க இயலாது. வலிய நிறுவனமாகி விட்ட முதலாளிய அரச இயந்திரத்துக்கும் தேசிய எல்லைகள் தாண்டிச் செயற்படுகிற ஏகபோக முதலாளியமான ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக. ஒரு வலிய நிறுவனம் இல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்கள் போராட முடியாது. எனவே கட்சி. வெகுசன இயக்கம் போன்றவை வரலாற்றுத் தேவைகளாகின்றன. வரலாற்றுச் சூழ்நிலைகள் வேறு நிர்ப்பந்தங்களையும் உருவாக்குகின்றன.

சோவியத் புரட்சியைத் திசை திருப்ப முயன்ற சக்திகளைத் த்தொத்ஸ்கி அடையாளப்படுத்தியது போல அதன் இலக்கை நெறிப்படுத்தி ஏகாதிபத்தியத்துக்கும் பின்னர் ஃபாஸிஸத்துக்கும் எதிராக சோவியத் யூனியனைக் காத்த சக்திகளை லெனினும் ஸ்தாலினும் அடையாளப்படுத்தினர். மக்களை அணிதிரட்டி ஊக்குவிப்பதில் அவர்களது தலைமைத்துவமும் பங்களிப்பும் பெரியது. எனினும் லெனினோ ஸ்தாலினோ சோவியத் யூனியனில் நடந்த எல்லாவற்றுக்கும் முழுப் பொறுப்புடையவர்கள் என்று நாம் கூற இயலாது. ஸ்தாலினைப் பாராட்டும் போதோ விமர்சிக்கும் போதோ அக் கணிப்பு ஸ்தாலின் என்ற தனிமனிதருக்கும் அப்பால் ஒரு அரசியற் சக்தியையும் ஒரு சமூகச் சக்தியையும் நாம் குறிக்கிறோம். அது போலவே க்ருஷ்ச்சொவ் பற்றிய விமர்சனம் க்ருஷ்ச்சொவ் என்ற தனிமனிதர் பற்றியது மட்டுமல்ல. அது அதற்கப்பாற் செல்கிறது. அதனாலேயே க்ருஷ்ச்சொவ் மீதான விமர்சனம் அவர் பதவி நீக்கப்பட்டபின்பு அடுத்தடுத்து வந்த தலைமைகளுக்கும் பொருந்தி வருகிறது.

மாஓ தன்னுடைய பேரை ஒரு தெருவுக்குச் சூட்டுவதைக்கூட விரும்பாதவர். எனினும் சீனாவில் திரிபுவாதப் போக்கும் முதலாளியத் திசையில் சீனாவை நகர்த்தும் முயற்சிகளும் ஓங்கிய போது அதற்கெதிரான ஒரு எழுச்சியை அவர் தலைமை தாங்கி நடத்தினார். அவரது பேரும் மாஓசேதுங் சிந்தனை என்ற பேரில் சீனக் கம்யூனிஸ்ற் கட்சியின் அனுபவத்தின் மூலம் விருத்தி பெற்ற மாக்ஸிய-லனினியமும் அப் போராட்டச் சூழலிலேயே பொதுமக்களிடையே முக்கியம் பெற்றன. மாஓவின் வரலாற்றுப் பங்களிப்பை விளங்கிக் கொள்வதனால் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட வரலாற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். மாஓசேதுங் என்ற பேர் சீனாவின் புரட்சிகர சக்திகளை மட்டுமில்லாமல் உழைக்கும் மக்கள் அனைவரையும் அணி திரட்டவல்ல ஒரு சக்தியாக மாறியதற்குத் திட்டமிட்ட தனி மனித வழிபாடு காரணமல்ல. மாறாக மாஓ அடையாளப்படுத்தி நின்ற ஒரு நிலைப்பாடுதான் காரணம்.

இன்று சீனாவில் மாஓவின் முக்கியத்தைக் களைய முடியாத போதும் சீனப் புரட்சியின் ஒவ்வொரு முக்கிய அம்சமும் சீரழிக்கப்படுகிறது. மாஓவைப் போற்றிக் கொண்டே அவர் அடையாளப்படுத்திய புரட்சிகர அரசியலை மறுதலிக்க முடிகிறது. இது வரலாற்றுக்குப் புதியதல்ல.

கத்தோலிக்க அதிகார பீடமானாலும் பௌத்த அதிகார பீடமானாலும் இந்திய அதிகார வர்க்கமானாலும் யேசு. புத்தர். காந்தி என்றும் அன்பு. கருணை. அகிம்சை என்றும் பேசிக் கொண்டே ஒடுக்குமுறையிலும் வன்முறையிலும் மும்முரமாக நிற்கின்றனர்.


நமக்கு முக்கியமானவை பேர்களல்ல. அப்பேர்கள் அடையாளப்படுத்தும் நிலைப்பாடுகளும் அணுகுமுறைகளும் நோக்கங்களுமே. பேர்களைக் களங்கப்படுத்தி அவை குறிக்கின்ற விடயங்களை அழிக்கும் முயற்சிகட்கு எதிராக நாம் போராடுவது சரியானதே. அதேவேளை நாம் மாக்ஸையோ லெனினையோ கொண்டாடுவதற்கும் புனிதர்களாக்கப்பட்டவர்களைப் பழமைவாதிகளும் ஒடுக்குமுறையாளர்களும் கொண்டாடுவதற்குமிடையே உள்ள வேறுபாடு பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

- இமயவரம்பன் -

www.padippakam.com



# ஈராக்கில் நாளாந்தம் அடிவாங்கும் அமெரிக்கப்படைகள்



அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் பிரதம ஏடுபிடியான பிரித்தானிய ஆட்சியாளர்களும் தாம் திட்டமிட்ட படியே ஈராக்மீதான இராணுவத் தாக்குதலை நடத்தி சதாம் ஹுஸேனின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டனர். எனினும் சொன்னது போல எளிதாக ஆட்சிக் கவிழ்ப்பு நடக்க வில்லை. அவர்கள் தமது நாட்டு மக்களை நம்பவைத்தது போல உறுதியான மாற்று ஆட்சி ஒன்றை இதுவரை நிறுவவும் முடியவில்லை. அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் போருக்கு எதிரான வெகுசன அபிப்பிராயம் வலுவாக இருந்தபோதும் பொய்யான காரணங்களைக் கூறிப் போரைத் தொடக்கினார்கள்.

ஈராக்கில் பயங்கரமான பேரழிவுக்கான ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றை ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஆயுதப்பரி சோதகர்கள் கண்டுபிடிக்காமல் ஈராக்கிய அதிகாரிகள் தடையாக இருந்ததாகவும் ஈராக்கில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பின்பு ஒளித்து வைக்கப்பட்ட ஆயுதங்களை எல்லாம் ஒரே மாத்தில் கண்டுபிடிப்போம் என்று வீரமாகப் பேசிய அமெரிக்க பிரித்தானிய ஆட்சியாளர்களால் இது வரை உருப்படியாக ஆயுதங்கள் உள்ளதற்குச் சாட்சியத்தைக் கூடவெளிப் படுத்த முடியவில்லை. இடையிடையே அணுஆயுத உற்பத்திக்குத் தேவை யான உதிரிப்பாகங்கள் ஈராக்கிய விஞ்ஞானி ஒருவரால் தன் பின் வளவுக்குள் புதைத்து வைக்கப்பட்டு அமெரிக்கப் படைகளிடம் ஒப்படைக்கப் பட்டது போல புரளிகள் செய்தி நிறுவனங்களால் வெளியிடப்பட்டன.

ஈராக்கிடம் விஷவாயு ஆயுதங்களும் நோய்க்கிருமி ஆயுதங்களும் இருந்தது உண்மை. அவற்றை வழங்கியவர்களும் உற்பத்தி செய்ய வழி காட்டியவர்களும் அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளே. ஈரானுக்கு எதிரான போரின் போது ஈராக்கிய ஆட்சியாளர் கட்கு உதவியாக வழங்கப்பட்ட இந்த ஆயுதங்கள் சதாம் ஹுஸேனின் ஆட்சிக்கு ஏதிராக இருந்த ஈராக்கிய மக்களுக்கு எதிராகப்பாவிக்கப்படும் என்பது அவர்கள் எதிர்பாராததல்ல. அவை அவ்வாறு பாவிக்கப்பட்ட போது மேலை நாடுகள் ஈராக்கிய ஆட்சியாளர்கள் கண்டிக்கவுமில்லை.

சதாம் ஹுஸேனுக்கு ஏதிரான சக்திகளது குறிப்பாக1990க்குப்பின் அமெரிக்காவுக்கு நெருக்கமாகிய குர்திய விடுதலை இயக்கம் ஒன்றினதும் சதாம் ஹுஸேனால் ஒடுக்கப்பட்ட ஷியா முஸ்லிம் பெரும்பான்மையினரின் தலைமையினதும் ஆதரவைநம்பியிருந்த அமெரிக்காவுக்கு குர்திய விடுதலை இயக்கத்தின் ஆதரவு இருந்தாலும் ஷியா முஸ்லிம்களது ஆதரவுகிட்டும் என்ற எதிர்பார்ப்பு வேகமாகப் பொய்த்து விட்டது. இன்று ஷியா முஸ்லிம்களின் தலைமை அந்நியப் படைகள் வெளியேற வேண்டுமென வற்புறுத்துகின்றன. ஷியா முஸ்லிம்கள் நடுவிலிருந்தும் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகட்கும் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகட்கும் எதிரான வன்முறை வலுத்துவருகிறது.

சதாம் ஹுஸேனைக் கைப்பற்றினால் அல்லது கொன்றால் ஈராக்கில் உள்ள எதிர்ப்புப் பலவீனமடையும் என்று தம்மை ஆறுதற்படுத்திக் கொள்ளுகிற அமெரிக்க பிரித்தானிய ஆட்சியாளர் கள் சதாமின் பிள்ளைகள் இருவரைத் தமது படையினர் கொன்றது பற்றிக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.ஆனாலும் அவர்கட்கெதிரான எதிர்ப்பு வலுத் துள்ளதே ஒழியக் குறையவில்லை. எனவே அயற்படையினருக்கு எதிரான இயக்கம் சதாம் ஹுஸேனின் ஆதரவாளர்களையும் அவர்கட்டு அஞ்சி ஒத்துழைக்கும் சிலரதும் சதியல்ல என்பது அவர்கட்கு விளங்கியிருக்க வேண்டும். ஆனாலும் அதிகாரவெறியும் ஆணவத்திமிரும் உண்மைகளை என்றுமே மதிப்பதில்லை.

தம் பிரியத்துக்குரிய குர்திய விடுதலை இயக்கத்திற்கு விடுதலை பெற்று குர்தியப் பிரதேசம் ஒன்றை வென்று தருவதாக ஆசை காட்டிய அமெரிக்கா இப்போது தனது நேச நாடான துருக்கியுடன் இவ்விடயத்தில் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது. துருக்கியின் தென் பகுதியில் உள்ள குர்தியத் தாயகம் மிகவும் மோசமான தேசிய இன ஒடுக்கலுக்கு உட்பட்டுவந் துள்ளது. அங்கே எழுந்த குர்தியத் தொழிலாளர் கட்சி என்ற விடுதலை இயக்கம் மிகவும் கொடிய அரச ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடி வந்தது. அதன் தலைவர் ஒச்லான் துருக்கியப் பாதுகாப்புப் படைகளால் பிடிக்கப்பட்ட பின்பு விடுதலைப் போராட்டம் கணிசமான பின்னடைவைச் சந்தி துள்ளது. இந்த நிலையில் சுயாதீனமான ஒரு குர்திய ஆட்சிப்பிரதேசமோ தனி நாடோ ஈராக்கிற்குள் உருவாகுவதைத் துருக்கியப் பேரினவாத ஆட்சியாளர்கள் ஏற்கப்போவதில்லை. துருக்கிய ஆதரவு இல்லாது போனால் ஈராக்கில் அமெரிக்காவின் இராணுவ வல்லமை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகிவிடும். எனவே குர்திய மக்களுடனான அமெரிக்க நல்லுறவு வெகுவிரை விலேயே கசப்பானதாக மாறஇட முண்டு.

அமெரிக்க பிரித்தானிய படைகள் தமக்கு எதிரான பல வன்முறை நிகழ்வுகளை நாளாந்தம் எதிர்நோக்கு கின்றனர். சராசரியாக ஒரு நாளுக்கு ஒரு சாவு என்ற விதத்தில் படையினர் தாக்குதல்களாற் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிச்சயமின்மையும் ஈராக்கின் கடும் வெய்யிலும் பழக்கப்படாத வரண்ட சுழலும் தனிமையும் நீண்ட போருக்குத் தயாரின்மையும் சேர்ந்து படையினரது நடத்தையைப் பாதிக்கின்றன. தமது உயிருக்கு அஞ்சுகிற படையினரின் கண்களில் படும் ஒவ்வொரு ஈராக்கியச் சிறுவர்கள் உட்படப் பல அப்பாவிப் பொதுமக்கள் அந்நியப் படையினரால் மறியலில் வைக்கப்படுகின்றனர். பலர் சந்தேகத்தின் பேரில் நடுத் தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவை யாவும் அமெரிக்காவிலும் பிரித்தனியா விலும் போருக்கு எதிரான உணர்வு களை வலுப்படுத்தக்கூடிய விடயங்கள் எனவே பெரிய தகவல் ஊடக நிறுவனங்கள் இவற்றை ஓரளவு அடக்கியே வாசித்து வந்துள்ளன. என்றாலும் முன்னர் வியற்நாம் போரின் போது நடந்தது போல ஒரு வலிய போர் எதிர்ப்பு இயக்கம் எழும் அபாயத்தை இரண்டு அரசாங்கங்களும் உணர்ந் துள்ளன. இதன் விளைவாக அவை இரண்டு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

முதலாவதாக வேறு உலக நாடுகளை யும் இப்போரிற் சம்பந்தப்படுத்துவதும் ஏற்கெனவே மேற்கு ஐரோப்பாவின் தீவிர வலதுசரி ஆட்சிகளான ஸ்பானிய இத்தாலிய அரசாங்கங்களது ஆதரவும் முன்னாள் சோஷலிஸ நாடுகள் சிலவற்றின் ஆதரவும் அவுஸ்திரேலியா வின் ஆதரவும் இருந்தாலும் இவையாவும் கிறிஸ்துவ -முஸ்லிம் போர் என்ற பிம்மத்தை மேலும் வலுப்படுத்தத் கூடும் என்பதால் இந்தியா போன்ற நாடுகளையும் இழுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவின் இந்துஃபாஸிஸவாத ஆட்சி இதற்கு உடன்பட்ட போதும் கடுமையான வெகுஜன எதிர்ப்பின் விளைவாக அது கைவிடப்பட்டது. எனினும் ஐ.நா.சபை யின் பேரில் அமைதிகாப்பதற்கு இந்தியப்படைகள் அனுப்பப்படலாம் என்ற முடிவிற்கு இந்திய அரசாங்கம் வந்துள்ளது.எனவே அடுத்த கட்ட முயற்சி அமெரிக்காவினது போரை ஐ.நா.சபையின் போராக்குவதாகவே அமையும் என நம்பலாம்.

இன்னும் பாரதுரமாக உள் நாட்டில் பிரித்தானியப் பிரதமர் ற்றோனி பிளெயரின் செல்வாக்கு மிகவும் சரிந்து விட்டது. அது போல ஜோஜ் புஷ்ஷின் நம்பகத் தன்மையும் அமெரிக்காவில் விழுந்து வருகிறது. இந்த வேகத்தில் இருவரும் அடுத்த ஆண்டு வரவுள்ள தேர்தல்களை வெல்ல இயலாது போகலாம். எனவே மக்களது கவனத்தை மீண்டுத் திசை திருப்பும் தேவை ஏற்பட்டுள்ளது. ஆஃப்கானிஸ் தானில் தடுமாறுகிற ஆட்சியும் ஈராக்கில் மோசமாகி வரும் ஆக்கிர மிப்புப் படைகளின் நிலையும் காரணமாக மக்கள் ஆதரவை இழக்காமலிருக்க இன்னொரு போரைத் தொடங்குவது இரண்டு தலைவர்கட்கும் தேவை யானது . எனவே ஈரான் வடகொரியா ஆகிய நாடுகள் பற்றிய எச்சரிக்கைகள் ஊடகங்கள் மூலம் பரப்பப்படுகின்றன.

ஈரான் மீதோ வடகொரியா மீதோ போர் தொடுக்கப்படாவிடினும் அவை அமெரிக்காவை அணு ஆயுத மிரட்டலுக்கு உட்படுத்துகின்றன என்ற பிரசாரமும் போருக்கு ஆயத்தமாக வேண்டும் என்ற பதற்ற நிலையும் தடுமாறும் இரண்டு ஆட்சியாளர்கட்டும் சிறிது உதவலாம்.இத்தகைய ஒரு பின்னணியிலேயே பிரித்தானிய அரசாங்கத்தின் ஆலோசகராகக் கடமையாற்றிய கலாநிதி கெலி மூலம் வெளியான சில தகவல்கள் பிரித்தானிய ஆட்சியாளர்கட்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளன. பிரித்தானிய அயல் விவகார அலுவலகம் வழங்கிய ஆலோசனைகட்கு மாறாக ஈராக்கிய இராணுவ அச்சுறுத்தல் பற்றிய தகவல்களைத் திரித்து மிகைப்படுத்தி மக்களை ஏமாற்றியதாக பிரித்தானியச் செய்தியாளர் ஒருவர் பி.பி.சிக்கு வழங்கிய தகவலை அடுத்து நடத்தப் பட்ட விசாரணையில் கெலி மூலமே முக்கியமான சில திரிப்புக்கள் பற்றிய உண்மைகள் வெளியாயின என அறியப்பட்டது. கெலி அயல் விவகார அமைச்சின் ஆலோசனைக்கு முரணாகக் கடும் விசாரணைக்குட் படுத்தப்பட்டார். இரண்டாவது விசாரணையின் பின்பு அவர் தன் மணிக்கட்டில் கத்தியால் வெட்டித் தற்கொலை செய்ததாகச் செய்தி வெளியானது. பொதுசனங்கட்கான ஒரு பூங்காவில் நடந்த இச்சாவு கொலையா தற்கொலையா என்ற ஐயமும் இப்போது எழுந்துள்ளது.

எனினும் இப்போது நடக்கும் அரசாங்க விசாரணையின் நோக்கத்தை பிரித்தானியப் பிரதமரும் அவரது பிரதம தொடர்பாடல் ஆலோசகர் கணிங்ஹ மும் மக்களை ஏய்க்க முயன்றார்கள் என்ற பிரச்சனையிலிருந்து திசை திருப்பி விடயத்தை அம்பலப்படுத்திய பத்திரிகை யாளரும் நிகழ்ச்சிக்குப் பொறுப்பான பி.பி.சி அலுவலர்களும் ஒழுங்காக நடந்து கொண்டார்களா என்ற விடயம் பற்றியதாக்கும் பணிகள் மும்முரமாகி யுள்ளன.

எவ்வாறாயினும் ஈராக் விடயத்தில் பிரித்தானிய மக்கள் அவர்களது ஆட்சி யாளர்களாற் திட்டமிட்டே ஏமாற்றப் பட்டனர் என்ற உண்மை இப்போது பகிரங்கமாகியுள்ளது. இதன் பின் விளைவு எப்படி அமையும் என்பது

தொடர்ச்சி மறுபக்கம்

# இந்தியாவின் மேலாதிக்கப் பிடிக்குள் இலங்கை!

**இலங்கையின் நிலப்பரப்பும் சனத்தொகையும் இந்தியாவின் ஐம்பதில் ஒன்றாகும். இலங்கையுடன் ஒப்பிடுகையில் இந்தியா ஐம்பது மடங்கு பெரியதாகும். இந்தியா ஒரு பிராந்திய ஆதிக்க வல்லரசுமாகும். எனவே இலங்கை மீது தனது ஆதிக்கப் பிடியை இறுக்கி வருவதில் கவனமாக இருந்து வருகிறது. அதன் அண்மைக்கால செயற்பாடுகளே கீழே தருவனவாகும்.**

- 2000ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கை இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை இந்தியாவிற்கு அதிகளவு அனுகூலமான தொன்றாகும்.
- இந்தியாவிலிருந்து இலங்கைக்கான ஏற்றுமதி 2001ல் 60 கோடி 40 இலட்சம் அமெரிக்க டொலர்கள். 2003ல் இது 83 கோடி 10 இலட்சம் அமெரிக்க டொலராக உயர்ந்தது.
- இலங்கை இந்தியாவிற்கான ஏற்றுமதி 7 கோடி 80 இலட்சம் அமெரிக்க டொலரிலிருந்து 16 கோடி 77 இலட்சம் அமெரிக்க டொலராக மட்டுமே உயர்ந்தது. இது இந்தியாவிற்கு சாதகமான வர்த்தக நடைமுறையைக் கொண்டிருந்தது. இலங்கையின் இறக்குமதியானது இந்தியாவிற்கான எமது ஏற்றுமதியின் ஐந்து மடங்கு என்பது குறிப்பிடத்தக்கது.
- இலங்கை இந்தியாவிடமிருந்தே ஆகக்கூடிய இறக்குமதி களைச் செய்கிறது. அதாவது இலங்கைக்கான ஏற்றுமதியாளர்கள் வரிசையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- அரசுக்கும் அரசுக்குமான உடன்படிக்கையின் கீழ் இந்தியா இலங்கைக்கு 10 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கி மூலதனப் பொருள்கள், நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதிக்கு மேலும் ஊக்குவித்து வருகிறது. இதைவிட 3 கோடி 10 இலட்சம் அமெரிக்க டொலர்களை கோதுமை இறக்குமதிக்கு கடனாக வழங்கியது.
- இந்தியா வழங்கும் கடனைக்கொண்டு இந்தியப் பொருள்களை மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனை மூலம் இந்தியாவிற்கு சந்தைப்படுத்த முடியாத பொருள்கள் யாவும் இங்கு கொட்டிக் குவிக்கப்படுகின்றன.
- 2003 மார்ச் மாதமளவில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட இந்தியப் பொருள்கள் சுங்கத் தீர்வைக்குட்படாது கொண்டுவரப்பட்டன. இலங்கைக்குத் தேவையற்ற இப் பொருள்கள் தாராளமாக இலங்கைக்குள் வர வசதி செய்யப்பட்டுள்ளது.
- இலங்கையில் முதலீடு செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. 39 கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் மட்டும் 10 கோடி அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யவுள்ளது.
- 2003 மார்ச் மாதமளவில் இந்தியாவின் 96 நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட ஆரம்பித்துள்ளன. இவை இலங்கை முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் கீழும், சாதாரண சட்டத்தின் கீழும் செயற்படவுள்ளன. அதற்கான மூலதனம் 21 கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். 18 கோடி அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 98 செயற்திட்டங்கள் வெவ்வேறு கட்டங்களில் இயக்கப்படவுள்ளன.
- சார்க் நாடுகளில் இந்தியா செய்த முதலீடுகளில் 50 வீதம் இலங்கையில் மையங்கொண்டுள்ளன.
- திருகோணமலையில் அமைந்துள்ள நிலத்தடியின் 98 பாரிய எண்ணெய் குதங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் இந்தியா பொறுப்பேற்றுள்ளது.
- இலங்கையின் எரிபொருள் விநியோகத்தின் ஒரு பகுதியை இந்தியா பொறுப்பேற்றுள்ளது. முழு விநியோகத்தையும் பொறுப்பேற்க பல இந்திய எண்ணெய் கம்பனிகள் முன்வந்துள்ளன. எரிபொருள் விநியோக நிலையங்களில் மாதிரிக் கடைகள் -சுப்பர் மார்கட்- தங்குமிட வசதி, சிற்றுண்டிச்சாலை, வாகனங்களை கழுவி சேவை செய்தல் என்பன திட்டமிடப்பட்டுள்ளன.
- இலங்கையின் புகையிரதச் சேவையிலும் இந்தியா முனைப்பாக ஈடுபடவுள்ளது. முகாமைத்துவசேவை, ஓடுபாதை புனரமைப்பு என்பனவற்றில் ஆரம்பித்து புகையிரதச் சேவையை முற்றாகத் தனியார் மயப்படுத்தி அதனை இந்தியா கையேற்க பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன.
- ஆயுட் காப்புறுதியிலும் இந்தியா 42 வருட இடைவெளியின் பின் ஈடுபட்டுள்ளது.
- அன்னாசி மற்றும் பழ உற்பத்திக்கென வளமுள்ள நிலங்கள் இந்திய முதலீட்டாளர்களால் பெறப்பட்டுள்ளன.
- இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே தலைமன்னார்-இராமேஸ்வரம் தரை வழிப் பாலம் அமைக்கும் திட்டம் ஏற்கனவே வரையப்பட்டுள்ளது.
- 2002 யூன் மாதத்தில் இந்தியாவின் அப்பல்லோ மருத்துவமனை கொழும்பில் இயங்க ஆரம்பித்தது. மேலும் சில மருத்துவமனைகள் இங்கு திறக்கப்படவுள்ளன.
- உல்லாசப்பயணிகள் அதிகம் வந்துசெல்லும் பெந்தோட்ட கடற்கரையில் ஹோட்டல்களை இந்திய முதலீட்டாளர்கள் அமைக்கவுள்ளனர்.
- கலாசார ஊக்குவிப்பு என்ற பெயரில் ஐம்பது திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. ஏற்கனவே றம்பொடை, தெகிவளை, மருதனார் மடம் ஆகிய இடங்களில் பாரிய ஆஞ்சநேயர் கோவில்கள் உருவாக்கப்பட்டு இலங்கையில் என்றுமே இல்லாதளவுக்கு ஆஞ்சநேயர் வழிபாடு ஊக்குவிக்கப்படுகின்றது. அடுத்து இராமர் கோவிலா? என்ற கேள்வி பரவலாக எழுப்பப்படுகிறது.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கு உதவ இந்தியா முன்வந்துள்ளது. கண்ணிவெடியகற்றவும், பலாலி விமான நிலைய ஓடுபாதையைப் புனரமைக்க மற்றும் துறைமுகங்களின் உட்கட்டமைப்புகள் என்பவற்றை "விருத்தி செய்யவும்" இந்தியா ஆர்வத்துடன் முன்வந்துள்ளது. 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
- அதிஉயர் பாதுகாப்பு வலையங்கள் தொடர்பாக இந்தியாவின் இளைப்பாறிய இராணுவ உயர் அதிகாரியான நம்பியார் ஆலோசனைகள் வழங்கியுள்ளார். கடற்பரப்பின் "பாதுகாப்பிற்கு" இந்திய கடற்படைத் தளபதி ஜேக்கப் ஆலோசனை வழங்குகிறார்.
- ஏற்கனவே இலங்கை ராணுவ கடற்படை உயர் அதிகாரிகள் மட்டத்திலான நூற்றி ஐம்பது பேரைக்கொண்ட தொகுதி தொகுதியான பயிற்சியை இந்தியா வழங்கி வருகின்றது.
- இலங்கையை சுற்றிய கடற்பரப்பில் இந்திய கடற்படை இலங்கைக் கடற்படைக்கு கண்காணிப்பு என்ற பெயரில் உதவி வருகின்றது.
- பேராதனையில் இந்தியாவின் தகவல் தொழிநுட்ப மையமொன்று ஏற்படுத்தப்படவுள்ளது.
- ஆந்திர மாநிலத்தை சேர்ந்த ரியல் எஸ்டேட் டெவலபர்ஸ் தனியார் முதலீட்டு கம்பெனி வீடமைப்பு, கைத்தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் முதலிட திட்டமிட்டுள்ளனர். கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மேற்படி முதலீடுகள் செய்யப்படவிருக்கிறது.
- முன்பு தமிழ் இயக்கங்கள் சிலவற்றை பயன்படுத்தி வந்த இந்திய ஆளும் வர்க்கம் இப்போது ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகியவற்றுக்கு பணமும் ஆலோசனைகளையும் வழங்குவதாக அறிய முடிகிறது. அந்தவரிசையில் ஈ.பி.டி.பி.யும் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழர் கூட்டணி மிரட்டிப் பணிய வைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவரும், முன்னாள் வெளியுறவுச் செயலர் டிக்ஷிற்றும் மிரட்டல் தொனியில் பேசிவருவதும் அவதானிக்கப்பட வேண்டியவையாகும். விரைவில் இந்திய வெளியுறவு அமைச்சர் தமது உள்ளார்ந்த திட்டங்களுடன் இலங்கைக்கு வர உள்ளார்.

– சிறி –

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் நாட்டில் ஜெயலலிதாவின் பாசிச ஆட்சி

## அரச ஊழியர் - ஆசிரியர்களின் போராட்டம் முறியடிப்பு

அண்மையில் தமிழ் நாடு அரச ஊழியர்கள் ஆசிரியர்கள் தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். 12 லட்சம் பேர் இதில் கலந்து கொண்டனர். திமிர் கொண்ட ஜெயலலிதா திகைத்துக் கொண்டார் ஆனாலும் கீழ் இறங்க வில்லை. தனது பாசிச வழிகளில் செயல் படத் தொடங்கி பொலீஸ் அடியாட்கள் ரவுடிகள் என்போரைக் கொண்டு முன்னணியாளர்களை அடித்து மிரட்டி டெஸ்மாச் சட்டத்தின்கீழ் சிறை வைத்தார். 4 லட்சம் பேருக்கு வேலை இல்லை என வீதிக்கு விரட்டினார்.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்திற்கு நீதி கேட்டுச் சென்றார்கள் அரச ஊழியர்கள். நீதிமன்றமோ அவசர அவசரமாக வேலை நிறுத்தம் செய்தோரின் மண்டையில் ஓங்கி அடித்து தீர்ப்பு வழங்கியது. அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தது குற்றம். அவர்களுக்கு வேலை நிறுத்தம் செய்யும் உரிமை இல்லை. குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கடிதம் கொடுத்து மீளவும் வேலையைப் பெறுமாறு உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கூறியது. இதனால் 2000 சங்கத் தலைவர்களுக்கு வேலை கிடையாது. வழக்குப்பதிவு செய்த 8000 பேருக்கும் வேலை கிடையாது. பழிவாங்கும் படலத்தின் மூலம் மேலும் பல ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்க மாட்டாது.

உலக வங்கியின் ஆலோசனைப்படியே ஜெயலலிதா அரச ஊழியர் ஆசிரியர்களின் சலுகைகளை உரிமைகளைப் பறித்து வந்தார். அவர்களைத் தனியார் துறை ஊழியர்களாக்கி அவ்வப்போதைய சம்பளம் பெறுவோர்ராக்குவதே உலக வங்கியின் வழிகாட்டல். இதனை எதிர்த்த போராட்டம் அரசாங்கம் அரசு யந்திரமான பொலீஸ் நீதிமன்ற சிறைச்சாலை என்பனவற்றின் ஒருங்கிணைந்த செயற்பாட்டால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

அரச ஊழியர்கள் ஆசிரியர் போராட்டத் தோல்வி பற்றி மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகியன வற்றின் சார்பாக 32 பக்கங்களில் சிறு நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி வேலை நிறுத்தம் தோல்வியடைந்தமை பற்றி அந்நூலிலே ஆராயப்பட்டிருக்கிறது. முற்றிலும் புதிய கோணத்திலிருந்து பார்க்கப்பட்ட அந்நூல் சில முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டி விமர்சனம் செய்கிறது. உலக வங்கியின் ஆலோசனை, ஜெயலலிதாவின் மக்கள் விரோத ஆணவத்திமிர். அரசு யந்திரத்தின் சுயரூபம் என்பன துல்லியமாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளை மக்கள் மத்தியில் காணப்படும் அறியாமை, அரச ஊழியர் பற்றிய தப்பான கண்ணோட்டம், ஏனைய துறையினரின் ஒத்துழையாமை, தனித்தனிப் போராட்டங்களின் பலவீனம், தொழிற் சங்கத் தலைமைகளின் இயலாமை என்பன எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக சட்டம் எல்லோருக்கும் சமம். நீதிமன்றம் புனிதமான உயர் பீடம். நீதி வழங்கலில் பாரபட்சம் கிடையாது போன்ற கட்டுக் கதைகள் யாவும் உடைந்து சாக்கடையாக நாற்றம் எடுத்து ஓடியதை இந்நூல் அம்பலமாக்கி சாதாரண மக்கள் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்துள்ளது. ஒரு வெகுஜனப் போராட்டத்தின் வெற்றியும் தோல்வியும் மக்களுக்கு ஆயிரம் அனுபவங்களைக் கற்றுத்தரவல்ல தாகும்.




ஜெயலலிதாவின் பாசிச ஆட்சி 12 லட்சம் அரச ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளையும் போராட்டத்தையும் முறியடித்திருப்பது ஒரு தற்காலிகத் தோல்வியேயாகும் தோல்வி தான் வெற்றியின் தாய் எனக் கொண்டு உறுதியான சரியான அரசியல் மார்க்கத்தில் அரச ஊழியர் ஆசிரியர்கள் ஏனைய உழைக்கும் மக்கள் பிரிவினருடன் ஐக்கியப்பட்டு எழுந்து நின்றால் பாசிசப் பிசாசாகி நிற்கும் ஜெயலலிதாவைத் தூசாகத் தூக்கி வீச முடியும். எத்தகைய பாசிச சட்டங்களுக்கும் முகம் கொடுக்க முடியும். அத்தகைய நம்பிக்கையை பாசிச ஜெயாவை ஜெயிக்க முடியாது? என்னும் நூலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மக்களுக்குத் தருகின்றன.

# வில்லங்கமான விளம்பரங்கள்

எங்கட தொலைக்காட்சிகள் பாருங்கோ. சரியான மோசம். இந்திய மசாலாச் சினிமாவின்ர ஒரு துண்டு தன்னும் இல்லாம ஒரு நிகழ்ச்சி செய்ய இவைக்கு ஏலாது. போதாக்குறைக்கு மெகா தொடர் எண்டு போட்டு கழுத்தறுக்கிறாங்கள். அதுகள் பாருங்கோ நல்ல நாடகமும் இல்லை. நல்ல சினிமாவும் இல்லை. முழுக்க முழுக்க பொம்பிளையை சீலைக்கும் தாலிக்கும் சொத்துக்கும் ஆசைப்பட்ட ஆக்களாக் காட்டிற கடைக்கோடிப் பிற்போக்குத் தனம் பாருங்கோ.

எட அதுதான் நடக்குதெண்டு பார்த்தால். அதுகளுக்கு இடையில போற விளம்பரங்களைப் பார்த்தா. ஒரே சிரச்சேதம் பாருங்கோ! உதப் பாக்கிற எங்கட பிள்ளையளும். எங்கட சனங்களும் நாளைக்கு தாங்கள் ஆர் எண்டதயே மறந்து போகுங்கள். எவ்வளவு கொடூரம் பாருங்கோ நடக்குது.

உதில வாற விளம்பரங்கள் எண்டால் வைரமுத்து சொன்ன மாதிரி "விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலக்கிற" விசயம் பாருங்கோ. உதச் செய்யிறவைக்கு பணம் பண்ணுறதத் தவிர வேற நோக்கம் ஒண்டும் கிடையாது. ஆனால் முந்தி எங்கட சில்லையூர். கவலூர். ரரா அண்ணர். என்டெல்லாம் விளம்பரத்துறை ஜாம்பவான்கள் இருந்தாங்கள். அவங்களுக்கு பல்வேறு மொழி அறிவு இருந்தது. கலாசாரம். பண்பாடு பற்றிய அக்கறை இருந்தது. விளம்பரத்தை ஒரு கலையாக. விஞ்ஞானமாகப் பார்த்தாங்கள்.

இப்ப அதெல்லாம் கெட்டு ஒழிந்து உலக மயமாக்கலுக்க அகப்பட்டுப் போய் என்ன புடலங்காய் எண்டாலும் வித்துப் போட்டுப் போற விளம்பரங்கள் தான் வெளிவருகுது பாருங்கோ!

கிட்டடியில பாருங்கோ ஒரு விளம்பரம் போடத் தொடங்கினவை. வலு முஸ்பாத்தியான கதை. ஆரோ பிற நாட்டுக்காரர் இலங்கைக்கு மாபிள் தரை ஓடு அனுப்புகினமாம். இந்தியா. கொரியா. தாய்வான் எண்டு வையுங்கோவன். அவையள் 'குவாளிற்றி கொன்றோலர்மாராம். தங்கட தரை ஓடுகளப் பரிசீலித்து 'குறைஞ்ச தரம் உள்ளத இலங்கைக்கு அனுப்புங்கோ' எண்டு ஓடர் போடுகினம்.

அப்ப எங்கட விளம்பரகாரர் சொல்லுறார். "இப்பிடி தரக்குறைவான மாபிள் தரை ஓடுகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப் படுகின்றன. ஆனால் எங்கட அப்பிடி இல்லை...." என்றார்.

உதப்பார்த்தா சுய புத்தி உள்ளதுகளுக்கு சிரிப்பு வரத்தானே செய்யும். உங்க புத்தளம். லுணுவில பக்கத்தில போய்ப்பார்த்த உந்த வெண்களி மட்பாண்டத் தொழிற்சாலைகள். கைத்தொழிற் பேட்டைகள் நிறைய இருக்கு. அதுகளில எங்கட உள்ளூர் பெடி பெட்டையள்தான் இரவும் பகலும் வேலை செய்யுதுகள்.

உதுகள நடத்துறது ஆர் தெரியுமோ! உவைதான். உந்தப் பலதேசியக் கொம்பனி முதலாளிமார். கொறியன். தாய்வான். ஜப்பான் ஆட்கள் செய்யிற சமான்களுக்கு மேட் இன் ...... என்று தங்கட நாட்டு சீல் அடிச்சுப் போட்டு நல்லதுகள புறநாட்டு உலகச் சந்தையளுக்கு அனுப்புவாங்கள். அது 'எக்ஸ்போட்' குவாலிற்றி பாருங்கோ! அங்கின சின்ன சின்ன மிஸ்ரேக் உள்ளதுகள மெல்லமா எங்கட உள்ளூர் முதலாளிமாருக்கு வலு மலிவாய் குடுத்துப் போடுவாங்கள். ஆனால் இஞ்ச விக்கிர எக்ஸ்போட் குவாலிற்றி எண்டால் அது விலை கூட. அதையும் இறக்குமதி செய்தது எண்டுதான் சொல்லுவாங்கள்.

இந்த லட்சணத்தில். நாளைக்கு எங்கட பள்ளிக்கூட பிள்ளைகளின்ர சோதனைப் பேப்பரில "இலங்கையில் வெண்களி- மட்பாண்ட உற்பத்தி நடைபெறும் இடங்கள் எவை? என்டு ஒரு கேள்வி கேட்டால் "அப்படி ஒன்டும் இலங்கையில இல்லை" எண்டுதான் பிள்ளை எழுதிப்போட்டு வரும்.

சரி அதுதான் தேசிய வளம் பற்றி சொல்ல வெக்கம். எங்களுக்கு உள்நாட்டு உற்பத்தி என்டு சொல்லுறத விட அமெரிக்காவில இருந்து கொண்டந்தது' எண்டாத்தானே பெருமை. உதில தங்கட ரெத்தத்தையும். வியர்வையையும் சிந்தி. இரவு பகலா ஒரு கொஞ்சக் காசுக்காக எந்தவித வசதியும் இல்லாம. நோய் துன்பப்பட்டு பாடுபடுகிற எங்கட தொழிலாளரை எண்டாலும் நினைச்சுப் பாத்தாங்களே!

உப்பிடியே போனா எப்பிடி எங்கட மண். எங்கட மக்கள் உருப்பட முடியும்.

உதவிட இன்னுமொரு முசுப்பாத்தி பாருங்கோ! காங்கேசன்துறையில் சீமெந்துப் பற்றி இருந்த அடையாளம் தெரியாமல் எல்லாம் காடுமண்டிப் போய்க் கிடக்குது. உவங்கள் இப்பவும் 'காங்கேசன் சீமெந்து' என்டு சொல்லி ஏதோ சீமெந்து விக்கிறாங்கள் பாருங்கோ! அடுத்தமுறை அந்த வில்லங்கத்தை சொல்லுறன் சரிதானே!

- பட்டணத்துகள் -

# கவிஞர் சிவசேகரத்தின் கவிதை நூல்

கவிஞர் சி.சிவசேகரத்தின் மற்றொரு கவிதை நூலான 'இன்னொன்றைப் பற்றி' தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாக வெளிவந்துள்ளது. இக் கவிதை நூலிலே மொத்தம் இருபத்தியேழு கவிதைகள் அடங்கியுள்ளன அண்மை ஒரிரு வருடங்களில் எழுதப்பட்டு தாயகம் உட்பட வேறும் சஞ்சிகைகளில் வெளிவந்த இக் கவிதைகாள் மக்கள் இலக்கியப் பரப்பிற்கு வலுச்சேர்ப்பனவாக அமைந்துள்ளன. கவிஞர் சி.சிவசேகரத்தின் கவிதைகள் தனித்துவமானவை என்பது விமர்சகர்களது கருத்து. உள்ளடக்கத்தில் உண்மை பேசுவதும் உரை வீச்சில் அரசியல் சொல்வதும் எதிர் நிலைகளை ஓங்கி அறைவதும் அவரது கவிதைகளில் வெளிப்படும் சிறப்புகளாகும். அவரது கவிதைகளை மனத்தளவு வாசிப்பதை விட உரத்து ஓசைபட வாசித்தால் அதில் அர்த்தங்களும் ஆக்கிரோசங்களும் வெளிப்படுவதை தரிசிக்க முடியும். அந்தளவுக்கு ஆட்கொள்ளும் ஆற்றல் கவிஞர் சிவசேகரத்தின் கவிதைகளுக்கு உண்டு என்பதை துணிந்து கூறலாம். அத்தகைய கவிதை நூல் வரிசையிலேயே இன்னொன்றைப் பற்றி வெளிவந்திருக்கின்றது.




- குகன் -

## கிழக்கில்....

1ம் பக்க தொடர்ச்சி..

பதிலுக்குப் பழிவாங்கும் நோக்கில் தமிழர்கள் கொல்லப்படுவதும் இனமோதல்கள் இடம் பெறுவதும் தொடரும் கிழக்கின் அவலங்களாகும். அண்மையில் திருகோணமலை மாவட்டத்திலும் சம்மாந்துறையிலும் இடம் பெற்ற நான்கு முஸ்லீம்களின் கொலைகள் சமாதான சூழலைக் குழப்பும் திட்டமிட்ட கைங்கரியம் என்பது தெளிவானதாகும்.

ஒரு முஸ்லீம் கொலை செய்யப்பட்ட வுடன் புலிகள் தான் எனப்பரப்பி தமிழ் விரோதத்தைத் தூண்டிவிடுவது. அதேபோன்று ஒரு தமிழர் கொல்லப் பட்டவுடன் இது ஜிகாத் அல்லது ஓசமா இயக்கத்தின் வேலை என முஸ்லீம் விரோதத்தை தூண்டுவது கிழக்கில் உண்மைநிலை அல்லது அதனைக் கண்டறியது என்பதற்கப்பால் விஷமத்தனமான போக்காக மாறிவிட்டது.

உண்மையாகவே யுத்தத்தை மீளவும் அரங்கிற்குக் கொண்டுவர பேரினவாத யுத்த வெறியர்கள் கிழக்கை இலக்கு வைத்து செயல்படுகிறார்கள்.அவ்வாறே இன்றைய சமாதான சூழ தமக்கு சாதகமற்று இருப்பதால் இந்திய மேலாதிக்க சக்திகள் தமது கையாட்கள் மூலம் தமிழ்–முஸ்லீம் மோதலுக்கு வழிவகுத்து கிழக்கிலிருந்து யுத்தத் தீய மூட்ட முற்படுகின்றனர். இப் பெரும் அபாயமான சூழலைக் கெண்டு வந்து விடப்போகிறது. இவ்விடயத்தில் விடுதலைப் புலிகள் மிகுந்த நிதானத் தோடும் தூரநோக்குடனும் நடந்து கொள்ளல் வேண்டும். அவ்வாறே முஸ்லீம் மக்களும் இளைஞர்களும் மிகவும் பொறுமையாக உண்மையான எதிரியார்? நண்பன்? யார் என்பதை எடைபோட்டு நிற்பது அவசியம். எவ்வளவுக்குச் சென்றாலும் கிழக்கின் மூவின மக்களும் என்றென்றைக்கும் ஒருவரை ஒருவர் நிராகரித்து பழிக்குப்பழி வாங்கி யுத்தத்திற்குள் வாழ முடியாது. எனவே ஒருவரை ஒருவர் ஏற்று புரிந்து கொண்டு விட்டுக்கொடுப்புடனும் மனிதர்கள் என்ற அடிப்படையிலும் சாதாரண மக்கள் வாழ முற்படல் வேண்டும். பேரினவாதிகளின் சூழ்ச்சிகளுக்காக அல்லது சொந்த இன மதவாதிகளின் சுயதேவைகள் ஈடேற்றத்திற்காக உழைக்கும் மூவின மக்களும் தங்களைப் பலிக்கடாக் களாக்கி கொள்ளாதிருப்பதே இன்றைய தேவையாகும்.

## தாழ்த்தப் பட்டோர்

8ம் பக்க தொடர்ச்சி..

செய்து விட்டு தமது சாதியாதிக்க வெறியைக் வெளிக் காட்டி தாழ்த்தப்பட்ட மக்கள் தேர் இழுப்பதைத் தடுத்தனர். இதனை எதிர்த்து அம்மக்கள் தமது உரிமையை நிலைநாட்டமுற்படவே மோதல் நிலை உருவாகியதால் மேற்படி தேர் திருவிழா நிறுத்தப்பட்டது. சாதியத்தை இன்றும் ஒரு அமைப்பாகப் பாதுகாத்து வருவதில் உயர் அரசாங்க அதிகாரிகள் தொட்டு கிராமமட்ட ஆட்சித் தலைவர்கள் மும்மரமாகவே இருந்து வருகிறார்கள். பொலீஸ் படையினர் சாதிவெறியர்களின் கையாட்களாகவே செயல்படுகின்றனர் இப்படத்திலே தாழ்த்தப்பட்ட(தலித்) மக்கள் இழுக்கத்தடுக்கப்பட்ட தேரினையும் பொலீஸ் படைதடைகள் போட்டுதடுத்து நிற்பதையும் காட்டுகின்றது.

## கருவளத்தை

4ம் பக்க தொடர்ச்சி.

அறிவில்லாமலே அவர்களுக்கு அறிவிக்காமலே கருக்கலைப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தெரியப்படுத்தாது கருக்கலைப்பு மருந்துகள் கொடுக்கபட்டுள்ளன.

எனவே பெருந்தோட்ட மனிதவள நிதியத்தை நிராகரித்து அதனை கலைத்து விட்டு பெருந்தோட்ட சுகாதாரத்திற்கான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கிய தேசிய சுகாதாரத் திட்டத்திற்குள் பெருந்தோட்ட சுகாதாரத்தை இணைக்க வேண்டும்.

ஏனெனில் மலையக சமூகத்தின் சுகாதாரத்திற்கு பொறுப்பான நிதியம் அச்சமூகத்தையே அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்போது எவ்வாறு அதனை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வது?

## ஈராக்கில் நாளாந்தம்

10ம் பக்க தொடர்ச்சி..

பிரித்தானிய புதிய தொழிற் கட்சி அதன் தலைவரும் நாட்டின் பிரதமருமான பிளெயரைத் தொடர்ந்தும் தலைமையில் வைத்திருக்கும் என்பதில் மிகவும் தங்கியுள்ளது. சீரழிந்து போன தொழிற் கட்சி இன்று தகைமைவாய்ந்த தலைமையில்லாது தடுமாறுகிறது. எனவே குறுகிய காலத்தில் புதிய தொழிற் கட்சி ஆட்சிக்குப் பதிலாக அதே வலதுசாரிக் கொள்கைகளை புடைய பழமை வாதிகள் வரலாம்.

அமெரிக்காவில் ஜோஜ் புஷ் ஆட்சி மாறுவதால் அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொள்கைமாறப் போவதில்லை. உலக மக்களின் விடுதலை அன்று போல இன்று நாளையும் அவர்களது போராட்டத்திலேயே தங்கியிருக்கும். அப் போராட்டங்கள் தொடரும் வரை ஏகாதிபத்தியம் தன்னை மேலும் மேலும் நெருக்கடிகட்குள் விழுத்திக் கொண்டே இருக்கும்.

## யாழ் குடாநாட்டு

7ம் பக்க தொடர்ச்சி...

சாதியினருக்கே உரிய தொழில் என்ற நியதிமாறிச் சகலரும் இத்தொழில்களை மேற்கொள்வர்.

வேறொரு காரியத்தை நடைமுறைப் படுத்தவும் செயல்திட்டம் வகுக்கப்பட வேண்டும். உயரவளர்ந்த பனை. தென்னை மரங்களின் உச்சிகளை அடைய மின் ஏற்றப்பொறிகள் உருவாக்கப்படவேண்டும். சேகரிக்கப்படும். பாத்திரங்களுள் பூச்சிகளும். புழுக்களும் வேறு உயிரினங்களும் புகுந்து அசுத்தப்படுத்துவதைத் தடுக்க ஓரளவு வாய்ப்புறத்தை மூடியபடி வைக்கும் வகையிலான பாத்திரங்களை பாவிக்க வேண்டும். குழாயின் வெளி விட்டம் சுருக்கக்கூடிய விதத்தில் அமைய வேண்டும். பாளையிலிருந்து வெகு குறைந்த நேரத்தில் சாறு வெளிப்படும் ஏற்பாடு செய்தல் அவசியம். ஒரே நாளில் பலமுறை சாறு கசியும் முறை காணப் பட்டால் கூடிய அளவு சாறு கிடைக்கும். இதனால் தொழிலில் விருத்தி காணலாம்.

**மீன்வளம் :**

வடக்குப் பிரதேச மக்கள் மீன்வளத்தை சூழவுள்ள கடலிலிருந்தே பெறுகின்றனர். இதனைவிட நன்னீரில் வாழக்கூடிய வகைகளை விருத்தி செய்ய வேண்டும். வீடுகளிலும் சமையலறைக் கழிவுகளை உணவாக உட்கொண்டு வாழும் வகை இன மீன்களை விருத்தி செய்தோமாயின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம். இதனை உட்கொள்வதால் நாம் புரதச்சத்துக் குறைப்பாட்டை நிவர்த்தி செய்துகொள்ள இயலும்.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 10 செப்டம்பர் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 61

## தோழர் சண்முகதாசனின் 10வது ஆண்டுநினைவு

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் நா.சண்முகதாசனின் 10வது ஆண்டு நினைவுக் கூட்டம் கடந்த 17-08-2003 அன்று கொழும்பில் இடம் பெற்றது. பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெற்ற நீகழ்வில் நினைவுப் பேருரையை யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் நிகழ்த்தினார். 'சண்முகதாசன் கட்டுரைகள்' நூலும் வெளியிடப்பட்டது. மேலும் தோழர்கள் சி.கா. செந்திவேல். அஜித் ரூபசிங்க. இ.தம்பையா டாக்டர் எம்.எஸ்.தம்பிராஜா தி. சச்சிதானந்தம் ஆகியோரும் உரையாற்றினர்.



# வடக்கு கிழக்கைப் பிரிக்க அரசியல் சதி!

## ஜனாதிபதியின் முயற்சி மூர்க்கத்தனமானது!!

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் முஸ்லீம்களினதும் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களாகும் இது ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்றைய யதார்த்தமுமாகும் 1987 ல் உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இணைந்த வடக்கு கிழக்குற்கு என ஒரு மாகாணசபை உருவாக்கப்பட்டது. இன்றுவரை இணைக்கப்பட்ட இம் மாகாண நிர்வாகத்தின் கீழேயே வடக்கு கிழக்கு நிர்வகிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்போது இடைக்கால நிர்வாக கட்டமைப்புக்கான ஆலோசனை களும் பேச்சுவார்த்தையும் இணைந்த வடக்கு கிழக்கிற்கான தொன்றாகவே முன்வைக்கப்படுகிறது இதில் தமிழர்கள் முஸ்லீம்கள் மட்டுமன்றி நீண்டகால குடியேற்றத்திற்கு உட்பட்ட சிங்களவர்கள் என்போருக்கான பிரதிநிதித்துவம் என்பது திறந்த மனதுடனான பேச்சுவார்த்தையின் மூலமே பொசப்பட வேண்டியதாகும் இதில் குறுகிய தேசியவாத நிலைப்பாடு பின்பற்றப்படக் கூடாது ஏற்கனவே வடக்கு கிழக்கில் பேரினவாதத்தின் திட்டமிட்ட ஈகங்கரியங்களால் இன விகிதாசார மாற்றங்கள் நடந்து அவற்றின் காரணமாக விரோத குரோதங்களும் மோதல்களும் ஏற்பட்டன இப்போது குறிப்பாக கிழக்கில் தமிழ் முஸ்லீம் மோதலுக்கு அடிக்கடி வழி ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்ப் பேரினவாத ஆதிக்கம் என முஸ்லீங்கள் மத்தியிலும் முஸ்லீம் குறுந்தேசிய வழி நின்று கிழக்கில் ஆதிக்கம் பெற நிற்பதாகத் தமிழர்களிடையோயும் எதிர்ப்பிரசாரங்கள் இருந்து வருகின்றன அதனால் அடிக்கடி கொலைகள் ஆட்கடத்தல் கொள்ளை பரஸ்பரம் இரு தரப்பிலும் பழிவாங்கள் என்ற பெயரில் நடாத்தப்பட்டும் வருகின்றன. இவை இன்றைய சமாதனப் பேச்சுவார்த்தைக்கும் அரசியல் தீர்வு நோக்கிய நகர்வுக்கும் பெரும் சவாலாகவே உள்ளது.

இந்த நிலையில் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்துக் கொள்ள ஜனாதிபதி முன்னின்று முயற்சி செய்து வருகிறார் இதற்குப்பின்னால் ஒரு பெரும் அரசியல் சதி பின்னப்பட்டுள்ளமையை அடையாளம் காணமுடிகிறது. வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சித் தீர்வு காணப்படு வதை நிர்மூலமாக்கு வது அச் சதியின் அடிப்படையாகும். இதனை நிறைவேற்ற கிழக்கின் சில முஸ்லீம் தலைமைகள் பயன்படுத்தப்படுகின்றன. கிழக்கில் தமிழ் முஸ்லீம் இரத்த ஆறு ஓடுவதற்கு இந்த வடக்கு கிழக்குப்பிரிப்பு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதையே ஜனாதிபதியும் அவருக்குப் பின்னால் இருக்கும் அரசியல் சதிகாரர்களும் எதிர்பார்க்கின்றனர். இதனை முறியடிக்க ஒரே வழி வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் தமது நீண்டகால உயவை உடைக்காத விதமாக நடந்து கொள்வதேயாகும் பேரினவாதிகளின் சூழ்ச்சிக்குப் பலியாகாமலும் தமது சொந்தத் தலைமைகளின் சுய நல வேட்கைகளுக்கு இரையாகாமலும் வடக்கு கிழக்கு இணைந்த பாரம்பரிய பிரதேசத்தில் சுயாட்சியையுட் சமத்து வத்தையும் அரசியல் தீர்வாகப் பெற தமிழ் முஸ்லீம் மக்கள் ஐக்கியப்பட்டு நிற்பது அவசியமாகும். இதை விடுத்து பேரினவாத அரசுயந்திரத்தின் பொலீஸ் இராணுவப் படைகளில் இணைவதோ அதற்கும் அப்பால் ஆயுதம் ஏந்த நிற்பதோ தமிழ் முஸ்லீம் உறவை வளர்க்க உதவமாட்டாது அவை குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரை கொடுப்பதாகவே அமையும்.

# அமெரிக்காவின் தலையீடு அதிகரிக்கிறது

சமாதன முயற்சிகள் என்றபேரில் பாலஸ்தின மக்களின் நாளாந்த உயரழிவிற்கும் வழிவகுத்தது போன்று இலங்கையின் சமாதன முயற்சிகளிறூடே அமெரிக்கா அதன் ஏகாதிபத்திய அக்கறைகளை நிலைநாட்டிக் கொள்ள தமிழ்மக்களின் உண்மையான சுயநிர்ணய உரிமையை மறுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். ஏனெனில் இலங்கை சமாதான முயற்சிகளை நேரடியாக வழிநடத்தும் சக்தியாக அமெரிக்கா மாறிவருகிறது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் கொலைகளுக்கும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளுக்கும் எதிராக இலங்கையில் இருக்கும் அமெரிக்க தூதரகம் கண்டனங்களை தெரிவித்த நிலையை மாறி இன்று வெள்ளை மாளிகை அதிகாரிகளே அக்கடமைகளையும்

சமாதான முயற்சிகள் பற்றிய அபிப்பிராயங்களையும் நேரடியாக தெரிவித்து வருகின்றனர்

தென்னாசியா விவகாரங்களுக்கு பொறுப்பாக இயங்கும் வெள்ளை மாளிகை பிரிவில் இலங்கையின் விவகாரங்கள் முக்கியமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஊடகங்களுக்கான அறிக்கைகளில் நாளாந்தம் இலங்கை பறறிய அபிப்பிராயங்களும் தகவல்களும் தெரிவிக்கப்படும் நிலையை ஏற்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறுவதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று ஆணையிட்டு மிரட்டும் தோரணையிலும் அமெரிக்கா கருத்துக்களை வெளியிட்டுவருகிறது.

பாலஸ்தின சமாதான முயற்சிகளில் அமெரிக்க நேரடியாக தலையிட்டு ஏறக்குறைய முழுக்கட்டுப்பாடுகளையும் எடுத்துக் கொண்டது. அதனால் பாலஸ்தீன மக்களுக்கு எதிராகவும்



அவர்களை அடக்கியொடுக்கும் இஸ்ரேலிய சியோனிசத்திற்கு ஆதரவாகவும் அமெரிக்க செயற்பட்டு வருகிறது. யசிர் அரபாத்தின் நிலையை பலவினப்படுத்தி பிரதமர் என்ற இன்னொரு பதவியையும் ஏற்படுத்தியுள்ளது. இவை அமெரிக்கா எடுத்த வெளிப்படையான நடவடிக்கைகளாகும்.

இலங்கையில் ச[illegible]னம் நிலைநாட்டப் பட வேண்டும் என்று அமெரிக்கா கூறுவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சமாதானத்தையே குறிப்பதை நாம் மறந்து விடலாகாது. லைபீரிய மக்களின் எழுச்சிப் போராட்டத்தில் அமெரிக்கா தலையிட்டுள்ளவிதமும் எமக்கு வெளிப்படையாக தெரியும் விடையமாகும்.

எனவே இலங்கையின் அனைத்து மக்களும் குறிப்பாக தமிழ்மக்களும் சமாதானமுயற்சிகளை எமது நாட்டுக்குரியதாக வரையறுத்து வைத்துக் கொள்ளும் அளவிற்கே அமெரிக்க ஏகாதிபத்திய தலையீட்டை தவிர்க்க முடியும்.

அத்துடன் இலங்கையின் சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் இந்திய ஆளும்வர்க்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளும் அமெரிக்க ஏகாதிபத்திய நலனுக்கு உதவுவதாக இருக்கிறது. அதாவது இலங்கையில் அமெரிக்கா தலையிடுவது இப்பிராந்திய அமைதிக்கு பங்கமாகவே இருக்கும். இந்திய நாட்டிற்கும் மக்களுக்கும் எதிரானதாகவே இருக்கும்.

அதனை தடுத்து நிறுத்த வேண்டுமானால் இலங்கையின் சமாதன முயற்சிகளுக்கு ஆதரவாக இல்லாவிட்டாலும் அவற்றை இந்திய ஆளும்வர்க்கம் குழப்பாமல் இருப்பது அவசியம். இல்லாவிட்டால் இலங்கை மட்டுமல்ல இந்தியாவும் அமெரிக்க ஏகாதிபத்திய பிடிக்குள் இறுகுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

### மேல் கொத்மலை....

1ம் பக்க தொடர்ச்சி..

அவ்வப்போதுமக்கள் கேள்விக்குட்படுத்தி வருகின்றனர் .

அவரது பாட்டனும் தோட்டத் தொழிலாளர்களின் பல போராட்டங்களை சமரசம் செய்தவர்களாகையால் மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்களின் உணர்வை மழுங்கடிக்கும் நடவடிக்கைகளில் இறங்கி அமைச்சர் ஆறுமுகன் பேரினவாதிகளுடன் வெளிநாட்டு முதலாளிகளுடனும் சமரசம் செய்து கொள்ள மாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

அதனாலேயே மேல்கொத்மலை திட்டத்தை முற்றாக கைவிடக் கோரும் மக்கள் ஆறுமுகனை சந்தேகத்துடன் பார்த்து வருகின்றனர் இது பற்றிய உண்மை நிலை விரைவில் வெளிவரவே செய்யும்.

### ஜனாதிபதியும்..

முதலாம் பக்க தொடர்ச்சி..

காலங்கள் போன்று இவ்விரு தரப்பினரும் மாறி மாறி தீர்வுக்கு முயல்வதும் அதனைக் குழப்புவதுமான பேரினவாதப் பாரம் பரியத்தில் இத்தடவையும் செல்வார்களேயானால் அதன் எதிர்விளைவு மிகப்பயங்கரமானதாகவே அமைந்து கொள்ளும்.

ஜனாதிபதியும் பிரதமரும் தமது உயர் ஆளும் வர்க்க ஆட்சி அதிகாரப் பசியைத்தீர்த்துக் கொள்ளவும் தாம் அரவணைத்து நிற்கும் அந்நிய ஆதிக்க சக்திகளின் தேவைகளை நிறைவேற்றவும் தூர நோக்கற்று செயல்படுவார்களேயானால் அழிவுகளை மட்டுமே காணமுடியும். இன்றை சந்தப்பத்தைக் கையிழந்தால் நாடும் மக்களும் மீண்டுமொரு யுத்த சூழலுக்குள் தாள்ளப்படுவதுடன் அந்நிய மேலாதிக்க சக்திகளின் ராணுவத் தலையீட்டிற்கும் இரையாகிக் கொள்ள வேண்டியே ஏற்படும்.

எனவே ஜனாதிபதியும் பிரதமரும் இந்நாட்டின் ஏகப் பெரும் பான்மையான தமிழ் சிங்கள முஸ்லீம் மலையக மக்களின் அரசியல் தீர்வு சமாதான சூழலுக்கான விருப்பத்தை நிறைவேற்றப் போகிறார்களா? அன்றிதமது உயர் வர்க்க மேட்டுக் குடி ஆளும் வர்க்க விருப்பங்களை முன்னெடுக்கப் போகிறார்களா? என்பதை மக்கள் விரைவில் கண்டுகொள்ளவே போகிறார்கள்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வெளி நாட்டுப்பயணங்கள்

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பதவியேற்ற இருபது மாதங்களில் ஆகக் கூடிய வெளிநாட்டுப் பயனங்களை மேற்கொண்ட அரசாங்கத் தலைவர் என்ற கவனத்தைப் பெற்றுள்ளார் அவரது பயனங்கள் வெறும் பயனங்கள் அல்ல. நன்கு திட்டமிடப்பட்டவையும் உள்ளார்நத நோக்கங்களையும் உரிய இலக்குகளையும் கொண்[illegible]வையாகும்.

பத்தொன்பது வருட கொடிய யுத்தத்திற்குப் பின் புலிகள் இயக்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் பிரதமர் தொடர்ச்சியாக தேர்தெடுக்கப்பட்ட நாடுகளுக்கு அரசு முறைப்பயணங்களை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் பரஸ்பர புரிந்துணர்வுகள் ஒப்பந்தங்கள் என்பனவற்றைச் செய்து வந்துள்ளார். சமாதானம். ஜனநாயகம். நாட்டின் அபிவிருத்தி. பாதுகாப்பு என்பனவற்றுக்கான அரசாங்கத்தின் நோக்கங்களை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்து அவற்றுக்கு அவர்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவதே தமது நோக்கம் என அரசாங்க சார்பு ஊடகங்கள் இடையிறாத பிரசாரங்களை மேற்கொண்டும் வருகின்றன. ஆனால் இவற்றில் எந்தள்வுக்கு உண்மைகள் உள்ளடங்கியுள்ளன என்பது விரித்து நோக்கப்பட வேண்டியவையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் அரசாங்கம் அமைக்கப்பட முன்பே அவர்களுக்கான ஆட்சி முறை நிகழ்ச்சி நிரலை உள்நாட்டு வெளிநாட்டு பெரு முதலாளிகளாலும் அவர்களது முகவர்களாலும் தயாரிக்கப்பட்டு விட்டது. அதில் முதன்மையானது இலங்கையின் பொருலாதார அரசியல் சமூக பண்பாட்டுக் கட்டமைப்பை முற்று முழுதாக ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு ஏற்ற வழறாக மாற்றியமைப்பது என்பதாகும் ஏற்கனவே 1977 க்குப் பின் இலங்கை திறந்த பொருளாதாரம்இ தனியார்மயம் என்பனவற்றுக்குள் இழுத்துச் செல்லப்பட்டது. இதற்கு ஜே.ஆர் வழிவகுத்து தலைமை தாங்கினார். இப்பொழுது அவரது மருமகனான ரணில் திறந்த பொருளாதாரம். தனியார் மயம் என்பனவற்றை உலகமயமாதலுடன் இணைத்து ஒவ்வொரு முணையிலும் அவற்றை விரிவுபடுத்துவதில் முன் நிற்கின்றார்.

இதன் அடிப்படையிலேயே பிரதமரின் வெளிநாட்டுப்பயணங்கள் இடம் பெற்று வருகின்றன. தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்ற பாதையில் தான் பயணிப்பதாகச் சமாதானத் தோற்றம் காட்டிக் கொண்டே பிரதமரால் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்ள முடிகிறது. ஆனால் அரசியல் தீர்வு இழுத்தடிக்கப் பட்டே வருகிறது. முன்பு யுத்தத்தின் மறைவில் செய்யப்பட்ட திறந்த பொருளாதாரம். தனியார்மயத்தை இப்போது ரணில் விக்கிரமசிங்கா சமாதானத்தின் பெயரால் முழுமைப் படுத்த வேகமாக மு[illegible] நின்று வருகிறார்.

அவரது வெளிநாட்டுப் பயணங்களின் போது வலியுறுத்தும் விடயம் வெளிநாட்டு மூலதனங்களை இலங்கைக்கு கொண்டு வருமாறு விடுக்கப்படும் அழைப்பாகும். பல்தேசியக் கம்பனிகளை நம்பிக்கையோடு இங்கு அனுப்பி வைக்குமாறு அவர் பயணம் செய்த நாடுகளின் அரசாங்கங்களைப் பணிவன் புடன் கேட்டுவருகிறார். அண்மையில் சென்னை நகரில் பிரதமர் ஆற்றிய "மிலேனியம் உரை" யானது அவர் எந்தத்திசையில் இலங்கையை நகர்த்திச் செல்ல நிற்கிறார் என்பதை வெளிப்படுத்தியது.

பிரதமர் ரணில் எவ்வளவிற்கு சமாதான வேடமணிந்து நின்றாலும் பாராளுமன்ற ஜனநாயகம் பற்றி புகழ் பாடினாலும் அபிவிருத்தி சுபீட்சம் பற்றி நீட்டி வாசித்தாலும் அடிப்படையில் அவரும் அவரது ஆட்சியும் இலங்கையை மறுகொலனியாக்கம் செய்து நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்தியத் தேச்சில்லுடன் இணைப்பதையே நோக்காகக் கோண்டதாகும். அதனையே அவரது வெளிநாட்டுப் பயணங்களின் சொல்லும் செயலும் நமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன.

இதனைச் செய்வதற்கும் முற்றிலும் முன்னெடுப்பதற்கும் ரணில் விக்கிரமசிங்கா தகுதியுடையவர் என்பதாலேயே உள்நாட்டு பெரு முதலாளிகளும் அந்நிய பல்தேசிய கம்பனிகளும் உலகவங்கி சர்வதேச நாணய நிதியக் கயிறுகளைக் கையில் வைத்திருப் போரும் அவரை பதவிக்குக் கொண்டு வந்தனர். ரணில் இலங்கையின் உயர்வர்க்க சாதிய மேட்டுக் குடி வழி வந்த ஒருவர். அவரது மாமனாரான ஜே.ஆர். தனது ஆட்சிக் காலத்திலேயே ரணிலுக்குப் பயிற்சி கொடுத்து வருங்கால வாரிசாக வளர்த்தார். ஆதலால் அவர் தனது மூதாதையர்களின் அடிச்சுவட்டில் சென்று கொண்டிருப்பது வியப்பல்ல. இதனைப் புரிந்து மாற்றுப்பாதையில் சிந்திப்பதும் பயணிப்பதும் தான் உழைக்கு வர்க்க மக்கள் முன் உள்ள பணியாகும்

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A. K. சிறில் சி. பெரேரா மவத்தை. கொழும்பு 13.

படிப்பகம்